# ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

# செயற்பாட்டு அறிக்கை

# 2018


1 வது மாடி,

செத்சிறிபாய கட்டம் II,

பத்தரமுல்ல.

தொலைபேசி : 011 2 887 349 - 51

மின்னஞ்சல் : msesecretary@sltnet.lk

# பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று | | iv |
| அமைச்சின் செயற்பாடுகள் | | v |
| அமைச்சின் கீழுள்ள பிரிவுகள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் | | vi |
| அமைச்சின் அமைப்புக் கட்டமைப்பு | | vii |
| அறிமுகம் | | Viii - x |
| பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் - 2018 | | |
| 01 | சமூக வலுவூட்டல் பிரிவு | 1 – 23 |
| 1.1 | நிர்வாகப் பிரிவு | |
| 1.2 | கணக்குகள் பிரிவு | |
| 1.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 1.4 | ஆய்வு, புள்ளிவிபரம் மற்றும் திட்டமிடல் பிரிவு | |
| 1.5 | மனித வள அபிவிருத்தி மற்றும் விசேடக் கருத்திட்டப் பிரிவு | |
| 1.6 | சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு | |
| 02 | கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 24 – 27 |
| 03 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 28 – 52 |
| 04 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | 53 – 65 |
| 05 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 66 – 70 |
| 06 | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் பிரிவு | 71 – 91 |
| 07 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 92 - 101 |
| 08 | விவசாயத் துறையினை நவீனமயமாக்கும் கருத்திட்டம் | 102 -104 |
| 09 | சமூக சேவைகள் திணைக்களம் | 105 - 113 |

# தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற உரிமைகள் பாதுகாக்கப்பட்ட நாடாக இலங்கையினைத் திகழச் செய்தல்

# பணிக்கூற்று

வறிய மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல், சமூகப் பணிக் கல்வியின் தொழில்வாண்மையினை மேம்படுததுதல், முறைசாரா துறை ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல், கிராமிய அபிவிருத்தியில் சமுதாயப் பங்களிப்பினை பலப்படுத்துதல், முதியோர்கள், அங்கவீனமுற்ற நபர்களினை உள்ளடக்கிய ஓரங்கட்டப்பட்ட பிரிவினருக்கு சம உரிமைகளை உறுதிப்படுத்தி நலன்களை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதி விவசாயத் துறையிலிருந்து அந்நியச் செலாவணி வருமானத்தினை அதிகரிக்கும் அதே வேளை சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரிக்கான தலைமைத்துவத்தினை வழங்குதல்.

# அமைச்சின் பணிகள்

(2018.12.28 ஆந் திகதிய 2013/33 என்ற இலக்கம் மற்றும் 2019.01.16 ஆந் திகதிய 2106/9 என்ற இலக்க அதிவிசேட சுற்றுநிருபங்களின் பிரகாரம்)

1. கிராமிய மக்கள் வாழ்க்கையினை வலுவூட்டுவதற்கான மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல் மற்றும் அவற்றினை அமுற்படுத்துவதற்கு நிதிசார் உதவிகளைத் திட்டமிடுதல்.
2. வாழ்வாதார மேம்பாட்டினூடாக கிராம மக்களின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு பொருத்தமான கருத்திட்டங்களை அமுலாக்குதல்.
3. கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளை வடிவமைத்தல்
4. கிராம பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
5. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்தல்.
6. விசேட தேவைகளைக் கொண்ட நபர்களின் பலவீனங்களை இனங்காணுதல் மற்றும் புனர்வாழ்வளித்தல்.
7. பொதுமக்கள் உதவிப் பிரேரணைத் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மீளமைத்தல் மற்றும் புதிய மறுசீரமைப்புக்களை அறிமுகங்செய்தல்.
8. காச நோயாளர், சிறுநீரக நோயாளர், தொழுநோயாளர், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் உதவிகள் வழங்குதல்.
9. குடும்ப உளவளத்துண சேவைகளை அமுற்படுத்தல்.
10. அங்கவீமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான மூலோபாயங்களை வழங்குதல்.
11. அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
12. அங்கவீனமுற்ற நபர்கள் பிரதான மக்கள் நீரோட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு இயலுமானவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களை சிறந்த மூலோபாயங்களைப் பயன்படுத்தி முன்னெடுத்தல் மற்றும் அவற்றினை செயலாக்குவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு விரிவுபடுத்துதல்.
13. அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயத்துடன் செயற்படுதல்.
14. அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அமுலாக்குதல்.
15. முதுமையடைந்தவர்களைப் பாதுகாத்தல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்குகொள்ளலினை மேம்படுத்துதல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
16. ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் விடயம் மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
17. பெறுமதியினைச் சேர்த்தல், ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்துதல், கைத்தொழில் பாதுகாப்பினை ஏற்படுத்தி, விவசாயிகள், மீனவர்கள், சிறு அளவிலான விவசாய முயற்சிகளை உலகப் பொருளாதாரத்திற்கு முன்வைப்பதற்கு கொள்கைகள், மூலோபாயங்களைத் திட்டமிடுதல்.
18. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியினை உள்ளடக்கி நிலைபேறான வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பில் தேவையான கொள்கைகளை அமுலாக்குதல்.
19. விவசாய அபிவிருத்தி வலயங்கள் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் தொடர்பிலான செயற்பாடுகள்.
20. விசேடமாக கிழக்கு மாகாணத்தினுள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதனூடாக சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையினை மேலோங்கச் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுலாக்குதல்.
21. இயற்கை வளங்களின் நிலைபேறான பாவனையினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுலாக்குதல்.
22. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான செயற்பாடுகள்.
23. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களைக் கண்காணித்தல்.

## அமைச்சின் கீழுள்ள பிரிவுகள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள்.

### 1. சமூக வலுவூட்டல் பிரிவு

I. நிர்வாகப் பிரிவு

II. கணக்குகள் பிரிவு

III. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

IV. மனித வள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

V. ஆய்வு, புள்ளி விபரம் மற்றும் திட்டமிடல் பிரிவு

VI. சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு

VII. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

VIII. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

IX. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

X. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை.

### 2. ஆரம்பக் கைத்தொழில் பிரிவு

I. ஆரம்பக் கைத்தொழில் பிரிவு

II. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

III. விவசாயத்துறைகளை நவீனமயமாக்கும் கருத்திட்டம்

IV. வாசனைத் திரவியங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் சபை

### 3. சமூக நலன்புரிப் பிரவு

I. சமூக சேவைகள் திணைக்களம்

II. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

III. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

IV. உளவளத்துணைப் பிரிவு

## ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு




மே.செயலாளர்கள் (ஆ.பு.தி.)- மேலதிக செயலாளர்கள் (ஆய்வு, புள்ளிவிபரம் மற்றும் திட்டமிடல்)

பி.நி.உ. –பிரதான நிதி உத்தியோகத்தர்

ப.நா. (தே.ச.அ.நி.) – பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்)

மே.ப.நா - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி)

ப- பணிப்பாளர் (சமுர்த்தி அபிவிருத்தி)

பி.உ.க. – பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

ப (உள.) - பணிப்பாளர் (உளவளத்துணை)

ப (மு.தே.செ) - பணிப்பாளர் (முதியோர்களுக்கான தேசிய செயலகம்)

ப (தி) - பணிப்பாளர் (திட்டமிடல்)

பொ.மு (இ.ச.பா.ச) - பொது முகாமையாளர் (இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை)

உ.செ. - உதவிச் செயலாளர்

உ.ப. (தி) - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

கணக். - கணக்காளர்

மே. செயலாளர்கள்( ம.வ.வி.க) – மேலதிக செயலாளர்கள் (மனித வள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டம்)

ப.நா (சமுர்த்தி) - பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி)

மே.ப.நா (தே.ச.அ.நி.) - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்)

சி.உ.செ. - சிரேஸ்ட உதவிச் செயலாளர்

பி. க. - பிரதான கணக்காளர்

ப (அ.ந.தே.செ.) - பணிப்பாளர், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

ப (ச.சே.தி.) - பணிப்பாளர் (சமூக சேவைகள் திணைக்களம்.

ப (கி.அ.ப.ஆ.நி) - பணிப்பாளர் (கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்)

ப (அ) - பணிப்பாளர் (அபிவிருத்தி)

பி.ப. (அ)-பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

உ.ப. - உதவிப் பணிப்பாளர்

உ.ப. - உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

செ.ஒ.செ. - செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்

# அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2103/33 என்ற இலக்க மற்றும் 2018.12.28 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக ஸ்தாபிக்கப்பட்ட ஊழியர், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் விடயப் பரப்பு, 2019 ஜனவரி மாதம் இடம்பெற்ற அமைச்சரவை திருத்தத்திற்கு நிகராக, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2106/9 என்ற இலக்கம் மற்றும் 2019.01.16 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஸ்தாபிக்கபட்டுள்ளது. அதன் பிரகாரம், இவ்வமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக வலுவூட்டல், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் போன்ற 03 விடயங்களின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

இலங்கையில் வறிய, ஓரங்கட்டப்பட்ட மக்களினை வலுவூட்டல், அவர்களின் நலன்புரி, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆரம்பக் கைத்தொழில் துறையின் மேமபாட்டினை நோக்கங்களாகக் கொண்டு வினைத்திறன், விளைத்திறன், சிநேகபூர்வமான சமுதாயம் மற்றும் பொருளாதாரம்சார் சேவைகளை வழங்கி இவ்வமைச்சு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

2030 ஆம் ஆண்டளவில், வறுமையற்ற, உரிமைகள் பாதுகாக்கப்பட்ட இலங்கையொன்று என்ற தொலைநோக்கினை நோக்கமாகக் கொண்டு அமைச்சுடன் இணைந்த திணைக்களங்கள்/நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினூடாக பல நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு உன்னதமான பங்களிப்பொன்று வழங்கப்படுகின்றது.

குறைந்த வருமானப் பயனாளிகளை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், சமூகப்பணி தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல், நிலைபேறான கிராம அபிவிருத்தியினை முன்னிட்டு சமுதாயத்தினை வலுவூட்டுதல் மற்றும் அரசின் ஓய்வூதியம் உரித்தற்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல் சமூக வலுவூட்டல் பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

குறைந்த வருமானப் பயனாளிகளின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டினை மேம்படுத்துவதினுள், வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நியாயத்தினை உறுதிப்படுத்தும் தேசியக் கொள்கையினை அமுலாக்குவதற்கு வலுவினை வழங்கும் பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவினூடாக சமுர்த்திப் பயனாளிகள் வாழுகின்ற பின்தங்கிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கருத்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு காணிகளைச் சுவீகரித்துக் கொள்ளும் செயற்பாடுகளில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுடன் ஒருங்கிணைப்பினைக் கட்டியெழுப்புதல் இடம்பெற்று வருகின்றது.

மனித வள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவினூடாக அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் அறிவு, உளப்பாங்குகள் மற்றும் திறமைகளை மேம்படுத்தி அவர்களின் சேவைகளை விளைத்திறனான முறைமையில் பயன்படுத்துவதற்கு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

சமூகப் பணி விடயத்தினை அடிப்படையாகக்கொண்டு நாட்டிற்குத் தேவையான சமூகப் பணி மற்றும் சமூக நலன்புரி தொழில்வாண்மையாளர்களை உருவாக்குவதற்கு சமூகப் பணி தொடர்பிலான கல்வியினை வழங்கி வரும் முன்னணி நிறுவனமாக விளங்குவது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமாகும்.

மேலும் சமுதாயத்தினை வலுவூட்டி நிலைபேறான கிராம அபிவிருத்தியொன்றுக்கான அவர்களின் செயலூக்கமான பங்களிப்பினை வழங்கி நீண்டகால அனுபவங்களைக் கொண்ட நிறுவனமொன்றாக கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் தனது கடமைப் பொறுப்பினை நிறைவேற்றி வருகின்றது.

அரசின் ஓய்வூதியம் கிடைக்கப் பெறாத சுய தொழில்களில் ஈடுபடுவோர், முதியோர்கள், பின்தங்கிய நபர்கள், தனிப்பெற்றார்கள், வெளிநாட்டில் பணிபுரிவோர், கலைஞர்கள் போன்ற ஒவ்வொரு சேவையிலும் ஈடுபட்டுள்ளோருக்கென ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் அமுற்படுத்தப்பட்டு வரப்படுவது, இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையினாலாகும்.

இம் முறைமைக்கு சமூகத்தில் வாழும் வறிய நபர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் செயலூக்கமான பங்களிப்பொன்று சமூக வலுவூட்டல் பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

அதேபோல 2015 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கு 2018 ஆம் ஆண்டில் சமூக நலன்புரி விடயப் பரப்புச் சேர்க்கப்பட்டதுடன், பொருளாதாரத்தின் முதுகெலும்பான ஏற்றுமதித் துறையின் விவசாயம், மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மைப் பிரிவுகளின் பெறுமதி சேர்த்தலினை துரித மேம்பாட்டிற்கு முன்வைத்து 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் ஏற்றுமதி வருவாயினை இரண்டு மடங்கு வரை மேம்படுத்தி வருடாந்த ஏற்றுமதி வருவாயினை அமெரிக்க டொலர் 25 பில்லியன் வரை அதிகரிக்கும் இலக்குகளுடன் ஆரம்பக் கைத்தொழில் பிரிவு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பக் கைத்தொழில் துறையிலுள்ள சகல கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் முன்னெடுக்கும் விவசாயம், மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை உட்பட ஆரம்பக் கைத்தொழில்களின் உற்பத்திகளை, உற்பத்தித் திறனாக மேம்படுத்தி, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உலக சந்தைக்குக் கிடைக்கச் செய்வதனூடாக எமது அந்நியச் செலாவணி இருப்பினை உயர்த்துதல் மற்றும் துறையிலுள்ள சகல பங்குதாரர்களுக்கும் சிறந்த நாளைய நாள், நிலைபேறான வாழ்க்கையினை முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் அவற்றினை அமுலாக்குதல் இப்பிரிவினூடாக இடம்பெற்று வருகின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினூடாக கறுவா. மிளகு. கராம்பு, சாதிக்காய். ஏலக்காய்,கோப்பி, பாக்கு, පැඟිරි, வனிலா, எலுமிச்சை, வெற்றிலை, கொரக்கா, கித்துள், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற பயிர்கள் ஏற்றுமதி தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் தேவையான தொழில்நுட்ப அறிவு, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் உயர் விளைச்சலை வழங்கும் விதை வகைகளை அறிமுகஞ் செய்தல் முக்கியமான பொறுப்பாவதுடன், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் துறையின் மேம்பாட்டினை முன்னிட்டு, ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் விரிவான சேவைகளை வழங்குதல் தொடர்ந்து இடம்பெறுகின்றது. ஏற்றுமதி விவசாயப் பயிர்களை வளர்த்தல், பதனிடுதல், பெறுமதிசேர்த்து முடிவுப் பொருட்களைத் தயாரித்தல் மற்றும் வர்த்தகர்களுக்கிடையே தரகராகச் செயற்பட்டு வாழ்வாதாரத்தினை வழங்கி இரண்டு மில்லியன் வரையான பங்குதாரர்களின் வாழ்க்கை தரங்களைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுதல் திணைக்களத்தின் பிரதான நோக்காகும்.

விவசாயத் துறையில் புதிய கருத்துக்களைக் கொண்ட முயற்சியாண்மைகள் மற்றும் விவசாய உற்பத்தி அமைப்புக்களுக்கு, ஏற்றுமதி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு மொத்த முதலீட்டிற்கமைய மானியமொன்றினை வழங்குவதை நோக்காகக் கொண்டு விவசாயத் துறைகளை நவீனமயமாக்கும் கருத்திட்டம் அமுலாக்கப்பட்டு வருகின்றது. விவசாயத் துறையின் பெறுமதி சேர்த்தலினை மேம்படுத்துதல், விளைத்திறனாக மேம்படுத்துதல், வகைப்படுத்துதல், வணிகமயமாக்கல் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதல் போன்ற 03 கூறுகளுடன் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

அதேபோல இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.5 மில்லியன் வரையில் முதியோர்கள் அதாவது சிரேஸ்ட பிரஜைகள், 1.7 மில்லியன் வரையான அங்கவீனமுற்ற நபர்க்கள், விசேட தேவைகளைக் கொண்ட சிறார்கள், உள நெருக்கீடு மற்றும் உளநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் சமூக நலன்புரி, பாதுகாப்பு, புனர்வாழ்வு, நிலைபேறான வாழ்க்கையினை முன்னெடுத்தல் தொடர்பில் தேவையான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள், வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுத்துதல், உயர்த்துதல் தொடர்பிலான பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக நலன்புரி பிரிவினூடாக அமுலாக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்க்கைத்தொழிற் திறன்களை மேம்படுத்துதல், அவர்களினை சுயமாக இயங்கும் நபர்களாக உருவாக்குதல், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்தல், விசேட தேவைகளைக் கொண்ட சிறார்களை மேம்படுத்துவதற்கு முன்கூட்டியே தலையிடுதல் உட்பட சமூக அபிவிருத்தி நோக்கங்களைக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களம் தனது பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

அதேபோல சமூகத்தில் வாழும் பாதகமான நிலைக்கு உட்பட்ட நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினை மலரச் செய்வதற்கு அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரியினை உள்ளடக்கி நிவாரணங்களை வழங்குதல். அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கடமைப்பொறுப்பாகும்.

இலங்கை வாழ் முதியோர் சமுதாயத்தின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு மற்றும் கௌரவத்தினை ஏற்படுத்திக் கொள்ளுவதற்குப் பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அவர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் முதியோர்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தேவையான பங்களிப்பு வழங்கப்படுவது, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினாலாகும்.

தற்போதுள்ள சமூகப் பொருளாதாரச் சூழல், தொழில்நுட்ப உலகத்தினூடாக உளநெருக்கீடு மற்றும் உபாதைக்கு உள்ளான பிள்ளைகள் மற்றும் ஏனைய நபர்களை அதிலிருந்து விடுபடச் செய்வதற்கு தரத்துடனான உளவளத்துணை சேவைகளை வழங்குதல் தொடர்பில் 24 மணி நேரமும் அமுலாக்கப்படும் கையடக்கத் தொலைபேசியினூடான சேவையினை உள்ளடக்கி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல் உளவளத்துணைப் பிரிவினூடாக இடம்பெற்று வருகின்றது.

சமூக வலுவூட்டல், ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக நலன்புரி பிரிவுகளினூடாக 2018 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**01**

# சமூக வலுவூட்டல் பிரிவு





# சமூக வலுவூட்டல் பிரிவு

## 01.1 நிர்வாகப் பிரிவு

### 1.1.1 அறிமுகம்

அமைச்சின் நிர்வாகம், நிறுவனங்கள், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுளை இயக்குதல், அமுலாக்குதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் நிறுவனம்சார் செயற்பாடுளை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

### 1.1.2 நோக்கங்கள்

i. அமைச்சினதும் மற்றும் அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் அலுவலகக் குழாமுக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகச் செயற்பாடுளை இயக்குதல்.
ii. உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சியினை வழங்குவதனூடாக மனித வள இயலுமையினை மேம்படுத்துதல்.
iii. அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சட்டங்கள், வரைவுகள் போன்றனவற்றைச் சரியான வகையில் முன்வைப்பதனூடாக கொள்கைளைத் திட்டமிடுவதற்குப் பங்களிப்பினை நல்குதல்.
iv. அமைச்சின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
v. அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தல்.

### 1.1.3 மூலோபாயங்கள்

i. அமைச்சின் அலுவலகக் குழாமின் தேவைப்பாடுளை இனங்காணுதல் மற்றும் அத்தகவல்களைச் சரியான வகையில் நாளதுவரைப்படுத்துதல்.
ii. அலுவலக உபகரணங்கள், தொடர்பாடல் உபகரணங்கள், உட்கட்டமைப்புத் தேவைகளை இனங்காணுதல் மற்றும் அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
iii. பதவி அணியினரினை ஊக்குவிப்பதற்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல்.
iv. அமைச்சுக்குக் கிடைக்கும் மற்றும் வெளியே அனுப்பும் கடிதங்களைச் சரியான வகையில் பகிர்ந்தளிப்பதனூடாக உரிய பிரிவுகளின் செயற்பாடுகளை விளைத்திறனாக்குதல்.
v. வாகனங்களைச் சரியானவாறு பேணுதல், பழுதுபார்த்தல் மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்பாடுகளுக்கு ஒதுக்குதல்.

### 1.1.4 2018.01.01 - 2018.12.31 வரையான காலப்பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட விளைவுகள்.

i. 36 வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளுக்கு, அமைச்சினதும் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினதும் 125 உத்தியோகத்தர்ளைப் பங்குகொள்ளச் செய்வித்தல்.
ii. 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்படுதல்.
iii. அரச முகாமைத்துவ உதவியாளர் புதிய நியமனதாரிகள் 12 பேர் தொடர்பில் நிறுவனம்சார் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் சேவைகளின் தேவைப்பாடுகளுக்கமைய உரிய பிரிவுகளுக்கு இணைப்புச் செய்தல்.
iv. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரினுள் நிலவிய 04 அலுவலகப் பணியாளர் சேவையின் வெற்றிடங்களுக்கு முறைசார் வகையில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 04 உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

v. அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வருகை தந்த 16 உத்தியோகத்தர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 19 உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிறுவனம்சார் செயற்பாடுளை முன்னெடுத்தல்.

vi. 02 உத்தியோகத்தர்கள் 60 வயதினைப் பூர்த்தி செய்தமையின் கீழ் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான நிறுவனச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

vii. 2070/56 என்ற இலக்க மற்றும் 2018.05.12 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய உளவளத்துணைப் பிரிவு, முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழும், கண்டி மரபுரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பிலான உள்ளக நியதிச் சட்ட சபை, விஞ்ஞானத் தொழில்நுட்ப , ஆய்வு, திறன் விருத்தி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிகள் மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் கீழும் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பிரகாரம், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கு உத்தியோகத்தர்களின் 291 பிரத்தியேகக் கோவை நிறுவனம்சார் செயற்பாடுகள் நிறைவு பெற்று வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப, ஆய்வு, திறன் விருத்தி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சுக்களு, 8 உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவை நிறுவனம்சார் செயற்பாடுகள் முடிவுற்று வழங்கப்படுதல்.

viii. அதன் பின்னர் வெளியிடப்பட்டுள்ள 2096/68 என்ற இலக்க மற்றும் 2018.11.09 ஆந் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள் மற்றும் 291 உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவைகள் மீளவும் இணைத்துக் கொண்டமையின் கீழ் நிறுவனச் செயற்பாடுகளுக்கு ஒப்படைக்கப்பட்டன.

ix. அமைச்சின் ஆரம்பத் தொகுதி உத்தியோகத்தர்களின் இரண்டாவது மொழி தொடர்பிலான வினைத்திறன் காண் தடையினைப் பூர்த்தி செய்வதற்கு 50 மணித்தியாலம் தமிழ் மொழி பாடநெறியொன்று நடாத்தப்பட்டதுடன், அது தொடர்பில் சாரதிகள்/அலுவலகப் பணியாளர்கள் 23 பேரினைக் கலந்துகொள்ளச் செய்வித்தல்.

x. சமூக சேவைகள் விடயத்திற்கு உரித்தான நிறுவனம் தொடர்பில் வரிச் சலுகையினை வழங்குதல்.

xi. பிரத்தியேக உறுப்பினர்களின் சட்ட வரைவுகள் கிடைக்கும் ஒழுங்கில், சட்ட வரைவுகளைத் தயாரித்தல், சட்டவரைஞர்களுக்கு முன்வைத்தல்.

xii. அமைச்சின் பதவியணியினருக்கு சரியான நேரத்திற்கு சம்பள ஏற்றங்களை வழங்குதல்.

## 1.1.5 எதிர்பார்க்கப்பட்ட சமூகப் பொருளாதார விளைவுகள்

விளைத்திறனான மனித வள மற்றும் நிதி முகாமைத்துவத்தினூடாக அமைச்சின் பதவியணியினரினதும் மற்றும் நிறுவனங்களினதும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.

## 1.1.6 அமுலாக்கியவேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்.

i. 2070/56 என்ற இலக்க மற்றும் 2018.05.12 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இவ்வமைச்சு, சமூக வலுவூட்டல் அமைச்சு எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், அதற்கான சகல பிரிவுகளின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள், உரியவாறு குறுகிய காலப்பகுதியினூடாக தேவையான பதவியணியினரைனை அடையாளங் கண்டு அங்கீகரித்துக்கொள்ளுதல் மற்றும் பௌதிக வளங்களினை சரியானவாறு முகாமை செய்தல்.

ii. அதன் பின்னர் வெளியிடப்பட்ட 2096/68 என்ற இலக்க மற்றும் 2018.11.09 ஆந் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 289 உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக்கோவை மீளவும் ஒன்றிணைக்கப்பட்டமை மற்றும் அதன் நிறுவனச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

### 1.1.7 பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்தச் சாதனைகள்

i. வரையறுக்கப்பட்ட வளங்களைத் தேவைக்கேற்ப சரியானவாறு முகாமை செய்தல்.
ii. சகல பதவியணியினரின் நிறுவனம்சார் செயற்பாடுகளைச் சரியானவாறு நேரகாலத்தில் முன்னெடுத்தல்.
iii. அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணியினருடனும் சிறந்த ஒருங்கிணைப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

## 1.2 கணக்குகள் பிரிவு

### 1.2.1 அறிமுகம்

சமூக வலுவூட்டல் அமைச்சு தொடர்பிலான செயற்பாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் வருடாந்த ஒதுக்கீடுகளை வழங்குதல், முகாமை செய்தல் மற்றும் கொடுப்பனவுகளைச் செய்வதோடு அரச கணக்குகளை முன்னெடுத்துச் செல்லுவதில் வெளிப்படைத்தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை, ஒழுக்காற்றுடன் முன்னெடுத்துச் செல்லுதல் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரிவு கணக்குகள் பிரிவாகும்.

இதில். பிரதான நிதி உத்தியோகத்தர் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் வழிகாட்டல், முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்தலினூடாக கணக்கீட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் என்பதுடன், அமைச்சின் கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் சகல கொள்முதல் நடைமுறை முன்னெடுப்பதற்கு மேலாக, நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்கீட்டு மேற்பார்வை இடம்பெறுகின்றது. இது தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருடன், பாதீட்டு உதவியாளர் ஒருவர், விநியோக உத்தியோகத்தர் இருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மூவர் மற்றும் 08 அரச முகாமைத்துவ உதவியாளர்களுடன், அலுவலகப் பணியாளர் மூவர் செயலூக்கமான சேவையினை வழங்கி வருகின்றனர்.

### 1.2.2 பிரதான நோக்கங்கள்

2018 ஆம் ஆண்டில் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமூக அபிவிருத்திப் பணிக்கூற்று மற்றும் தொலைநோக்குத் தொடர்பில் நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரச சுற்றுநிரூபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,

i. அமைச்சுக்கு உரித்தான ஒட்டுமொத்த வருடாந்தப் பாதீட்டு அட்டவணையினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
ii. சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியானவாறும் மற்றும் நாளதுவரைப்படுத்தியும் கணக்கிடுதல் மற்றும் கணக்குகளை முன்வைத்தல்.
iii. நிதிசார் கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் நிதி முகாமையனை வலுப்படுத்துதல்.
iv. சகல பெறுவனவுகள், செலவுகளைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளை முகாமை செய்தல்.
v. செலவுகளை மதிப்பாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளை முன்வைத்தல்.
vi. பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

vii. சகல கொள்முதற் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையுடன்கூடிய கொள்முதல் நடைமுறையினூடாக நிதிச் சட்ட ஒழுங்குகளைச் சரியானவாறு அமுற்படுத்துவதற்கு உதவுதல்.
viii. நாடுபூராவும் பரந்துள்ள நிவாரண உதவிகளைப் பெற்று வரும் பயனாளிகளின் பயன்களை குறிப்பிட்ட தினத்தில் மற்றும் நேரத்தில் அவர்களுக்கு வழங்குதல்.
ix. அமைச்சின் கீழுள்ள அரசின் சொத்துக்களை நாளதுவரைப்படுத்தல், வருமானங்களைச் சேகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
x. அமைச்சு மற்றும் அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களின் நிதி மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகளைச் சரியானவாறு முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவி நல்குதல்.

## 1.2.3 மூலோபாயங்கள்

i. அரசு அறிமுகஞ் செய்துள்ள கணக்கீட்டுத் திட்டத்தினைச் சரியானவாறு சரியான கால வரையறையினுள் செயற்படுத்தி, முன்னெடுத்துச் செல்வதனூடாக அதில் காணப்படும் உற்பத்தித்திறன் பிரிவின் விளைத்திறனை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்துதல்.
ii. காசுப் புத்தகம் மற்றும் காசு ஏட்டினை இணக்கஞ் செய்வதனூடாக ஒதுக்கீட்டு வரையறைகளை மீறாதிருத்தல்
iii. செலவுகளின் பல செலவு விடயங்கள் தொடர்பில் மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவதற்குத் தேவையான முகாமைத்துவத் தீர்மானங்களைச் சரியாக எடுத்தல் மற்றும் சரியாக எடுப்பதற்கு உரிய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுதல்.
iv. அரசின் கொள்கைகள் மற்றும் நிதிப் பிரமாணங்களைச் சரியானவாறு ஆய்வுகளுடன் குறிப்பிட்ட தினத்தில், நேரத்திற்கு மற்றும் பிரிவுக்கு/நிறுவனத்திற்கு முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல்.
v. சரியான வேலைப் பகிர்வினை முன்னெடுப்பதனூடாக சாதாரண கடமைகளை முரண்பாடின்றி முன்னெடுத்துச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உயர் முகாமைத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுதல்.
vi. சகல விடயங்கள் தொடர்பிலும் சரியான கண்காணிப்பொன்றினை முன்னெடுப்பதனூடாக தாமதமான பணி அலகுகளின் மேம்பாடு தொடர்பில் முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு கண்காணிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அமுற்படுத்தல்.
vii. நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் வலையமைப்புச் செய்யப்பட்ட திட்டங்களை அமுற்படுத்தல். இது தொடர்பில் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினதும் மற்றும் திறைசேரியினதும் நேரடியான/மறைமுகமான வகையில் உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல்.
viii. அமைச்சின் கீழுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் எப்போதும் செயலாளர், மேலதிக செயலாளர்களின் ஆலோசனைகளின் மீது அதிக கவனஞ் செலுத்தப்படுவதுடன் அதன் பிரகாரம் விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களுடன் எவ்வேளையிலும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதன் மூலம் நிதிக் கட்டுப்பாட்டுக்கான தேவையான நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் எடுத்தல்.
ix. சகல செலவு விடயங்களின் மாதாந்தச் செலவு அறிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல், செலவு தொடர்பான பகுப்பாய்வு மாதந்தோறும் இடம்பெறுவதுடன், அதன் பிரகாரம் தேவையான முன்னேற்றத்தினை எட்டாத கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கூட்டுவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்வைத்தல்.
x. வருடந்தோறும் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகள், குறிப்பிட்ட தினங்களில்/காலாண்டுகளின் பிரகாரம் செலவு செலவு செய்யப்படவில்லையாயின், அவ் ஒதுக்கீடுகளை வேறு அத்தியாவசிய செலவு விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66/69 ஏற்பாடுகளுக்கிணங்க மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
கணக்குகள் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விளைத்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிக்கு முன்வைத்து செயற்திறனினை மேம்படுத்தி சேவைக்குப் பயன்படுத்துதல்.

## 1.2.4 2018 வருடத்தினுள் சுவீகரிக்கப்பட்ட விளைவுகள்

i. செலவுத் தலைப்பு 124 இன் கீழுள்ள அமைச்சு செலவு விடயங்களில் 2017 ஆம் ஆண்டின் பாதீட்டினூடாக ஒதுக்கப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீடுகளில் 97% முன்னேற்றப் பயனொன்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலை, 2018 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியளவில் பெற்றுக் கொண்ட பயன் 93.50% ஆகும்.

ii. செலவுத் தலைப்பு 124 இன் கீழ் மூலதன ஒதுக்கீடுகளின் அளவினை, 2017 ஆம் ஆண்டிற்கு இணையாக 2018 மேம்பாட்டு வருடத்தில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு நிறைவேற்றப்பட்டுள்ளதுடன். அவ் ஒதுக்கீடுகளிலிருந்து 2018 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 333.39 பயனொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடியுமாகவிருந்தது.

iii. நடைமுறை ஆண்டில் கணக்காய்வாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய கணக்கு அறிக்கைகளுக்கிடையே, ஒதுக்கீட்டுக் கணக்கு, அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் “பீ” கணக்கின் வருடாந்த அறிக்கை மற்றும் சகல கணக்காய்வு விசாரணைகளுக்குமான மறுமொழிகளை குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் வழங்குவதற்கு முடிந்தமை.

iv. அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டுப் பணி தொடர்பில் தேவையான கட்டுநிதியினை, 2018-12-31 ஆந் திகதியளவில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினூடாக பின்வருமாறு பெற்றுக் கொள்ளுவதற்கு முடிந்துள்ளமை.

| மீண்டுவரும் ரூபா | மூலதனம் ரூபா | முற்பணம் பீ கணக்கு | வெளிநாட்டு நிதியம் | மொத்தக் கட்டுநிதி ரூபா. |
|---|---|---|---|---|
| 313,970,000/- | 330,000,000/- | 7,900,000/- | - | 651,870,000/- |

v. கொள்முதல் திட்டங்கள் மற்றும் சுற்றுநிரூபங்களின் ஆலோசனைகளின் பிரகாரம், குறிப்பிட்ட தினத்தில் கொள்முதல் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு முடிந்தமை.

vi. 2017 ஆம் ஆண்டு தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகளில் கணக்கீட்டுச் செயற்பாடுகள் தொடர்பிலான கணக்காய்வு விசாரணைகளினை முன்வைப்பதைக் குறைப்பதற்கு முடிந்துள்ளமை.

## 1.2.5 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு - 2018

| மொத்த மூலதன ஒதுக்கீடு (ரூ.மி.) | மொத்த மீண்டுவரும் ஒதுக்கீடு (ரூ.மி.) |
|---|---|
| 625.27 | 516.34 |

## 1.2.6 ஆந் திகதிய செலவினங்களின் நிலபரம் (2018.01.01 - 2018.12.31)

இதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் திசம்பர் 31 ஆந் திகதின்று செலவினத் தலைப்பு 124 இன் கீழ் பெற்றுக்கொண்ட ஒதுக்கீடுகளின் விபரங்கள் பின்வருமாறாகும்.

| *செலவினங்களின் வகை* | *மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகள் ரூபா* | *மேலதிக ஒதுக்கீடுகள் ரூபா* | *மொத்த ஒதுக்கீடுகள் ரூபா* | *2018 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியன்று மொத்தச் செலவினம் ரூபா.* |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 516,336,443/- | - | 516,336,443/- | 478,695,863/- |
| மூலதனச் செலவினம் | 625,270,000/- | - | 625,270,000/- | 333,388,793/- |
| மொத்தச் செலவினம் | 1,141,606,443 /- | - | 1,141,606,443 /- | 812,084,656 /- |

## 1.2.7 அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

i. எதிர்வரும் வருடத்திற்கு மதிப்பீடு செய்வது 10 மாதங்களுக்கு முன்னரே இடம்பெறுவதால், நடைமுறை ஆண்டில் எதிர்பார்த்த பெறுமதிகள் எதிர்வரும் வருடத்தில் காலத்திற்கேற்ப வேறுபடுவதால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு விடயங்களின் செலவினத் தேவைப்பாடு மாறுபடுதல்.

ii. நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்கி. பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்குச் செல்லும்போது சரியான தினத்தில் பயன்களை வழங்குதல் தொடர்பில் பின்தொடருதல் மற்றும் நுண் பொருளாதார முன்னேற்றத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் தாமதமாவதன் கீழ் மாற்றீடுகளை இனங்காணல் விரைவில் செய்ய முடியாமை.

iii. 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் விடயங்கள் மீளவும் மாறுபட்டமையின் காரணத்தினால் அமுலாக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இலக்கிடப்பட்ட முன்னேற்றங்களை எட்டுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்.

iv. நிர்மாணிப்புக்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டுக்கு கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகள், செலவுகளை ஈடுசெய்யும்போது உரிய கட்டுமாண நிறுவனங்களினால் குறித்த உறுதிச் சீட்டுக்களை முன்வைத்தலில் தாமதம் மற்றும் காலநிலை மாற்றங்களின் காரணமாக கட்டுமாணப் பணிகள் தாமதமாகியமையினால் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதில் ஏற்பட்ட சிக்கல்.

## 1.2.8 பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்தச் சாதனைகள்

i. 2016 ஆம் ஆண்டில் அரச கணக்குகளை முன்னெடுத்துச் செல்லுதல், நாளதுவரைப்படுத்துதல் மற்றும் பாவனை தொடர்பில் அரச கணக்குகள் குழுவினூடாக செய்யப்பட்ட மதிப்பீட்டு ஆய்வின் பிரகாரம், நான்காம் இடத்திற்கு உரித்தான சான்றிதழுக்கு உரித்தான அமைச்சாக சமூக வலுவூட்டல் அமைச்சு பாராட்டப்பட்டமை.

ii. 2019 பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் கண்காணிப்பினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடிந்தமை.

iii. சமூக வலுவூட்டல் அமைச்சுக்கான 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்து சரியான தினத்தில் முன்வைப்பதற்கு முடிந்தமை.

iv. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டுக்கு புதிய கருத்திட்டங்களை முன்வைப்பதற்கு முடிந்தமை மற்றும் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு முடிந்தமை.

v. வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வுச் செயற்பாடுகள் நிறைவு பெற்று அகற்றப்பட வேண்டிய உடைந்த பொருட்களை குறிப்பிட்ட பொருட்களை அகற்றும் செயற்பாட்டினூடாக அகற்றி அதனூடாக பெற்றுக் கொள்ளும் வருமானங்களினை, அரச வருமானத்திற்குச் சேர்த்தலின் கீழ் பாவனைக்குத் தகாத 07 வாகனங்கள் இனங்காணப்பட்டு ஏலத்தில் விடப்பட்டு ரூபா. 10.74 மில்லியன் அரச வருமானத்திற்கு வரவிடுவதற்கு முடிந்தமை.

vi. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 கணக்காய்வு விசாரணைகளைக் குறைப்பதற்கு ஏற்ற வகையில் நிதி முகாமையினை முன்னெடுப்பதற்கு முடிந்தமை.

vii. 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட வேண்டிய பின்வரும் கணக்கு அறிக்கைகளை குறிப்பிட்ட தினத்திற்கு முன்வைப்பதற்கு முடிந்தமை.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு – 2017

(ஆ) முற்பணக்கணக்கு -2017

(இ) அட்டுறு அடிப்படையின் கீழான இறுதிக் கணக்கு - 2017

viii. நிலைபேறான இலக்குகளை நோக்கிச் செல்லுவதற்கு நிதி இலக்குகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முடிந்தமை.

## 1.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 1.3.1 அறிமுகம்

சமூக வலுவூட்டல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, நி.பி. 133 இன் பிரகாரம், அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பு கூறும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

### 1.3.2 நோக்கங்கள்

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சேவைகள், நிகழ்ச்சித் திட்டங்களைத் தரமானதாகவும் மற்றும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான நிதிக் கணக்காய்வு, செயற்திறன் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, சுற்றுச்சூழல் கணக்காய்வு, திட்ட நிர்வாகக் கணக்காய்வு மற்றும் கவனத்திற்குக் கொள்ளப்பட வேண்டிய துறையினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வினை முன்னெடுப்பதனூடாக எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வழிகாட்டல்களை வழங்குதல் இடம்பெறுகின்றது. அதன் கீழ்

01. **வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகள்** - 20

i. சீதுவ தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை.

ii. அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை.

iii. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் மட்டக்களப்பு பிரதேசத்தில் நடாத்தப்பட்ட உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி தொடர்பில் மண்டப வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டத் தொகுப்பாளர் பதவிக்கு,

உத்தியோகத்தர் ஒருவரினை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை.

iv. அமைச்சின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை. (இரண்டாவது காலாண்டு நிறைவின்போது)

v. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் முறைகேடான செயற்பாடு தொடர்பிலான கணக்காய்வு விசாரணை (பிரதிப் பொதுமுகாமையாளரினை ஆட்சேர்ப்புச் செய்தல்.)

vi. அமைச்சின் வாகனங்களைப் பழுதுபார்த்தல் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை

vii. 2018 கொள்முதல் திட்டத்தினை அமுலாக்குதல்.

viii. சமுர்த்தி உதானய புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டமொன்றனை தயாரித்து ஒளிபரப்புச் செய்தல்.

ix. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்களை அச்சிடுதல் தொடர்பிலான கணக்காய்வுப் பரிட்சிப்பு.

x. வங்கி இணக்கங்கள் மற்றும் பொது வைப்புக் கணக்குகளைப் பரிட்சித்தல்.

xi. நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் (மூன்றாவது காலாண்டு நிறைவின்போது)

xii. வரவு, விடுமுறை மற்றும் தபால் தொடர்பானது.

xiii. கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பரிட்சித்தல்.

xiv. சிறு பணத்தினைப் பரிட்சித்தல் - 2018

xv. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்து நடாத்துதல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை தொடர்பிலான செயற்திறனினைப் பரிட்சித்தல்.

xvi. அமைச்சு கணனி இணையத்தளம் தொடர்பில் செயற்திறனினைப் பரிட்சித்தல்.

xvii. பிரத்தியேக ஆளுக்குரிய அறிக்கைகளைக் கணக்காய்வு செய்தல்.

xviii. பிரத்தியேகக் கோவைகளை ஆய்வு செய்தல்.

xix. ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்

xx. பொருட்களை ஆய்வு செய்தல், களஞ்சிய செயற்திட்டம் மற்றும் கிடைக்கப் பெற்ற உறுதிச்சீட்டுக்களைப் பரிட்சித்தல்.

02. நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் - 04

i. முதலாவது கூட்டம் - 2018.02.19

ii. இரண்டாவது கூட்டம் - 2018.07.03

iii. மூன்றாவது கூட்டம் -2018.10.23

iv. நான்காவது கூட்டம் -2018.12.20

03. நடாத்தப்பட்ட புலனாய்வுகளின் எண்ணிக்கை - 02

i. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் - கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டத் தொகுப்பாளரினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

ii. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை - பிரதி பொதுமுகாமையாளரினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

04. கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் மறுமொழிகள் வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை - 13

i. உறுதிச்சீட்டுக்களைப் பரிட்சித்தல் - 2017

ii. செயற்பாட்டு குத்தகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றினைக் கொள்வனவு செய்வதைப் பரிட்சித்தல்.

iii. துல்லியமான இடைக்கால கட்டுநிதிக் கொடுப்பனவினைப் பரிட்சித்தல். - 2017

iv. வங்கி இணக்கங்களைப் பரிட்சித்தல் - 2017

v. வரி விலக்களிப்பு வழங்குதல் - 2016

vi. தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் - 2017

vii. ஒதுக்கீட்டுக் கணக்கு பரிட்சிப்பு

viii. சிறுநீரக நோயாளர்கள் தொடர்பிலான உதவிக் கொடுப்பனவினைப் பரிட்சித்தல். - 2017

ix. உளவளத்துணைப் பிரிவின் செயற்திறனினைப் பரிட்சித்தல்.

x. செயற்திறன் - 2017
xi. 2017 - கணக்காய்வு
xii. தலைப்பு 124 சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு தொடர்பிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு
xiii. தலைப்பு 124 சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை - 2017 ஆம் ஆண்டு.

05. கணக்காய்வுத் திட்டத்தினை அமுலாக்குவதன் முன்னேற்றம் - 95%

06. அரச கணக்குகள் தொடர்பிலான குழுவினால் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பிலான புலனாய்வுகள் மற்றும் எடுக்கப்பட்ட எதிர்வரும் நடவடிக்கைகளை முன்வைத்தல். - 2016 ஆம் ஆண்டு (நிலையியல் கட்டளை இலக்கம் 119 (4)

07. இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவின் கணக்காணிப்பின் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிர்வாகம் மற்றும் செயற்திறன் தொடர்பிலான கணனித் தகவல்களினை முகாமைத்துவத் திட்டத்திற்கு வழங்குதல். 2017 ஆம் ஆண்டு.

## 1.4 ஆய்வு, புள்ளிவிபரம் மற்றும் திட்டமிடல் பிரிவு

### 1.4.1 அறிமுகம்

2017 ஆம் ஆண்டில் செப்ரெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வு மற்றும் புள்ளி விபரம் என்ற பிரிவுக்கு, பின்னர் திட்டமிடல் விடயமும் ஒன்றிணைக்கப்பட்டு, ஆய்வு, புள்ளி விபரம் மற்றும் திட்டமிடல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அமைச்சு, அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், அமுலாக்கிய நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை நிர்வகித்தல், ஏனைய நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக செயற்படுத்தப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

### 1.4.2 ஆய்வு மற்றும் புள்ளி விபரம்

#### 1.4.2.1. நோக்கங்கள்

i. அமைச்சினதும், அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் திட்டமிடப்பட்ட செயற்பாட்டினை தர்க்க ரீமியில் முறைசார்படுத்துதல்.
ii. திறைசேரி, அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றிலிருந்து அமைச்சுக்கு தேவையான மேலதிக ஒதுக்கீடுகள், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பிற உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மூலோபாயமொன்றினைத் தயாரித்தல்.

#### 1.4.2.2. மூலோபாயங்கள்

i. அமைச்சின் பிரிவுகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து ஒன்றிணைந்த அணுகுமுறையொன்றினை பின்பற்றுதல்.
ii. ஏனைய நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்த பிரவேசமொன்றினைப் பின்பற்றுதல்.
iii. அறிவு, திறன் மற்றும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.

#### 1.4.2.3. ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட விளைவு (2018.12.31 வரை)

i. சமூகப் பணி தொடர்பிலான 06 ஆய்வுகள் அமுலாக்கப்பட்டு தரவுகளை ஒன்றுதிரட்டும் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன என்பதுடன், ஆய்வு அறிக்கைகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளன.

ii. அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்பான 03 ஆய்வுகளை அமுலாக்குவதற்கு ஆரம்பத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

iii. முதுமாணி வெளியீடு தொடர்பிலான நிபுணர்களின் சொற்பொழிவு வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது.

iv. வறுமையினை ஒழிப்பதற்கு உள ஆரோக்கியத்தினைக் கொண்ட இளைய சமுதாயத்தின் பங்களிப்பினை மேம்படுத்தும் கருத்தரங்கு மற்றும் ஆய்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது.

v. அமுலாக்கப்பட்டுள்ள ஆய்வுகளினை ஆராய்தல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் உரிய பங்குதாரர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு இரண்டு நிபுணர்களின் சொற்பொழிவினை முன்னெடுப்பதற்கு ஆரம்பத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

## 1.4.2.4. 2018.01.01 - 2018.12.31 வரையான செலவு

| நிதி மூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவுகள் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 5.00 | 2.183 |

**வறுமையினை ஒழிப்பதற்கு உள ஆரோக்கியத்தினைக் கொண்ட இளைய சமுதாயத்தின் பங்களிப்பினை மேம்படுத்தும் கருத்தரங்கு மற்றும் ஆய்வு**






**முதுமாணி வெளியீடு தொடர்பில் நிபுணர்களின் சொற்பொழிவு**







**நிபுணர் குழு அங்கத்தவர்களுக்கு ஞாபகார்த்த சின்னம் கௌரவ அமைச்சர் பீ. ஹரிசன் அவர்களினால் கரங்களினால் வழங்கப்படுதல்**

## 1.4.3 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

### 1.4.3.1. நோக்கங்கள்

i. மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த அமுற்படுத்துகைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சகல அமுற்படுத்துகை பங்குதாரர்களுடன் இணைநது வினைத்திறன், விளைத்திறனான பணித் தொடர்புகளை வலுவூட்டுதல்.

ii. உதவி தேவையான சகல நபர்களுக்கும் பரந்தளவிலான தேவைப்பாடுகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கென தேவையான வேண்டுகோள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்.

iii. பல்வேறான உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படும் காலத்திற்குத் தேவையான அறிக்கைகளைத் தயாரிப்பதனூடாக தீர்மானமெடுப்பதற்கு உதவுதல்.

iv. மூலோபாயங்கள் மற்றும் வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு வசதிகளை வழங்குதல்.

### 1.4.3.2. மூலோபாயங்கள்

i. திறைசேரி மதிப்பீடுகளின் பிரகாரம் அமைச்சுக்குரிய செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.

ii. வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் காலாண்டு ரீதியில் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்.

iii. அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், விளைவு இலக்காகக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுச் செயற்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

iv. அமைச்சின் வருடாந்தப் பாதீடு, முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை உரிய அதிகாரிகளுக்கு முன்வைத்தல்.

v. புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்து அவற்றினைப் பரிந்துரைகளுக்காகத் தேசியத் திட்டமிடற் திணைக்களத்திற்கு முன்வைத்தல் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினூடாக தேவையான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

vi. பங்குதாரர்களுடன் இலக்கிடப்பட்ட சமுதாயத்திற்கென புதிய நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்குத் தேவையான கூட்டத்தினை நடாத்துதல்.

### 1.4.3.3. விளைவுகள் (2018.12.31 ஆந் திகதி வரை)

- அமைச்சின் செலவுத் தலைப்பு மற்றும் திணைக்களத்தின் செலவுத் தலைப்பு தொடர்பில் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- 05 புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் 12 ஐத் தயாரித்தல் மற்றும் பாதீட்டுத் திணைக்களத்தின் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளை 04 ஐ நிதி அமைச்சு மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- ஜனாதிபதி செயலகத்திற்கு 04 காலாண்டு அறிக்கைகளை முன்வைத்தல்.
- 2017 ஆம் ஆண்டின் செயற்திறன் அறிக்கையினைத் தயாரித்தல்.
- 2018 செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பிலான 01 வேலைத்திட்டம் மற்றும் அத்திட்டத்தினை அமுலாக்கும் முன்னேற்றத்தினை கலந்துரையாடுதற்கு 04 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.

## 1.5 மனித வள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

### 1.5.1 அறிமுகம்

அமைச்சின் நோக்கங்களை எட்டச் செய்வதற்கு அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் அறிவு, உளப்பாங்குகள் மற்றும் திறன்களை மேம்படுத்தி அவர்களின் சேவைகளை விளைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு பல்வேறான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல் இப்பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

### 1.5.2 நோக்கங்கள்

i. அறிவு, திறன் மற்றும் சிறந்த உளப்பாங்குகளினால் நிரம்பிய மனித வளமொன்றினை உருவாக்குதல்.
ii. உத்தியோகத்தர்களின் விளைத்திறனை மேம்படுத்துதல்.
iii. சிறந்த அலுவலகச் சூழலொன்றினை உருவாக்குதல்.
iv. அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை மேம்படுத்துதல்.
v. தொழில், நிறுவனத்தின் மாற்றம் மற்றும் சவால்மிக்க தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊழியர்களை வலுவூட்டுதல்.

### 1.5.3 2018.01.01 - 2018.12.31 வரையான செலவு

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் (ரூ.மி.) | 11.00 | 8.467 |
| மீண்டுவரும் (ரூ.மி.) | - | - |

## 1.5.4 2018.01.01 - 2018.12.31 வரை சுவீகரிக்கப்பட்ட விளைவு

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | பிரதான நோக்கங்கள் | கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளங் காண்பதற்கு “மனித வள மேம்பாடு தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவம்”தொடர்பிலான போதனை. | அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணுதல். | 65 |
| செயற்திறன் திட்டத்தினைச் சரியானவாறு தயாரித்தல், மதிப்பிடுதல் மற்றும் தரப்படுத்துதல் தொடர்பில் நிறைவேற்று உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | சரியான முறைமையில் செயற்திறன் திட்டத்தினைத் தயாரிக்கும் முறை தொடர்பில் நிறைவேற்று உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல். | 50 |
| ஆய்வுத் திட்டம் தொடர்பிலான வேலைத்திட்டம் | அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் ஆய்வுப் பிரச்சினைகளை இனங்காணும் மற்றும் ஆய்வுத் தலைப்புக்களைக் கட்டியெழுப்பும் திறமையினை வளர்த்தல். | 80 |
| சொத்துக்கள்/உபகரணங்கள் விடயம் தொடர்பில் நிலையான சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லுதல், பராமரித்தல் தொடர்பிலான வேலைத்திட்டம். | சொத்துக்களை முகாமை செய்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களின் அறிவினை வளர்த்தல். | 2 |
| Graphic Designing (NVQ Level 4) தொடர்பிலான பயிற்சி | Graphic ஆக்கங்கள் தொடர்பிலான அறிவினை வளர்த்தல். | 1 |
| “சொந்துறு அந்தகரய” அழகான பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்.<br>"සොඳුරු අඬහැරය" | அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் உளநெருக்கீட்டினைக் குறைத்து அதனூடாக திருப்தியான பயன்மிக்க சேவையொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல். | 337 |

| | | |
|---|---|---|
| சிங்கள மொழியில் அலுவலகக் கடிதங்களை எழுதும் முறை மற்றும் எழுத்து மூலம் தொடர்பிலான வேலைத்திட்டம். | விளைத்திறனான அரச சேவையொன்றுக்கு தரமான, சரியான எழுத்துக்கள் மற்றும் இலக்கணங்களைப் பயன்படுத்தி சரியான வகையில் அலுவலகக் கடிதங்களை எழுதும் அறிவினை வளப்படுத்துதல். | 14 |
| அரச ஆவணங்களை முகாமை செய்தல் மற்றும் ஆவணப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பிலான பாடநெறி | நிறுவனங்களின் ஆவணங்களை நிர்வகித்தல், முகாமை செய்தல் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல். | 1 |
| நிதிப் பிரமாணம் மற்றும் கொள்முதற் செயற்பாடு தொடர்பிலான கருத்தரங்கு | நிதிப் பிரமாணம் மற்றும் கொள்முதல் நடைமுறை தொடர்பில் அறிவினை வளப்படுத்துதல். வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு பரீட்சையில் சித்தியெய்துவதற்குத் தேவையான அறிவினை வழங்குதல். | 37 |
| செயற்திறன் அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பில் நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல். | சரியான முறைமையில் செயற்திறன் திட்டத்தினைத் தயாரிக்கும் முறை தொடர்பில் நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல் | 61 |
| நிலைபேறான கொள்முதல் : வெற்றிக்காகச் செயற்படுத்துதல்.(Sustainable Procurement : Executing for Success) தொடர்பிலான வேலைத்திட்டம். | a). நிலையான கொள்முதல் காரணிகளையும் அடையாளங்களையும் கண்டறிதல்<br>b). கொள்முதற் கொள்கைகள், செயற்திட்டங்கள் மற்றும் பயன்பாடுகளினை நிலைபேறாக உள்ளீர்க்கும் முறையினைக் கற்றல்.<br>c). நிலைபேறான கொள்முதல் நடைமுறைக்கு கலந்துகொள்ளும் பங்குதாரர்களின் தேவைப்பாடுகளை உள்ளீர்த்தல். | 5 |
| புதிதாக நியமனம் கிடைக்கப் பெற்ற அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு அமைச்சின் கடமைப் பொறுப்பு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | அமைச்சுக்கும் மற்றும் இணை நிறுவனங்களுக்கும் புதிதாக நியமிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர்களை விழிப்புணர்வூட்டுதல். | 29 |

| | | |
|---|---|---|
| டிஜிட்டல் புத்தாக்கங்களை முகாமை செய்தல் (Managing Digital Innovations) தொடர்பிலான வேலைத்திட்டம். | டிஜிட்டல் புத்தாக்கம், மொழிபெயர்ப்புத் தொடர்பிலான புரிந்துணர்வு மற்றும் அறிவினை நாளதுவரைப்படுத்துதல், டிஜிட்டல் மொழிபெயர்ப்பு மூலோபாயங்களைத் தயாரித்து அமுலாக்குவதற்குத் தலைமைத்துவத் திறன் விருத்தி மற்றும் டிஜிட்டல் மொழிபெயர்ப்பினூடாக நிறுவனத்தின் செயற்திறனினை மேம்படுத்துவதற்கு நேர்க்கணிய எண்ணங்களைக் கட்டியெழுப்புதல். | 4 |
| சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர்பிலான பாடநெறி. (Translation & Interpretation (Sinhala - Tamil - English)) | பல்வேறான கலாசார மற்றும் மொழிசார் தொகுதிகளுக்கிடையே விளைத்திறனான தொடர்பாடலொன்றினை வழங்க க்கூடிய திறமைகளைக் கொண்டு நிரம்பிய மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குதல் மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கமொன்று தொடர்பிலான பாதையினைத் தயாரித்தல். | 1 |
| அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு வெளிப்புறப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | மிகவும் சிறந்த பணிச் சூழலொன்றினை உருவாக்குதலினூடாக வினைத்திறன் மற்றும் விளைத்திறனான சேவையொன்றினை வழங்குவதற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல். | 29 |
| அளவீடுகளை ஆய்வு செய்தல் (MEP Quantity Surveying) தொடர்பிலான பயிற்சி | பல்மாடிக் கட்டிடத் தொகுதிகளில் உள்ளக மின்சாரம், காற்றுச்சீரமைப்புக்கள், மின்தூக்கிகள், நீர் வழங்கல் அமைப்புகள், வடிகால் அமைப்புகள் மற்றும் எரிவாயு குழாய்களினைப் பொருத்துதல். | 1 |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனஞ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்து சகல நாடுகளினாலும் அமுலாக்கப்பட்டு 2030 ஆம் ஆண்டாகும்போது நிறைவேற்றப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சகல உத்தியோகத்தர்களுக்கும் விரிவான புரிந்துணர்வொன்றினை வழங்குதல். | 131 |
| கணக்காய்வு விசாரணைகள் ஏற்படாத வகையில் கடிதக்கோப்புக்களைத் தயாரிக்கும் முறைமை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | கணக்காய்வு விசாரணைகள் ஏற்படாத வகையில் கடிதக்கோப்புக்களைத் தயாரிக்கும் முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டிய கடித ஆவணங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல். | 56 |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்குகள் தொடர்பிலான வேலைத்திட்டம் | 2030 ஆம் ஆண்டாகும்போது நிறைவேற்றப்படவேண்டிய அமைச்சுக்கு மற்றும் இணை நிறுவனங்களுக்கான நிலைபேறான | 37 |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி நோக்குகள் தொடர்பில் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு சரியான புரிந்துணர்வினை வழங்குதல். | |
| அலுவலகப் பணியாளர்களின் உளப்பாங்குகள் மற்றும் வாழ்க்கைத் தொழில் அனுபவத்தினை மேம்படுத்துதல் தொடர்பிலான இரண்டு நாள் வேலைத்திட்டம். | அலுவலகப் பணியாளர்களின் வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் உயர் உத்தியோகத்தர்கள் அவர்களிடமிருந்து சரியான சேவையொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல். | 4 |
| தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் தொடர்பிலான இரண்டு நாள் வேலைத்திட்டம். | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்கள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வினை வழங்குதல். | 19 |
| நன்மைபயக்கும் இரண்டு நாள் பயிற்சி வேலைத்திட்டம். | உதவி உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பு, முறைசார், வினைத்திறன், தனது நிறுவனத்திற்கு மேலாக விளைத்திறனாக நிறைவேற்றும் முறைமை, உரிய உத்தியோகத்தர் நிறுவனத்தினை விட முக்கியமான ஒருவர் என உயர் முகாமைத்துவத்திற்கு புலனாதல் தொடர்பில் கட்டியெழுப்பப்பட வேண்டிய திறன்கள் தொடர்பில் விரிவான புரிந்துணர்வினை வழங்குதல். | 16 |
| சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் SIYB வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | அனுராதபுர மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு SIYB பயிலுனர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்கி அது தொடர்பில் வர்த்தகத்தினைக் கட்டியெழுப்புதல் மற்றும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கி அதனூடாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் அனுராதபுர மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டி உயர் பொருளாதாரப் பயன்களை சுவீகரித்துக் கொள்ளுதல். | 31 |
| உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் சான்றிதழ் வழங்கும் பாடநெறி. | அரச நிறுவனங்களில் நிதிசார் பொறுப்பு, வினைத்திறனாகவும் மற்றும் விளைத்திறனாகவும் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் அலசி ஆராய்ந்து உயர் | 3 |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுதல் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுக்கு உள்ள பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்களின் அறிவினை வளப்படுத்துதல். | |
| விளைத்திறனாக ஆங்கிலக் கடிதங்களை எழுதுதல் மற்றும் எழுத்துமூலம் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பிலான இரண்டு நாள் வேலைத்திட்டம். | விளைத்திறனான அரச சேவையொன்றுக்கான தரம் மற்றும் சரியாக ஆங்கிலக் கடிதங்களை எழுதுதல் தொடர்பில் விரிவான புரிந்துணர்வினை வழங்குதல். | 41 |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்குகள் தொடர்பிலான இரண்டு நாள் வேலைத்திட்டம். | செயற்பாட்டுத் திட்டம் (மூலோபாயத் திட்டம்) தயாரிப்பதை நிறைவு செய்வதற்கு நடாத்தப்பட்ட வேலைத்திட்டம். | 21 |
| தகவல் தொழில்நுட்பத்திற்கான பொருட்கள் கொள்முதல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பில் இரண்டு நாள் வேலைத்திட்டம். | அரச அலுவலகங்களில் பாவிக்கப்படும் தகவல் தொழில்நுட்பத்திற்கான பொருட்கள் கொள்முதல் நடைமுறை தொடர்பில் விரிவான அறிவினை வழங்குதல் மற்றும் அச்செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்வேளையில் எழுகின்ற நடைமுறை நிலைமைகளை இனங்காணுதல். | 11 |
| சொத்துக்களை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | சொத்துக்களை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வு தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு விரிவான புரிந்துணர்வொன்றினை வழங்குதல். | 63 |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வெளிப்புறப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல். | மிகவும் சிறந்த பணிச் சூழலொன்றினை உருவாக்குவதனூடாக வினைத்திறன் மற்றும் விளைத்திறன் சேவையொன்றினை வழங்குவதற்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் | 31 |
| அரச உத்தியோகத்தரின் பண்பு மற்றும் அரச ஊழியர்களின் தொழில் திருப்தியினை வளப்படுத்துதல் மற்றும் நடத்தை வேறுபாடுகளின் காரணமாக இடம்பெறும் பொதுவான தவறுகள் தொடர்பிலான கருத்தரங்கு. | அரச உத்தியோகத்தர்களின் உள விருத்தியினூடாக மனப்பாங்குகளை மேம்படுத்தி பயனாளிகளுக்கு சரியான சேவையொன்றினை வழங்குதலினூடாக உத்தியோகத்தர்களினதும், அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை உயர்த்துதல். | 175 |
| அலுவலகக் கடிதங்கள் மற்றும் சிங்கள எழுத்து மூல மொழி தொடர்பில் இரண்டு நாள் பாடநெறி. | விளைத்திறனான அரச சேவை தொடர்பில் தரம், சரியான எழுத்து மற்றும் சரியான இலக்கணங்களைப் பயன்படுத்தி சரியான வகையில் அலுவலகக் கடிதங்களை எழுதும் | 50 |

| | | |
|---|---|---|
| | திறனினை வளப்படுத்துதல். | |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை இலக்கு வைத்து நடாத்தப்படும் மூன்றுநாள் கருத்தரங்கு. | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை வெற்றிகரமாக சித்தியெய்தும் பொருட்டு அதன் விடயப் பரிந்துரை தொடர்பில் விரிவான அறிவினை வழங்குதல். | 14 |
| பயிலுனர்களின் அப்பியாசம் செய்யும் ஆரம்பத் திறன் மேம்பாடு- இரண்டு நாள் கருத்தரங்கு. | கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பயிற்சியளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியினை வழங்குபவர் விளைத்திறனான பயிற்றுவிப்பாளராக செயற்படுவதற்கு தமது நடத்தை, அறிவு மற்றும் திறமைகளை எவ்வாறு மாற்றுவது என்பது தொடர்பிலும், பயிற்சியளிக்கும்போது மிகவும் பயனுள்ளவாறு அச்செயற்பாடுகளை முன்னெடுப்பது எவ்வாறு என்பது தொடர்பிலும் அடிப்படை அறிவினை வழங்குதல். | 24 |
| வாகனங்கள் மற்றும் பொறித்தொகுதிகளை நிர்வகித்தல் தொடர்பிலான இரண்டு நாள் கருத்தரங்கு | அரச நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் பொறித்தொகுதிகளை நிர்வகித்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல். | 3 |
| இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை உத்தியோகத்தர்களுக்கு வெளிப்புற பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல். | மிகவும் சிறந்த பணிச் சூழலொன்றினை உருவாக்குவதனூடாக வினைத்திறன் மற்றும் விளைத்திறனான சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல். | 46 |
| கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வெளிப்புற பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல். | மிகவும் சிறந்த பணிச் சூழலொன்றினை உருவாக்குவதனூடாக வினைத்திறன் மற்றும் விளைத்திறனான சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல். | 42 |
| ஓய்வூதியம் தொடர்பிலான கருத்தரங்கு. | ஓய்வூதியம் தொடர்பிலான நடைமுறை தொடர்பில் விரிவான அறிவினை வழங்குதல். | 12 |
| ஊழியர்களுக்குச் சிறந்த சேவையினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களினை உளப்பாங்கு ரீதியில் ஊக்குவிப்பதற்கு | அரச ஊழியர்களின் உளப்பாங்குகளை மேம்படுத்தி பயனாளிகளுக்கு சரியான சேவையொன்றினை வழங்குவதனூடாக | 215 |

| | | |
|---|---|---|
| கருத்தரங்கொன்றினை நடாத்துதல் | உத்தியோகத்தர்களினதும், அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை மேம்படுத்துதல். | |
| வளர்த்தல் தொடர்பில் உள விருத்தியினூடாக மனவழுத்த முகாமைத்துவத்தினை மேற்கொள்ளுதல் மற்றும் மக்கள் சேவையொன்றினை வழங்குவதற்கு உணர்திறன் அரச ஊழியரினூடாக கட்டியெழுப்புதல் தொடர்பிலான எழில்மிக்க நிகழ்ச்சித் திட்டம். | அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் உள நெருக்கீட்டினை குறைத்து அதனூடாக திருப்திகரமான விளைத்திறனானதும் மற்றும் வினைத்திறனானதுமான சேவையொன்றினை வழங்குதல். | 192 |
| தொழில் வாழ்க்கையின் வெற்றிக்கும் மற்றும் உன்னத சேவையொன்றினை வழங்குவதற்கும் உணர்வுபூர்வமாக சிந்திக்கும் ஆற்றலினை மேம்படுத்துதல். (முதலாவது குழு) | அரச ஊழியர்களின் உளப்பாங்குளை மேம்படுத்தி, பயனாளிகளுக்கு சரியான சேவையொன்றினை வழங்குவதனூடாக அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை உயர்த்துதல். | 55 |
| இந்தியாவில் சமூக விஞ்ஞானம் தொடர்பிலான டாட்டா நிறுவனத்தின் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் மற்றும் மும்பாய் நகரத்தில் மாதிரிக் கிராமங்களைப் பார்வையிடுவதற்கான வெளிநாட்டுச் சுற்றுலா | • சமூகப் பணி தொடர்பிலான கல்வி, பயிற்சிப் பயன்கள், ஆய்வுகள் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.<br>• தெற்காசியாவில் அமுலாக்கப்படும் சமூகப் பணி தொடர்பிலான கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு வலையமைப்பொன்றினைக் கட்டியெழுப்புதல்.<br>• சமூகப் பணி நடைமுறைகளின் கீழ் "சுகுறு கம்மான" போன்ற எண்ணக்கரு தொடர்பில் விரிவான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் | 11 |
| தொழில் வாழ்க்கையின் வெற்றிக்கும் மற்றும் உன்னத சேவையொன்றினை வழங்குவதற்கும் உணர்வுபூர்வமாக சிந்திக்கும் ஆற்றலினை மேம்படுத்துதல். (இரண்டாவது குழு) | அரச ஊழியர்களின் உளப்பாங்குளை மேம்படுத்தி, பயனாளிகளுக்கு சரியான சேவையொன்றினை வழங்குவதனூடாக அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை உயர்த்துதல். | 62 |
| உத்தியோகத்தர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைச் சமநிலையில் வைத்திருப்பதற்கு நடாத்தப்பட்ட யோகாப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தி அதனூடாக பயனாளிகளுக்கு சரியான சேவையொன்றினை வழங்குவதனூடாக அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை மேம்படுத்துதல். | 60 |

| | | |
|---|---|---|
| விஞ்ஞானபூர்வமாகவும் மற்றும் சிக்கனத்துடனும் வாகனங்களை ஓட்டுதல் தொடர்பிலான ஒருநாள் கருத்தரங்கு (செய்முறை மற்றும் நடைமுறைப் பயிற்சி) | சாரதிகளுக்கு பழைய மற்றும் புதிய வாகனங்கள் தொடர்பிலான அறிவினை வழங்கி சரியான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி குறைந்த எரிபொருள் ஆற்றலுடன், ஒழுக்கம், பாதுகாப்பு வீதிச் சட்டதிட்டங்களுக்கு இசைந்து வாகனம் ஓட்டுவதன் முக்கியத்துவத்தினை உணர்த்துதல். | 28 |



## 1.6 சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு

### 1.6.1 அறிமுகம்

சமுர்த்திப் பயனாளிகள் வாழும் பின்தங்கிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கருத்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்தல் சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும். அதற்கு மேலாக அமைச்சின் கீழ் கண்காணிக்கப்படும் கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதும் இடம்பெற்று வருகின்றது.

### 1.6.2 நோக்கங்கள்

i. சமூகத்தில் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சமுதாயத்தினை, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் அமுலாக்குதல்.
ii. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக அமுற்படுத்தப்படும் கருத்திட்டங்களைக் கண்காணித்தல்.
iii. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சொத்துக்களை கையகப்படுத்துதல் தொடர்பில் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

iv. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுலாக்குதல் மீளாய்வு செய்தல்.
v. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுலாக்குதல் மீளாய்வு செய்தல்.
vi. தேசிய சமூகப் பாதுகாப்புச் சபையின் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுலாக்குதல் மீளாய்வு செய்தல்.

## 1.6.3 2018 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட விளைவு (2018.12.31 ஆந் திகதி வரை)

i. சமுர்த்திப் பயனாளிகள் வாழும் பின்தங்கிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 77 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.
ii. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு காணிகளை கையகப்படுத்துதல் தொடர்பில் கௌரவ அமைச்சரின் 04 பரிந்துரைகள், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 29 காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 1.6.4 எதிர்பார்க்கப்பட்ட சமூகப் பொருளாதார விளைவு

சமூகம் மற்றும் பொருளாதாரம் என்றவாறு சமுதாயத்தினை வலுவூட்டுதல்.

## 1.6.5 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு - 2018

| மூலதனம் (ரூ.மி.) | மீண்டுவரும் (ரூ.மி.) |
|---|---|
| 400.00 | - |

## 1.6.6 2018.01.01 - 2018.12.31 வரையான செலவு

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 400.00 | 94.46 |

## 1.6.7 2018.01.01 - 2018.12.31 வரை அமுலாக்கப்பட்ட கருத்திட்ட செயற்பாடுகளின் தகவல்கள்.

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் – இலக்கம் 01** | **அரச காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிகள் மற்றும் தாய்ச் சங்கங்களை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைத்தல்.** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், காணி மற்றும் பாராளுமன்ற அமைச்சுக்கிடையே ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல். |
| **இடங்கள்** | நாடுபூராவும் 1074 சமுர்த்தி வங்கிகள் மற்றும் 331 தாய்ச் சங்கங்கள். |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள் |
| **காலவரையறை** | 2018 ஜனவரி தொடக்கம் |
| **விளைவு** | காணிகளை கையகப்படுத்துதல் தொடர்பில் கௌரவ அமைச்சரின் 04 பரிந்துரைகள், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 29 காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம்** 02 | **சமுர்த்திப் பயனாளிகள் வாழும் பின்தங்கிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.** |
| **செயற்பாடுகள்** | வடிகால், கால்வாய்கள், மதகுகள், சிறு பாலங்கள் கிளை வீதிகள், கூரை, பக்கச் சுவர்கள், போக்குவரத்து வசதிகள், நீர் வசதிகள், சேவை நிலையங்கள், விற்பனை நிலையங்கள், வாரச் சந்தைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதி கருத்திட்டங்களை அமுலாக்குதல். |
| **இடங்கள்** | யாழ் மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், இரத்தினபுரி மாவட்டம், காலி மாவட்டம், கம்பாந்தோட்டை மாவட்டம், கம்கபா மாவட்டம். |
| **இலக்கிடப்பட்ட குழு** | கருத்திட்டத்தின் மூலம் பயன்களைப் பெறும் சமுர்த்தி மற்றும் சமுர்த்தியல்லாத பயனாளிகள். |
| **காலவரையறை** | 2018.07.11 – 2018.12.31 |

இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவின் கீன்யாய பாழடைந்த வீதி மற்றும் கொங்கிரிட் போடப்பட்டதன் பின்னரான வீதி





02

# கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்



# கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

## 2.1 அறிமுகம்

1974 ஆம் 2 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகம், பங்களிப்பு மேம்பாட்டு மூலோபாயம், வறுமையினை ஒழிக்கும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினைப் பிரயோகிப்பதில் முன்னணியில் திகழும் நிறுவனமாகும். பிரதான அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட வறிய மக்களினை பங்களிப்பு மேம்பாட்டு மூலோபாயத்தின் மூலம் வலுவூட்டி அவர்களை மீண்டும் பிரதான அபிவிருத்தி நீரோட்டத்துடன் ஒன்றிணைக்கும் தந்திரோபாயமான நிறுவனமொன்றாக இந்நிறுவனம் செயற்படுகின்றது. ஜனசவிய, சமுர்த்தி, கமனெகும, போன்ற வறுமையினை ஒழிக்கும் அரசின் பிரதான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மக்கள் பங்களிப்பின் கீழ் அமுலாக்குவதற்குத் தேவையான சமூக உயிர்ப்பு முறைமையினை அறிமுகஞ் செய்து பிரதான பங்களிப்பொன்றினை வழங்கியுள்ளது. விசேடமாக வறுமையினை ஒழிக்கும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய அபிவிருத்தி அணுகுமுறை தொடர்பில் பல்வேறான பரிசோதனைகள் இடம்பெறுகின்ற, செயற்பாட்டு ஆய்வு தொடர்பில் வெற்றிகரமான அனுபவங்களைக் கொண்ட நிறுவனமொன்றாகும். இக்கடமைப் பொறுப்பினை செயற்படுத்துவதற்கு பயிற்சி, ஆய்வு, வெளியீடு மற்றும் விநியோகம் என்ற பிரதான பிரிவுகளின் கீழ் நிறுவனம் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 2.2 தொலைநோக்கு

“சௌபாக்கியத்துடன்கூடிய இலங்கை தொடர்பில் வலுவூட்டப்பட்ட கிராமிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிறுவனமாகத் திகழ்ச் செய்தல்”

## 2.3 பணிக்கூற்று

பங்களிப்பு மேம்பாட்டு மூலோபாயத்தினைப் பிரயோகிப்பதனூடாக சமுதாயத்தினை வலுவூட்டி நிலைபேறான மேம்பாட்டுக்காக அவர்களின் செயலூக்கமான பங்களிப்பினை உச்சளவாக்குவதற்கு பயிற்சி ஆய்வு மற்றும் தகவல்களைத் தயாரிப்பதனூடாக பங்களிப்புச் செய்தல்.

## 2.4 நோக்கங்கள்

I. கிராமிய அபிவிருத்தியின் ஒரு அடிப்படைத் திட்டமாக பங்களிப்பு அபிவிருத்தித் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்.
II. குடும்பங்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களை வலுவூட்டுவதற்கு நேரடியாகத் தொடர்படும் வகையில் வெளிக்கள உத்தியோகத்தர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்.
III. மாகாண கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்கு மாகாண சபைகளுடன் ஒருங்கிணைப்பினைக் கட்டியெழுப்புதல்.
IV. அரையாண்டு மற்றும் காலாண்டு என்ற ரீதியில் தகவல்களை வெளியிடுதல்.
V. சமுதாயத்தினை வலுவூட்டுவதற்கு காலத்திற்குப் பொருத்தமான தலைப்புக்களின் கீழ் திறந்த பட்டிமன்றங்களை நடாத்துதல்.
VI. கொள்கை வடிவமைப்பாளர்கள், அபிவிருத்திப் பணியாளர்கள், கிராம அபிவிருத்திச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் அபிவிருத்தி வெளியீடுகளை வருடந்தோறும் வெளியீடு செய்தல்.
VII. அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து கிராம அபிவிருத்தி தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல்.

## 2.5 2018 ஆம் ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட விளைவு

- வடமேல் மாகாணத்தின் கிராம மட்ட முதியோர்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள், சமூகப் பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியில் வலுவூட்டுவதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.
  குருனாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 09 பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம செயற்பாட்டாளர்களை விழிப்புணர்வூட்டியதனூடாக 600 சிறு தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்தல்.

- **மாதிரிக் கிராமங்களைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்.**
  குருநாகல் மாவட்டத்தின் சியம்பலாவகர கிராமத்தில் 85 குடும்பங்களையும் மற்றும் மாத்தளை மாவட்டத்தின் ஆலோக்ககம கிராத்தில் 189 குடும்பங்களையும் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்கு விரிவாக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மக்கள் பங்களிப்புடன், சேமிப்பு, கடன்கள், வீட்டுத் தோட்ட மேம்பாடு, ஆன்மீகம்சார் மேம்பாடு, சிறுவர் விருத்தி, நிதியினைச் சேகரித்தல், சமூகப் பாதுகாப்பு, வாரச் சந்தை, கல்விச் சுற்றுலாக்கள், மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவ் வருடத்தில் சேகரிக்கப்பட்ட நிதியின் அளவு ரூபா. 70,0000.00 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

- **அபிவிருத்தி மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பிலான தொகுப்பினை மீளவும் பிரசுரித்தல்.**
  500 பிரதிகள் அச்சுப் பதிக்கப்பட்டுள்ளன.

- **தரணய செய்திக் கதிரினை அச்சுப் பதித்தல்**
  தரணய செய்திக் கதிர் தொடர்பில் 1000 பிரதிகள் அச்சுப் பதிக்கப்பட்டுள்ளன.

- **கிராமிய அபிவிருத்தி தொடர்பிலான இணையத்தளத்தினை நாளதுவரைப்படுத்தல்**
  இணையத்தளம் உருவாக்கப்பட்டு ஜனவரி மாதம் பொதுமக்கள் உரித்திற்கு ஒப்படைத்ததன் பின்னர் நாளதுவரைப்படுத்தல் இடம்பெற்றுள்ளது.

- **நூலகத்திற்கான புத்தகங்களைக் கொள்வனவு செய்தல்.**

  பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ நிலையங்களின் நூலகங்களுக்கு 300 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

- **சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல்.**
  இதன் கீழ் 20 மாவட்டங்களின் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் 433 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, குடும்பங்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு பயிற்சியளிப்பதற்கு 22 நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு. 433 உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

- **உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் விருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்குதல்.**
  உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 20 அமைச்சின் ஒதுக்கீடுகளினூடாக இடம்பெற்றுள்ளது.

- **நிறுவன வளாகத்தினுள் பௌதிக வளங்கள் மற்றும் உள்ளகச் சூழலினை மேம்படுத்துதல்.**
  1.9 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிறுவனத்தின் போதனை மண்டபம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
- **பிலிமத்தலாவ பயிற்சி நிலையத்தின் புதுப்பிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.**
  21.9 மில்லியன் செலவு செய்யப்பட்டு வதிவிட விடுதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

## 2.6 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு - 2018

| மூலதனம் (ரூ.மி.) | மீண்டுவரும் (ரூ.மி.) |
|---|---|
| 11 | 39 |

## 2.7 2018.01.01 - 2018.12.31 வரையான செலவுகள்

| ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மீண்டுவரும் (ரூ.மி.) | - 39.00 | 36. 91 |
| மூலதனம் (ரூ.மி.) | - 11.00 | 4.04 |

மாதிரிக் கிராம கருத்திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திய வேளையில்



திட்டமிடல் செயற்பாட்டு பயிற்சிச் செயற்றிட்டம்



கிராமிய அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான புத்தகம்



பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டவேளையில்



03

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்



# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

## 3.1 அறிமுகம்

2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்ட இந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளாவன, 14 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நலன்புரியினை வழங்குதல், சமூகப் பாதுகாப்பு நிதியத்தினூடாக அக்குடும்பங்களின் அன்றாட முக்கியமான தருணங்களில் பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிய கொடுப்பனவுகளை வழங்குதல், இலங்கையில் வறுமையினை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு அக்குடும்பங்களை வலுவூட்டுவதற்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 1074 சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக நாடுபூராவுமுள்ள அவ்வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகள் குடும்பங்களுக்குத் தேவையான பல்வேறான நுண்நிதியக் கடனினைத் திட்டமிடுதல், அதற்கு மேலாக, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகளான மக்களை ஒன்றாக இணைத்து சமுதாய அடிப்படை அமைப்புக்களின் வலையமைப்பொன்றினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல், சமூக அபிவிருத்திக்கான பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல் என்பனவாகும்.

## 3.2 தொலைநோக்கு

"2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற, வலுவூட்டப்பட்ட வளமான இலங்கையொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் முன்னோடி நிறுவனமாக விளங்குதல்,"

## 3.3 பணிக்கூற்று

ஓரங்கட்டப்பட்ட மக்களினை (பொருளாதாரம்சார், சமூகம்சார், அரசியல்சார், பௌதிக, உள, சட்டம் மற்றும் சுற்றுச்சூழல்) வலுவூட்டுதல் மற்றும் பிரதேசத்தின் முரண்பாட்டினைக் குறைப்பற்கு வினைத்திறன், உற்பத்தித் திறன், விரைவு மற்றும் விளைத்திறனான தீர்வுகளை சிநேகபூர்வத்துடன் செயற்படுத்துவதற்கு, திணைக்களங்கள், சமுதாய மட்ட அமைப்புக்கள், நுண்நிதிய நிறுவனங்களின் வலையமைப்பு, தொழில்வாண்மையாளர்கள், அரச, பிரத்தியேக, பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரிவுகளின் உன்னத பங்களிப்பு, உள்ளூர், சர்வதேச நிறுவனங்களின் கலந்துகொள்ளலுடன், வறுமையற்ற வளமான தேசமொன்றினைக் கட்டியெழுப்புவதனூடாக பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.

## 3.4 நோக்கங்கள்

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக 2018.01.01 - 2018.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- ✓ 1,400,000 வறிய குடும்பங்களின் அன்றாட நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- ✓ பிறப்பிலிருந்து மரணம் வரையான விசேட வேளைகளில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதிசார் பயன்களை வழங்கி, 1,400,000 குடும்பங்களுக்குச் சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.

- ✓ 1,400,000 வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களின் வருமான மட்டத்தினை ரூபா. 5,000/- ஆக அதிகரித்தல்.
- ✓ 36,000 சமுதாய மட்ட அமைப்புக்கள், 331 பிரதேச அமைப்புக்கள் மற்றும் 25 மாவட்ட அமைப்புக்களை உருவாக்கி வறிய குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூகச் செய்றபாடுகளை வலுவூட்டுதல்.
- ✓ 1,400,000 வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு 1074 சமுர்த்தி வங்கிகளினூடாக வருடமொன்றுக்கு ரூபா. 25,000 மில்லியன் நுண் நிதியக் கடன் வசதிகளை வழங்குதல்.

## 3.5 மூலோபாயங்கள்

- ➢ 04 தொகுதிகளின் கீழ் (ரூபா. 3,500, ரூபா. 2,500, ரூபா. 1,500 மற்றும் ரூபா. 420 என்றவாறு) 1,400,000 வறிய குடும்பங்களினை அடையாளங் கண்டு, சமுர்த்தி நிவாரண உதவிகளை வழங்குதல்.
- ➢ மேற்குறிப்பிட்ட வறிய குடும்பங்களின் குழந்தைப் பிறப்புக்கள், திருமணங்கள், நோய்கள், மரணங்கள் மற்றும் பிள்ளைகளின் கல்வி போன்ற வேளைகளில் உரிய தகவல்களப் பிரதேச மட்டங்களில் சரியானவாறு பெற்று சமூகப் பாதுகாப்புப் பயன்களை வழங்குதல்.
- ➢ சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத் தேவைகளை இனங்கண்டு அதற்கு ஏற்றவாறு வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.
- ➢ சமுதாய அடிப்படை அமைப்புக்கள் தொடர்பில் வெளிக்கள உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டி, அவர்களினைக் கொண்டு, வறுமை மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகள் குடும்பங்களினை இலக்காகக் கொண்ட சமுதாய அடிப்படை அமைப்புக்கள், பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்ட அமைப்புக்களை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல்.
- ➢ வறிய மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகள் குடும்பங்களின் கடன் தேவைகளை இனங்கண்டு, அவர்கள் தொடர்பில் சமுர்த்தி வங்கிகளூடாக பல்வேறான நுண்நிதியச் சேவைகளை அமுற்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலக்குகளை வழங்குதல்.

## 3.6 2018 ஆம் ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட பலாபலன்கள் (2018.12.31 ஆந் திகதி வரை)

### 01. வாழ்வாதார அபிவிருத்தி

i. சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு, 2,163 விவசாயக் கருத்திட்டங்கள், 1,139 விலங்கு வளர்ப்புக் கருத்திட்டங்கள், 170 மீன்பிடி அபிவிருத்திக் கருத்திட்டங்கள், 7,728 சிறு கைத்தொழில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் 312 இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சியினை வழங்குவதை உள்ளடக்கி . 19,147 மொத்தக் கருத்திட்டங்களை நிறைவு செய்தல். (நிதிசார் செலவு ரூபா. 506.89 மில்லியனாகும்.)

ii. திரிய பியச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூபா.150,000/- என்றவாறு 1,018 நபர்களுக்கு 1,018 வீடுகளை நிர்மாணித்தல். (நிதிசார் செலவு ரூபா. 187.32 மில்லியனாகும்.)

iii. கைக்குளு சிறுவர் சமூக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3400 பிள்ளைகளை தேசிய மட்டத்தின் சாகித்திய மற்றும் கலாசார போட்டிகளுக்கு அனுப்புதல். (நிதிசார் செலவு ரூபா. 17.89 மில்லியனாகும்.)

iv. மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச மட்டத்தில் 22 வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துவதனூடாக 3,000 முயற்சியாண்மையாளர்களுக்கு சந்தைவாய்ப்புக்களை வழங்குதல். முயற்சியாண்மை மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலின் கீழ் 1,546 முயற்சியாண்மையாளர்களுக்கு வசதிகளை வழங்குதல். 609 முயற்சியாண்மை மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். (நிதிசார் செலவு ரூபா. 110.5 மில்லியனாகும்.)

v. வீடமைப்பு லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூபா. 200,000 என்னறவாறு 3,972 பயனாளிகளுக்கு 3,972 வீடுகளை நிர்மாணித்தல். (நிதிசார் செலவு ரூபா. 794.4 மில்லியனாகும்.)

vi. விசேட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 நபர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூபா. 200,000 என்றவாறு 24 வீடுகளை நிர்மாணித்தல். நிதிசார் செலவு ரூபா. 4.70 மில்லியனாகும்.

vii. போதைப்பொருள் பாவனை போன்ற தகாத பழக்கங்களின் காரணமாக குடும்ப அலகு முகங்கொடுக்கும் பிரச்சினைகளைக் குறைத்து அவர்களுக்கிடையே மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையினைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் 316 ஆன்மீகம்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுற்படுத்தி, குடும்ப அலகினுள் குதூகலத்தினையும் மற்றும் ஒருமைப்பாட்டினையும் மேம்படுத்துதல். (நிதிசார் செலவு ரூபா. 7.02 மில்லியனாகும்.)

viii. பசுமையினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 8,575 குடும்பங்களுக்கு தென்னங்கன்று மற்றும் வெவ்வேறான இனவிருத்திக் கன்றுகளை வழங்குதல் (நிதிசார் செலவு ரூபா. 18.89 மில்லியனாகும்).

ix. நாடுபூராவும் 30,211 சமுதாய மட்ட அமைப்புக்கள், 331 பிரதேச அமைப்புக்கள், 25 மாவட்ட அமைப்புக்கள், சமுதாய மட்ட அமைப்புக்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களினை உள்ளடக்கி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல். (நிதிசார் செலவு ரூபா. 26.48 மில்லியனாகும்.)

x. விளையாட்டு மேம்பாடு மற்றும் தேகாரோக்கியச் செயற்பாடுகளின் கீழ் சமுர்த்தி உத்தியோத்தர்கள் மற்றும் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களின் பிள்ளைகளின் விளையாட்டுத் திறன்களினை மேம்படுத்துதல். (நிதிசார் செலவு ரூபா. 20.0 மில்லியனாகும்.)

## 02.சமூக நலன்புரி

1,384,021 வறிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகளை வழங்கி அவர்களின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல். 2018.12.31 ஆந் திகதியன்று வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிகளின் நிதிசார் பெறுமதி ரூபா. 39,238 மில்லியனாகும்.

## 03.சமூகப் பாதுகாப்பு

சமுர்த்திப் பயனாளி குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு அக்குடும்பங்களின் 6,707 பிறப்புக்களுக்கும், 29,544 திருமணங்களுக்கும், 58,578 நோய்களுக்கும், 29,620 மரணங்களுக்கும் என்றவாறு சமூகப் பாதுகாப்புப் பயன்களின் மொத்தப் பயனாளிகள் 1,521,741 நபர்களுக்கு ரூபா. 1,159.47 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 04.நுண் நிதியக் கடன் திட்டம்

1,074 சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகளினூடாக, ரூபா. 56,399.74 பெறுமதியான நிதிவசதிகளை வழங்குதல். வழங்கப்பட்டுள்ள கடன்களின் அளவு 687,408 ஆகும்.

## 3.7 எதிர்பார்க்கப்பட்ட சமூகப் பொருளாதார விளைவு

i. சமுர்த்திப் பயனாளி குடும்பங்களின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு, பல்வேறான வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தியதனூடாக, 2018 ஆம் ஆண்டில் 125,000 குடும்பங்களின் மாதாந்த வருமானத்தினை ரூபா. 5,000 ஆல் அதிகரித்தல் மற்றும் அவர்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல்.

ii. வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5,014 வீடுகளை நிர்மாணிப்பதனூடாக வறிய குடும்பங்களின் வீட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

iii. 331 ஆன்மீகம்சார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களின் 3,400 பிள்ளைகள், தேசிய மட்ட சாகித்தியப் போட்டிகளில் சாதனைகளைப் பெற்றுக் கொண்டதனூடாக, சமூக மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

iv. நாடுபூராவுமுள்ள 25 மாவட்டங்கள் மற்றும் 331 பிரதேச செயலகப் பிரிவுகளில் முயற்சியாண்மைச் சங்கங்களினை உருவாக்குவதனூடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுவான பங்களிப்பொன்றினை வழங்குதல்.

v. 1,384,021 வறிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகளை வழங்குவதனூடாக அவர்களின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

vi. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், 1,521,741 சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களுக்கு, பிறப்புக்கள், திருமணங்கள், நோய்கள், மரணங்கள் மற்றும் பிள்ளைகளின் கல்வி போன்ற தருணங்களில் நிதிசார் உதவிககளை வழங்குவதனூடாக அக்குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை மேம்படுத்துதல்.

vii. 1074 சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகளினூடாக ரூபா. 56,399.74 மில்லியன் பெறுமதியான நிதிசார் உதவிகளை வழங்கியதனூடாக, நாட்டின் அண்ணளவான தேசிய உற்பத்திக்கு மேற்குறிப்பிட்ட விநியோகக் கடன் மற்றும் சிறந்த பங்களிப்பினை வழங்குதல்.

## 3.8 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு-2018

| மூலதனம் (ரூ.மி.) | மீண்டுவரும் (ரூ.மி.) |
|---|---|
| 2,038.4 | 14,163.7 |

## 3.9 2018.01.01 - 2018 12.31 வரையான செலவு

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 2,038.40 | 1,097.19 |
| மீண்டுவரும் | 14,165.60 | 12,993.89 |
| நிதியம் | _ | _ |
| சமுர்த்தி நிவாரண உதவி | 39,600.00 | 39,238.00 |
| சமூகப் பாதுகாப்பு நிதியம் | 1,668.00 | 1,159.47 |
| வீடமைப்பு லொத்தர் நிதியம் | 834.00 | 794.40 |
| நுண்நிதிய வங்கி நிதி | - | 56,399.74 |

## 3.10. அமுற்படுத்திய வேளையில் முகங்கொடுத்த சவால்கள்.

i. திணைக்கள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான நிர்வாகப் பிரச்சினைகள் தீர்வு காணப்படாமையினால் எழுந்துள்ள கணக்குகள் மற்றும் வெளிக்களப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இயலாமற் போதல்.

ii. சரியான காலத்திற்கு, நேரத்திற்குத் திறைசேரி நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டமையினால் திட்டமிடப்பட்டுள்ள காலலவரையறையினுள் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதற்கு இயலாமற் போதல்.

iii. அமைச்சு மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகங்கள் அடிக்கடி மாறுபட்டமையின் காரணமாக செயற்பாட்டுத் திட்டம் அடிக்கடி மாறுபடுதல்.

## 3.11. பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்தச் சாதனைகள்

i. 1,384,021 வறிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகளை வழங்கி அவர்களின் நுகர்வுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல். 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையில் வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிகளின் பெறுமதி ரூபா. 39,238 மில்லியனாகும்.

ii. சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு, அக்குடும்பங்களின் 6,707 பிறப்புக்களுக்காகவும், 29,544 திருமணங்களுக்காகவும், 58,578 நோய்களுக்காகவும், 29,620 மரணங்களுக்காகவும் மற்றும் 15,000 புலமைப்பரிசில்கள் என்றவாறு 1,521,741 மொத்தக் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்புப் பயன்களை வழங்குதல். இற்றை வரையில் வழங்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புப் பயன்களின் நிதிசார் பெறுமதி ரூபா. 1,159.47 மில்லியனாகும்.

iii. சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு, 2,163 விவசாயக் கருத்திட்டங்கள், 1,139 விலங்கு வளர்ப்புக் கருத்திட்டங்கள், 170 மீன்பிடி அபிவிருத்திக் கருத்திட்டங்கள், 7,720 கைத்தொழில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மற்றும் 312 இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சியினை வழங்குதல் உட்பட 19,147 மொத்தக் கருத்திட்டங்களையும் நிறைவு செய்தல்.(மொத்தச் செலவு ரூபா. 506.89 மில்லியனாகும்)

iv. திரிய பியச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூபா.150,000/- என்றவாறு 1,018 நபர்களுக்கு 1,018 வீடுகளை நிர்மாணித்தல். (நிதிசார் செலவு ரூபா. 187.32 மில்லியனாகும்.)

v. கைக்குளு சிறுவர் சமூக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3400 பிள்ளைகளை தேசிய மட்டத்தின் சாகித்திய மற்றும் கலாசார போட்டிகளினூடாக தேர்ந்தெடுத்து அவர்களின் திறமைகளைப் பாராட்டுதல்.

vi. மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச மட்டத்தில் 22 வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துவதனூடாக 3,000 முயற்சியாண்மையாளர்களுக்கு சந்தைவாய்ப்புக்களை வழங்குதல். முயற்சியாண்மை மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலின் கீழ் 1,546 முயற்சியாண்மையாளர்களுக்கு வசதிகளை வழங்குதல். 609 முயற்சியாண்மை மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். (நிதிசார் செலவு ரூபா. 110.5 மில்லியனாகும்.)

vii. வீடமைப்பு லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ரூபா. 200,000 என்னறவாறு 3,972 பயனாளிகளுக்கு 3,972 வீடுகளை நிர்மாணித்தல். (நிதிசார் செலவு ரூபா. 794.4 மில்லியனாகும்.)

viii. விசேட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 நபர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூபா. 200,000 என்றவாறு 24 வீடுகளை நிர்மாணித்தல். நிதிசார் செலவு ரூபா. 4.70 மில்லியனாகும்.

ix. போதைப்பொருள் பாவனை போன்ற தகாத பழக்கங்களின் காரணமாக குடும்ப அலகு முகங்கொடுக்கும் பிரச்சினைகளைக் குறைத்து அவர்களுக்கிடையே மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையினைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் 316 ஆன்மீகம்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுற்படுத்தி, குடும்ப அலகினுள் குதூகலத்தினையும் மற்றும் ஒருமைப்பாட்டினையும் மேம்படுத்துதல். (நிதிசார் செலவு ரூபா. 7.02 மில்லியனாகும்.)

x. 1074 சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக 687,408 பயனாளிகளுக்கு ரூபா. 56,399.74 மில்லியன் பெறுமதியான நுண் நிதியக் கடன் வசதிகளை வழங்குதல்.

## 3.13 2018.12.31 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்ட கருத்திட்டச் செயற்பாடுகளின் தகவல்கள்.

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் இலக்கம் - 1** | - “சமுர்த்தி அரனலு” சிறிய மற்றும் நடுத்தர கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டம். |
| **செயற்பாடுகள்** | ✓ 2,163 விவசாயக் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூ. 65.71 மி. செலவு செய்து, 2,163 பயனாளிகள் வலுவூட்டப்பட்டுள்ளனர்.<br>✓ 1,139 விலங்கு வேளாண்மைக் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூ. 45.08 மி. செலவு செய்து 1,139 சமுர்த்திப் பயனாளிகள் வலுவூட்டப்பட்டுள்ளனர்.<br>✓ 170 மீனவ அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூபா. 6.50 மி. செலவு செய்யப்பட்டு 170 சமுர்த்திப் பயனாளிகள் வலுவூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>✓ 7,728 சிறு கைத்தொழில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூ. 248.80 மி. செலவு செய்யப்பட்டு 7,728 சமுர்த்திப் பயனாளிகள் வலுவூட்டப்பட்டுள்ளனர்.<br>✓ சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களில் தொழிலற்ற மற்றும் பாடசாலை செல்லாத 312 இளைஞர் யுவதிகளுக்கு தொழில் நெறிப்படுத்துதல் பயிற்சியினை வழங்குவதற்கு ரூபா. 8.89 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. |
| **இடம்** | 25 மாவட்டங்களிலுமுள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமுற்படுத்துதல். |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள் |
| **காலவரையறை** | 2018.01.01. - 2018.12.31 |
| **சாதனைகள்** | 11,512 சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ஒதுக்கப்பட்ட ரூபா.438.93 மில்லியன் நிதியிலிருந்து ரூபா. 374.98 மில்லியன் செலவு செய்யப்பட்டு 11,512 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 02** | "சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமத் நிகழ்ச்சித் திட்டம் |
| **செயற்பாடுகள்** | ✓ 47 சமுர்த்தி உற்பத்திக் கிராமங்களை மேம்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ளது. அதில் 34 கிராமங்கள், பின்வருமாறு கருத்திட்டங்களை அங்கீகரித்துள்ளது.<br>✓ 01 கைத்தறி தொழில் உற்பத்திக் கிராமங்கள், 03 களிமண்ணுடன் தொடர்பான கிராமங்கள், 02 சீமெந்துடன் தொடர்பான உற்பத்திக் கிராமங்கள், 01 கதவுப் பூட்டு உற்பத்திக் கிராமங்கள், 01 முகமூடிக் கிராமங்கள்.<br>✓ 03 பால் உற்பத்திக் கிராமங்கள், 01 ஆடு வளர்ப்புக் கிராமங்கள், 01 கோமாரிக்கா வளர்ப்புக் கிராமங்கள்.<br>✓ 01 மீன்பிடியுடன் தொடர்பான உற்பத்திக் கிராமங்கள், 01 காளான் வளர்ப்புக் கிராமங்கள், 08 அலங்காரப் பூக்கள், அலங்காரச் செடிகள் உற்பத்தி மாதிரிக் கிராமங்கள், வாழைப்பழங்களை உள்ளடக்கிய பழத்தோட்டங்கள் மற்றும் 03 மரக்கறிக் கிராமங்கள், 01 தேநீ வளர்ப்புடன் தொடர்பான கிராமம்.<br>✓ 01 தின்பண்ட உற்பத்திக் கிராமம், 02 கறுவா/மிளகு வளர்ப்புக் கிராமங்கள், 01 கித்துள் உற்பத்திக் கிராமம், நச்சுத்தன்மையற்ற அசேதன விவசாய உற்பத்தி/உள்ளூர் கிழங்கு வளர்ப்புக் கிராமங்கள் 03 வீதம் போன்றன. |
| **இடம்** | 25 மாவட்டங்களினுள் மாவட்டமொன்றுக்கு கிராமங்கள் 1-2 இற்கிடையே. |
| **இலக்கிடப்பட்ட குழு** | உற்பத்தி நடவடிக்கைகளுக்கு/குறைந்த வருமானப் பயனாளிகள்/சமுர்த்திப் பயனாளிகள்/பாடசாலைகளினை விட்டுவிலகிய இளைஞர் யுவதிகள்/சமுதாயப் பங்களிப்பினை வழங்கக்கூடிய நபர்கள். |
| **காலவரையறை** | 2018.01.01 - 2018.12.31 |
| **சாதனைகள்** | பயனாளிகளை விழிப்புணர்வூட்டும் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ஒதுக்கீடுகள் ரூபா.109.77 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. செலவு ரூபா. 65.28 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 03** | **சமுர்த்தி மாதிரி வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** |
| **செயற்பாடுகள்** | ✓ 2018 ஆம் ஆண்டில் வலுவூட்டுவதற்கு இலக்கிடப்பட்டுள்ள 125,000 சமுர்த்திக் குடும்பங்களை வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு முன்வைத்தல்.<br>✓ சகல கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சிறந்த மாதிரி வீட்டுத் தோட்டங்கள் தொடர்பில் ரூபா. 5,000/- பரிசுக் கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>✓ பிரதேச செயலகத் தொகுதி மட்டத்தில் 03 சிறந்த மாதிரி வீட்டுத் தோட்டங்கள் தொடர்பில் தலா 15,000/- வீதம், ரூபா. 45,000/- பரிசுக் கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>✓ பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்படும் |

| | |
|---|---|
| | சிறந்த இளம் விவசாயிகள் மூவருக்கு ரூபா. 15,000/- என்றவாறு ரூபா. 45,000/- பரிசுக் கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>✓ அமைச்சு மற்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், மாவட்ட வங்கிகள் மற்றும் பிரிவு மட்ட உத்தியோகத்தர்களுக்கு மரக்கறி விதை நாற்றுக்களை வழங்குதல். |
| **இடம்** | 25 மாவட்டங்களிலுமுள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள் |
| **காலவரையறை** | 2018.01.01 - 2018.12.31 |
| **சாதனைகள்** | பயனாளிகள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ஒதுக்கீடுகள் ரூபா. 82.65 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன. செலவு ரூபா. 50.74 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 04** | **விசேட கருத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** |
| **செயற்பாடுகள்** | ✓ உற்பத்திச் செயற்பாட்டினை மிகவும் மேம்படுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.<br>✓ வாழ்வாதாக் கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் ஆற்றல்களை மேம்படுத்துதல்.<br>✓ உற்பத்திகளினை, இடைத்தரகர்களின் இடையீடுயில்லாமல் சந்தைப்படுத்துவதற்கு நேரடியாக அரச அல்லது பிரத்தியேகப் பிரிவுடன் தொடர்புபடுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.<br>✓ பயனாளிகளின் உற்பத்திகளை போட்டிமிக்க சந்தைக்குப் பொருந்தக்கூடிய வகையில் மேம்பாட்டிற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு வழங்குதல்.<br>✓ புதிய வருவாயினைப் பெருக்கும் உற்பத்திகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். |
| **இடம்** | 25 மாவட்டங்களினுள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள்/குறைந்த வருமானப் பயனாளிகள். |
| **காலவரையறை** | 2018.01.01 - 2018.12.31 |
| **சாதனைகள்** | 546 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதில் 341 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ஒதுக்கீடுகள் ரூபா. 30.07 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன. செலவு ரூபா. 12.17 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 05** | **வாழ்வாதாரத்திற்கு உதவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | கிராமப்புற வீதி மேம்பாடு<br>சிறிய நீர்ப்பாசன மேம்பாடு |
| **இடம்** | 25 மாவட்டங்களினுள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள்/குறைந்த வருமானப் பயனாளிகள். |
| **காலவரையறை** | 2018.01.01 - 2018.12.31 |
| **சாதனைகள்** | வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவும் 5 வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ஒதுக்கீடுகள் ரூபா. 42 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன. செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 3.44 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 06** | **சமுர்த்தி கைகுளு சிறுவர் சமூக, சிறுவர் பாதுகாப்பு மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்தி கைகுளு சிறுவர் சமூகத் தலைவர்களின் தலைமைத்துவ இயலுமையினை மேம்படுத்துதல்.<br>சமுர்த்தி கைகுளு சிறுவர் சமூகச் சிறார்களின் இயலுமைகளை மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டத்தில் பாராட்டுதல்.<br>பிரதேச செயலகத் தொகுதி மட்டத்தில் 75 சிறுவர் சமூக நூலகங்களை ஆரம்பித்தல். |
| **இடம்** | சகல மாவட்டங்களிலும் அடையாளங்காணப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள். |
| **இலக்கிடப்பட்ட குழு** | (பயனாளிகளின் எண்ணிக்கை) 11,953 சமுர்த்தி கைகுளு சிறுவர் சமூகத்தின் 367,566 சிறார்கள். |
| **காலவரையறை** | 2018.02.01- 2018.11.30 |
| **சாதனைகள்** | பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் கைகுளு சிறுவர் சமூகப் போட்டிகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>நூலகங்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம** | ரூபா. 17.89 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் -இலக்கம் 07** | **திரிய பியச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | வீடொன்றுக்கு உரித்தில்லாத பல்வேறான அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள குறைந்த வருமானப் பயனாளிகள் சமுதாயத்தினை இனங்கண்டு அவர்களின் வீட்டுத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல். ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபா. 200.02 மில்லியனாகும். |
| **இடம்** | 25 மாவட்டங்களினுள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளிகள்/குறைந்த வருமானப் பயனாளிகள் |
| **காலவரையறை** | 2018.03.13- 2018.12.30 |
| **சாதனைகள்** | மாவட்ட மட்டத்தில் 1018 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ரூபா.187.32 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 08** | **புகைப்பிடித்தல், போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சிமிக்க குடும்ப நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | பொருளாதார மேம்பாட்டிற்கு இணையாக சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு போதைப்பொருள் மற்றும் புகைப்பிடித்தல் பாவனை தொடர்பில் பல்வேறான வீட்டு முகாமைத்துவ மூலோபாயமொன்றினைப் பின்பற்றி திருப்திகரமான குடும்ப வாழ்க்கையொன்றினைக் கழிப்பதற்கு வழிகாட்டுதல். ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபா.10 மில்லியனாகும். |
| **இடம்** | சகல பிரதேச செயலகப் பிரிவுகள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சகல பிரதேச செயலகப் பிரிவுகளின் சமுர்த்தி வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட குடும்பங்கள். |
| **காலவரையறை** | 2018.03.13 - 2018.11.30 |
| **சாதனைகள்** | பிரதேச செயலப் பிரிவு மட்டத்தில் 316 நிகழ்ச்சித் திடடங்கள் நடாத்தப்பட்டு 25,375 நபர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ரூபா. 7.02 மில்லியனாகும். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 09** | **உளவத்துணை நிகழ்ச்சித் திட்டம் இது தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபா. 17.50 மில்லியனாகும்.** |
| **செயற்பாடுகள்** | ✓ சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உள சமூகத்தினை மேம்படுத்தும் ஒரு வருட டிப்ளோமாப் பாடநெறி<br>✓ சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் உளவளத்துணை தொடர்பிலான உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல்.<br>✓ உள வலுவூட்டலுக்கு இலக்கிடப்பட்ட சமுதாயத்திற்கு பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல். |
| **இடம்** | சகல மாவட்டங்களிலும் இனங்காணப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள். |
| **இலக்கிடப்பட்ட குழு** | 25,000 சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் 700 உத்தியோகத்தர்கள். |
| **காலவரையறை** | 2018.03.13 - 2018.11.30 |
| **சாதனைகள்** | உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 5 நடாத்தப்பட்டுள்ளன. உளவளத்துணை டிப்ளோமாப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் 246 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ரூபா. 12.74 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம்10** | **சமுர்த்தி பசுமை பங்களிப்பு வருவாயினைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களில் 2017 ஆண்டு தொடக்கம் 2018.06.30 வரை இடம்பெற்ற குழந்தைப் பிறப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார மற்றும் வர்த்தக ரீதியில் பயனுள்ள கன்றுகளை நாட்டுதல். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 25 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| **இடம்** | நிகழ்ச்சித் திட்டம் அமுற்படுத்தப்படும் மாவட்டங்களில் இனங்காணப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள். |
| **இலக்கிடப்பட்ட குழு** | 5000 சமுர்த்திப் பயனாளிகள்/குறைந்த வருமானப் பயனாளிகள். |
| **காலவரையறை** | 2018.03.13 - 2018.12.30 |
| **சாதனைகள்** | 8575 பயனாளிகளுக்கு, தெங்கு வளர்ப்புச் சபை, வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களத்தினைத் தொடர்புபடுத்தி தேவையான கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ரூபா.18.89 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 11** | **முன்னேற்ற மீளாய்வு** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்தி சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கினை அடைவதற்கு மாவட்டம் மற்றும் தேசிய மட்டத்தில் மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியில் முன்னேற்றத்தினை மதிப்பிடுதல். |
| **இடம்** | நிகழ்ச்சித் திடடத்தினைச் செயற்படுத்தும் மாவட்டங்கள் மற்றும் பிரதான அலுவலகங்கள். |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள். |
| **காலவரையறை** | 2018.03.13 - 2018.12.30 |
| **2018.12 31.வரையான செலவு** | ரூபா. 1.53 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 12** | **முயற்சியாண்மை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்தி முயற்சியாண்மை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது வர்த்தகமொன்றினை முன்னெடுத்து வரும் முயற்சியாண்மைகளின் வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் புதிதாக வர்த்தகமொன்றினை ஆரம்பிப்பதற்கும் ஆர்வத்தினைக் காட்டும் சமுர்த்திப் பயனாளிகள் முயற்சியாண்மைகளாக கருத்திட்டங்களை முன்னெடுப்பதனூடாக அவர்களினை சமூக மற்றும் பெருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்படுகின்றன.<br>முயற்சியாண்மை மேம்பாட்டுடன் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.<br>(நடமாடும் ஊர்திகள், விற்பனைக் கடைகள், வீட்டுக் |

| | |
|---|---|
| | களஞ்சியசாலைகள், சிறு மட்ட எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றன)<br>முயற்சியாண்மை மேம்பட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.<br>பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் சந்தைக் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.<br>உடனடி உணவுத் தொழில்நுட்பம் தொடர்பில் பெண்களுக்குப் பயிற்சியளித்தல்.<br>V 2025 7 என்டபிரய்சஸ் ஸ்ரீ லங்கா சந்தைக் கண்காட்சி<br>சமுர்த்தி விற்பனை நிலையங்களை அமைத்தல்.<br>4000 சமுர்த்திப் பயனாளிகளுக்கு புதிய முயற்சியாண்மைகளாக கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.<br>விசேட கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.<br>(முயற்சியாண்மை மேம்பாட்டு சுற்றுநிரூபத்தினூடாக உள்ளடக்கப்படாத எனினும் முயற்சியாண்மை மேம்பாட்டிற்கு நேரடியாக பங்களிப்புச் செய்ய முடியும் என இனங்காணப்பட்டு வரும் கருத்திட்டங்கள்.) |
| **இடம்** | 25 மாவட்டங்களினுள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்திப் பயனாளி குடும்பங்கள் |
| **காலவரையறை** | 2018.01.01 - 2018.12.31 |
| **சாதனை** | முயற்சியாண்மை மேம்பாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலின் கீழ் 1,546 முயற்சியாண்மைகள் கருத்திட்டங்களை தயாரித்துள்ளதுடன், 609 முயற்சியாண்மை மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 26,255 பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட 22 கண்காட்சிகள் நடாத்தப்பட்டு ஏறக்குறைய 3,000 பயனாளிகளுக்கு சந்தை வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 8,691 சமுர்த்திப் பயனாளி குடும்பங்கள் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| **2018.08.31 வரையான செலவு** | ரூபா. 110.5 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 13** | **சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கு சட்டம்சார் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.** |
| **செயற்பாடுகள்** | சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கு சட்டம்சார் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டு நில்லம்ப மற்றும் பலாங்கொட பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்டது. . |
| **இடம்** | நில்லம்ப மற்றும் பலாங்கொட பயிற்சி நிலையங்கள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் மற்றும் தென் மாகாணங்களின் சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிச் சங்க முகாமையாளர்கள் 114 பேர். |
| **காலவரையறை** | 2018.05.03 - 2018.05.05 மத்திய மாகாணம், ஊவா மாகாணம், கேகாலை மாவட்டம்) |

| | |
|---|---|
| | 2018.08.14 20- 2018.08.15 மாத்தறை ஹம்பாந்தோட்டை, மொனராகல மற்றும் களுத்துறை மாவட்டம். |
| **சாதனைகள்** | கேகாலை மாவட்டத்தின் சமுர்த்திப் பயனளாளிகள்/குறைந்த வருமானப் பயனாளிகள் 269 பேரின் தற்போதுள்ள சட்டப் பிரச்சினைகளை அடையாளங் காண்பதற்கு இயலுதல். |
| **2018.12.31 அன்று வரையான செலவினம்** | ரூபா. 0.14 மில்லியன் |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 14** | **சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகள்/வங்கிச் சங்க முகாமையாளர்கள் தொடர்பிலான வங்கிச் சங்க விடயத்துடன் தொடர்பான சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பிலான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.** |
| **செயற்பாடுகள்** | கண்டி மாவட்டத்தின் சமுதாய அடிப்படை சமுர்த்தி வங்கிகள்/சங்க முகாமையாளர்கள் தொடர்பில் வங்கி விடயத்துடன் தொடர்பான அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சட்டப் பயன்பாடு தொடர்பிலான வேலைத்திட்டமொன்றினை நடாத்துதல். |
| **இடம்** | கண்டி மாவட்டச் செயலகம் |
| **இலக்கிடப்பட்ட குழு** | கண்டி மாவட்டத்தின் சமுர்த்தி அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள். |
| **காலவரையறை** | 2018.01.06 (ஒரு நாள் வேலைத்திட்டம்) |
| **சாதனை** | நீண்டகாலமாகவே சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களின் தீர்க்கப்படாதுள்ள சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வலுவூட்டலினை முன்னெடுத்தல். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 15** | **சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகளில் அறவிடப்படாத கடன்களினை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.** |
| **செயற்பாடுகள்** | கடனினைச் செலுத்தாத கடனாளிகளுக்கு கடனினை வழங்குமாறு உத்தரவு பிறப்பிப்பதனூடாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். கடனினைச் செலுத்தாத கடனாளிகளை உரிய சமுர்த்தி வங்கிகளுக்கு வரவழைத்து உடன்படிக்கை விதிமுறைகளை மீறியமைக்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து கடன் நிதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால் அதற்கு முன்னர் கடன் நிதியினை வங்கிக்குச் செலுத்தி அதிலிருந்து விடுபடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| **இடம்** | பிலியந்தல, மந்தாரம்நுவர, மத்துரட்ட, வத்துமுல்ல,புளுககபிட்டிய மற்றும் கோமரங்கடவல போன்ற சமுத்தி வங்கிகள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | சமுர்த்தி வங்கிப் பயனாளிகள் |
| **நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2014.05.04 |
| **சாதனை** | நீண்டகாலமாகவே சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களின் தீர்க்கப்படாதுள்ள சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வலுவூட்டலினை முன்னெடுத்தல். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 16** | **முயற்சியாண்மை மேம்பாடு தொடர்பிலான பயிற்றுவிப்பாளர்களாக சமுர்த்தி முகாமைாளர்களைப் பயிற்றுவித்தல்** |
| **செயற்பாடுகள்** | **முதலாவது கட்டத்தில்,** முகாமையாளர்களைப் பயிற்றுவித்தல் இடம்பெற்று வருகின்றது.<br>**இரண்டாவது கட்டத்தில்,** இப்பயிற்சியாளர்களை ஈடுபடுத்தி களத்துறையின் கடமைச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்படுவர்.<br>**மூன்றாவது கட்டத்தில்,** சமுர்த்திப் பயனாளிகளின் வர்த்தகம் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் தேவையான முயற்சியாண்மை மேம்பாடு தொடர்பிலான அறிவினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனூடாக பயனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக் கருத்திட்டங்களை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
IV. அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபங்களினூடாக இச்சபையின் சேவைச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர்கள் வலையமைப்பின அதி உன்னத சேவையொன்று மற்றும் தலையீடொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. (மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் போன்ற அரச உத்தியோகத்தர்கள்.)

## 5.12 2018.01.01 தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்கள்

| | |
|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 01 | சமூகப் பாதுகாப்பு உரித்துச் சான்றிதழ்களை வழங்குதல். |
| இடம் | வெலிஓய பிரதேச செயலகப் பிரிவு - முல்லைத்தீவு மாவட்டம். |
| இலக்கிடப்பட்ட குழு | வெலிஓய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்கள். |
| ஆரம்பிக்கப்பட்ட தினம் | 2018.07.20 |
| விளைவு | 543 அங்கத்தவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல். |

**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை உறுதிப் பத்திரம் வழங்கல் - வெளிஓயா**





| | |
|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 02 | அரச உத்தியோகத்தர்களுக்குப் பாராட்டும் சான்றிதழ்கள் மற்றும் 87 மாணவர்களுக்குக் கல்விப் பயன்ளை வழங்குதல் |
| இடம் | யாழ் மாவட்டம் |
| இலக்கிடப்பட்ட குழு | அதிகூடிய அங்கத்தவர்களை அங்கத்தவராக்கிய அரச உத்தியோகத்தர்களைப் பாராட்டுதல் மற்றும் மாணவர்களுக்குக் கல்வி உரித்துப் பயன்களை வழங்குதல். |
| ஆரம்பிக்கப்பட்ட தினம் | 2018.08.28 |
| விளைவு | 70 அரச உத்தியோகத்தர்களுக்குப் பாராட்டும் சான்றிதழ்கள் மற்றும் 87 மாணவர்களுக்குக் கல்விப் பயன்களை வழங்குதல். |

06

# ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக நலன்புரி பிரிவு



## 6.1 ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் பிரிவின் விடயங்கள்

### 6.1.1. ஆரம்ப கைத்தொழில் பிரிவு

I. விவசாயம் மற்றும் மீன்பிடி உற்பத்திகளை உள்ளடக்கி ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி சேர்ப்பினை மேம்படுத்தி, பெறுமதி சேர்க்கப்பட்ட முடிவுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொடர்பில் சகல பங்குதாரர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்தல் மற்றும் உலகளாவிய சந்தைக்கு இணைத்துக் கொள்ளுவதற்கு வசதிகளை செய்து கொடுத்தல்.

II. ஏற்றுமதி விவசாயப் பயிர்களை உள்ளடக்கி ஏற்றுமதி பெறுமதியினைக் கொண்ட ஏனைய பயிர்கள், ஆரம்பக் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் தரம், உயர் விளைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நியமங்களை அறிமுகஞ் செய்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றிதழ் வசதிகள் மற்றும் ஊக்கங்களை வழங்குதல்.

III. உலகளாவிய சந்தையில் நிலவும் போட்டியினை வெல்வதற்கான அறிவு மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இலங்கை வர்த்தகர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாடு என்றவாறான விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், மகாநாடு, கண்காட்சி, வர்த்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் தொடர்புபடுதல்.

IV. விவசாய உயர் வலயங்கள் மற்றும் மீன்பிடி உயர் வலயங்கள் அமைப்பதனூடாக சிறு மற்றும் நடுத்தர அளவு முயற்சியாண்மைகளுக்கு தமது வணிகத்தினை ஆரம்பிப்பதற்குத் தேவையான காணிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பில் தேவையான ஏனைய தேவையான வசதிகளை வழங்குதல்.

V. விசேடமாக ஏற்றுமதி விவசாயத் துறையினை நவீனமயப்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்ப எந்திரங்கள், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம், விவசாயக் கடன்களினை உள்ளடக்கி ஏனைய பௌதிக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சலுகைகளை, புதிய தொழில் முயற்சியாண்மைகளுக்கு அதி உயர் வலயங்களினுள்ளும் மற்றும் வெளியேயும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

VI. ஏற்றுமதியினை முன்னணியாகக் கொண்ட விவசாயத் துறையினை புத்தாக்கஞ் செய்வதனூடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு முன்வைக்கப்படும் முதலீடுகள், தொழில் முயற்சியாண்மைகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு தமது வர்த்தக மேம்பாட்டிற்குத் தேவையான நிதி மானியங்கள், கடன் வசதிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வர்த்தகத்தினை ஊக்குவித்தல்.

VII. முதலீடுகளுக்கான முன்நிற்கும் உள்ளூர் மற்று வெளியூர் முயற்சியாண்மைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குவதற்கு வசதிகளைக் கொண்டு நிரம்பிய சந்தை மற்றும் முதலீடுகள் தொடர்பில் தகவல்களை வழங்கும் உதவிச் சேவை அலகினை (Trade facilitation unit) நிறுவி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VIII. விசேடமாக ஏற்றுமதியினை இலக்காகக் கொண்ட பழச் செய்கை வளர்ப்பு, உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தையினை மையமாகக் கொண்ட மரக்கறி வளர்ப்பினை உள்ளடக்கி உயர் ஏற்றுமதி பெறுமதியினைக் கொண்ட ஏனைய பயிர் வளர்ப்புக்களை விரிவுபடுத்துதல் மற்றும் உற்பத்தி மேம்பாட்டிற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.

IX. அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், உளவளத்துணைப் பிரிவு, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் விவசாயத்

துறை நவீனமயமாக்கும் கருத்திட்டத்தின் வருடாந்தத் திட்டம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கி அதற்கு உதவுதல், அமுற்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதல் தொடர்பில் உதவுதல்.

X. அமைச்சின் நோக்கங்களை அடையப் பெறுவதற்கு மனித வளங்கள், பௌதிக வளங்களை முகாமை செய்தல், இணையான திணைக்களங்கள், நிறுவனங்களின் நிர்வாகச் செயற்பாடுகள், நிறுவனம்சார் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை முன்னெடுத்தல்.

## 6.1.2. சமூக நலன்புரி பிரிவு

I. நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 2.5 மில்லியன் வரையான முதியோர்களின் நலன்புரி, எதிர்காலப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டு முதியோர்களுக்குத் திருப்திகரமான எதிர்காலமொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். (மூத்த பிரஜைகளுக்குக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.)

II. பாதுகாப்பற்ற மூத்த பிரஜகளின் பாதுகாப்புத் தொடர்பில் மிகவும் பயனாக பாதுகாப்பு நிலையங்கள் மற்றும் பாதுகாப்பான இல்லங்களை முன்னெடுத்துச் செல்லுவதற்கு அரச பிரிவினதும் மற்றும் பிரத்தியேகப் பிரிவினதும் பங்களிப்பினை உறுதிப்படுத்துவற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகஞ் செய்தல்.

III. தங்கியிருப்போர்களுக்கும் மற்றும் சுயமாகவே மேலும் வாழக்கூடிய செயற்திறனான மூத்த பிரஜைகளுக்கும் தேவையான உதவியினை வழங்கி அவர்களின் சேவையினை விளைத்திறனானதாகப் பெற்றுக் கொள்ளுவதற்குப் பொருத்தமான சூழலொன்றினை உருவாக்குதல்.

IV. மூத்த பிரஜைகள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி அவர்களுக்குச் சமூதாயத்தில் உரித்தாக்கப்பட வேண்டிய அங்கீகாரம் மற்றும் கௌரவத்தினை வழங்குவதற்கு சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் உட்பட பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ககலந்துகொள்ளலுடன் ஒருங்கிணைத்தல்.

V. மொத்த சனத்தொகையில் 1.6 மில்லியன் வரையான அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மற்றும் அக்கொள்கையினை முன்னிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு அரச துறையின் சகல நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற மற்றும் பிரத்தியேகத் துறையின் உரிய நிறுவனங்களுக்கும் தேவையான வழிகாட்டலினை வழங்குதல் மற்றும் அவற்றினை முகாமை செய்வதற்குப் பொருத்தமான பொறித்தொகுதியென்றினை அமைத்தல்.

VI. அங்கவீனமுற்ற நபர்கள், விசேட தேவைகளைக் கொண்ட நபர்களை வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் பொருளாதாரத்தினை மேலோங்கச் செய்வதற்குப் பொருத்தமான சுயதொழில் வாய்ப்புக்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துதல்.

VII. அங்கவீனமுற்ற நபர்களின் விளையாட்டுக்கள், கலைகள் மற்றும் பிற இயலுமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் அதனூடாக முன்னுக்குச் செல்லுவதற்கும் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

VIII. அங்கவீனமுற்ற நபர்களுக்கிடையே விசேடமாக விழிப்புலனற்ற மக்களுக்கென சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை உள்ளடக்கி பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து செயற்படுத்துவதனூடாக விழிப்புலனற்ற சமூதாயம் மீது சமுதாயத்தின் விசேட கவனத்தினைச் செலுத்துதல்.

IX. பல்வேறான சமூகப் பிரச்சினைகளின் காரணமாக விரக்தி மற்றும் அதிர்ச்சிக்கு உள்ளான பிள்ளைகள் மற்றும் நபர்களை, அதிலிருந்து விடுவிப்பதற்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

## 6.2. எமது கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்.

**செயற்றிட்டம் 1- ஏற்றுமதி விவசாயப் பயிர்க் கன்றுகள் பத்துக் கோடியினை நாட்டும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டம்.**

2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் ஏற்றுமதி வருவாயினை இரட்டிப்பாக்குதல் அதாவது 25 அமெரிக்க டொலர் மில்லியன் வரை உயர்த்தும் தேசிய இலக்கினை வென்றெடுப்பதற்குத் தேவையான அடித்தளத்தினையிடுதல் இவ்வமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முன்னணிப் பொறுப்பொன்றாகும். மிகக் குறுகிய காலப்பகுதியினுள் இவ்விலக்கினை எட்டுதல் வேண்டும் என்பதுடன், ஏற்றுமதி விவசாயத் துறையில் துரித வளர்ச்சியொன்று சுவீகரித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். இது தொடர்பில் விவசாய உற்பத்திகளின் பெறுமதி சேர்ப்பினை வலுவாக்கி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ஒருபுறத்தில் இடம்பெறுவதுடன், மறுபுறத்தில் உற்பத்தி ஆற்றலினை மேம்படுத்துதல் வேண்டும். நாட்டின் விவசாய ஏற்றுமதிச் செயற்பாட்டிற்குத் தேவையான உற்பத்தி ஆதாரத்தினைத் தயாரிப்பதனை நோக்கங்களாகக் கொண்டு உற்பத்தி ஆற்றலினை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக நாடுபூராவும் ஏற்றுமதியினை இலக்காகக் கொண்ட உற்பத்திச் சாத்தியம் காணப்படும் பொருளாதாரப் பெறுமதியினைக் கொண்ட ஏற்றுமதி விவசாயப் பயிர்க் கன்றுகள் பத்துக் கோடியினை நாட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்று, எமது அமைச்சினூடாகத் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் மிளகு, கறுவா உட்பட ஏற்றுமதி விவசாயப் பயிர்க் கன்றுகள் 07 மில்லியனும், 2017 ஆம் ஆண்டில் 13 மில்லியன் கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் இவ்விலக்கு 25 மில்லியன் கன்றுகள் என்பதுடன், இது வரை அதில் 15 மில்லியன் கன்றுகள் மாத்திரமே நாட்டப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 45 மில்லியன் கன்றுகள் வருட நிறைவில் நாட்டப்பட்டு நிறைவு செய்யப்படும் என்பதுடன், எதிர்வரும் இரு வருடங்களினுள் மேலும் 55 மில்லியன் கன்றுகள் நாட்டப்பட்டு நாடுபூராவும் 10 கோடி கன்றுகளை நாட்டும் இலக்கினை நிறைவு செய்வதற்கு அமைச்சு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதுடன், அதனூடாக 2025 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருவாயினை இரட்டிப்பாக்கும் தேசிய இலக்கினை நோக்கிச் செல்லுவதற்கு அமைச்சின் பங்களிப்பு கிட்டும்.

**செயற்றிட்டம் 2 - 5000 ஏற்றுமதிக் கிராமங்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம்**

ஆகக்குறைந்த உற்பத்திச் செலவுடன்கூடிய பெறுமதி சேர்ப்பினை உயர்த்துவதற்கு இடைத்தரகரினை நீக்கி நேரடியாக ஏற்றுமதி இலக்கினைக் கொண்டு தெரிவு செய்யப்படும் பிரதேசம் தொடர்பில் உன்னதமான ஏற்றுமதிச் சாத்தியத்தினைக் கொண்ட பயிர்த் தொகுதி அல்லது உன்னதமான ஏற்றுமதியொன்றினை இலக்காகக் கொண்டு பெறுமதியினை மேம்படுத்தி ஒட்டு மொத்தக் கிராமம் ஏற்றுமதி செய்யும் உற்பத்திகளை முன்னெடுக்கும் கிராமமொன்றாக மேம்படுத்தும் நோக்கங்களுடன், அவற்றினைச் சர்வதேசப் பெறுமதிகளுடன் ஒன்று சேர்த்து, கிராம உற்பத்திகளை நேரடியாக சர்வதேச சந்தைக்கு முன்வைத்தல், விவசாயத் துறையிலிருந்து கிடைக்கும் வருவாயினை 50% த்தினால் அதிகரித்தல், கிராம உற்பத்திகளின் பொருளாதாரம் மற்றும் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு 5000 ஏற்றுமதிக் கிராமங்களை அமைப்பதற்கு

இவ்வமைச்சு எதிர்பார்ப்பதுடன், அது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது 250 கிராமங்கள் அடையாளங் காணப்பட்டு, அவற்றின் தனிச்சிறப்பான அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிக் கிராமமொன்றாக மேம்படுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அலகொன்றாக கிராமமொன்றினை அடையாளங்கண்டு அதன் பொருளாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அதனூடாக சமூக மற்றும் தொழில்வாண்மையான பாதுகாப்பினை ஏற்படுத்தி மாதிரி எண்ணக்கருவொன்றினை முன்வைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**செயற்றிட்டம் 3 - விவசாய உயர் வலயங்களை ஸ்தாபித்தல்**

2015 ஆம் ஆண்டில் இவ்வமைச்சு ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட முன்னணிப் பணியொன்றாக பிரதேச ரீதியில் பரந்து காணப்படும் ஏற்றுமதியினை இலக்காகக் கொண்டு பெறுமதியில் பெறுமதியினைச் சேர்த்தல் மற்றும் முன்னெடுத்தல் அப்பிரதேசங்களில் இடம்பெறும் நேரடியான சர்வதேச சந்தையினை அடைவதற்கான வழிவகைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு விவசாய உயர் வலயங்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அதன் கீழ் மூன்று வலயங்களின் ஆரம்பச் செயற்பாடுகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. காலி - அல்பிட்டிய உயர் வலயம், அம்பாறை - உகன உயர் வலயம் மற்றும் மாத்தறை - வில்கமுவ உயர் வலயம் போன்றனவே அந்த வலயங்கள் என்பதுடன், இதில் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான நிதிசார் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற ஊக்குவிப்புக்களை வழங்குதல், முதலீடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் பிரதேச ரீதியில் மனித வள விருத்தி, தொழில் பெருக்கம் மற்றும் மூலோபாயத் திட்டங்களைக் கொண்ட பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்துதல் தொடர்பில் உதவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒவ்வொரு வலயத்திற்குமான முழு மாவட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் விவசாய உற்பத்தி அடிப்படையினை (பயிர் வளர்ப்பு) மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதிகப் பின்னணி உருவாக்கப்படும் என்பதுடன், அதன் கீழ் மாவட்டத்தில் காணப்படும் விவசாய சூழல் நிலைமைகளுக்குப் பொருந்தும் பயிர் வளர்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் விரிவுபடுத்துவதற்கும் தேவையான வசதிகளைத் திட்டமிடுதல் ஒருபுறத்தில் இடம்பெறுவதுடன், மறுபுறத்தில் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதேசத்தினை மையமாகக் கொண்டு உயர் உற்பத்தி ஏற்றுமதியினை முன்னெடுப்பதற்கு முன்னெடுப்பு வலயங்களை (Processing zones) அமைத்து அவ்வலயங்களினுள் கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு வர்த்தக சமுதாயத்திற்குத் தேவையான காணிகள் மற்றும் ஏனைய பௌதிக வசதிகளை வழங்குவது இடம்பெறுகின்றது.

அதன் பிரகாரம் பொருளாதார ரீதியில் ஒரு ஏற்றுமதி வலயத்தில் அரச முதலீடு ரூபா. 400 மில்லியன் வரையும், பிரத்தியேக அரச ஒன்றிணைந்த முதலீடு ஆகக்குறைந்த வகையில் ரூபா. 1,500 மில்லியன் வரையும் என்றவாறு முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், ஒரு வலயத்திலிருந்து ரூபா. 10,000 மில்லியன் வருடாந்த வருவாயினையும், ஒட்டுமொத்த ஏற்றுமதி வலயச் செயற்பாட்டினூடாக ரூபா. 10 பில்லியன் வருவாயொன்றும் எதிர்பார்க்கப்படுகின்றது

- **காலி அல்பிட்டிய உயர் வலயம்**

அதன் பிரகாரம், காலி அல்பிட்டியவிலுள்ள காணி மீட்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான 72 ஏக்கர் காணியொன்று இனங்காணப்பட்டு விவசாய உயர் வலயத்தின் அடிப்படைச் செயற்பாடுகள் பெரும்பாலானளவு இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் கீழ், அடிப்படை அளவைச் செயற்பாடுகள், ஆக்கபூர்வமான திட்டங்களைத் தயாரித்தல், சுற்றுச்சூழல் கற்கை ஆய்வுகளைத் தயாரித்தல், பாதுகாப்பு வேலிகளை அமைத்தல்,





- **அம்பாறை விவசாய உயர் வலயம்**

அம்பாறை மாவட்டத்தின் உகன பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 258 ஏக்கர் பாரிய விவசாய உயர் வலயம் தொடர்பிலான சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு இதுவரை இடம்பெற்று வருவதுடன், வலயத்தினைச் சுற்றி யானை வேலி மற்றும் பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்தல், பொது வீதிகள் மற்றும் கட்டிடத்தினை நிர்மாணித்தல், நீர் மற்றும் மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடத்தில் இந்த உயர் வலயத்தில் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கும் இதுவரை சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

- **மாத்தளை விவசாய உயர் வலயம்**

மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேசத்தில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட விவசாய வலயத்தின் பொது வீதிகளை அமைத்தல், பாதுகாப்பான வேலிகளை அமைத்தல், பொதுக் கட்டிடத்தினை அமைத்தல் மற்றும் பௌதிகள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பிலான சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு அறிக்கையும் இது வரை தயாரிக்கப்பட்டு வருவதுடன், எதிர்வரும் வருடத்தின் நடுப் பகுதியில் இதன் உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**செயற்றிட்டம் 4 - மீன்பிடி உயர் வலயங்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம்**

2025 ஆம் ஆண்டளவில் எமது ஏற்றுமதி வருவாயினை இரட்டிப்பாக்குவதற்கான பயணத்தின் மேலும் ஒரு உன்னதமான செயற்பாடாடொன்றாக மீன்பிடி உயர் வலயங்களை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை அடையாளங்காண முடியும். இதனூடாக மீன்பிடி உற்பத்திகளின் பெறுமதியினை மேம்படுத்துதல், அதனூடாக மீன்பிடி உற்பத்திகளுக்குப் பெறுமதியினைச் சேர்த்து வெளிநாட்டுச் சந்தையினை இலக்காகக் கொண்ட உயர் பெறுமதிகளைக் கொண்ட மீன்பிடி உற்பத்திப் போட்டியாளராக உலக சந்தைக்கு முன்வைத்து அதிக அந்நியச் செலாவணியினை பெருக்குவதும் நோக்கங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், தற்போது ஆரம்பச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள புத்தளம் மற்றும் கற்பிட்டி ஏரிகள் போன்ற பிரதேசங்களில் வளர்ப்பு அடுக்குகளை அமைத்து சிப்பி சோகிகளை வளர்க்கும் வலயமொன்றாக மேம்படுத்துவதற்கும், 200 கடல் வெள்ளரிகளை பள்ளிக்குடாவிலிருந்து பாலாவி வரையில் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து முறைசார் வகையில் சிப்பி சோகிகளை நாட்டினுள் உற்பத்தி செய்வதற்கு (Hatchery) கல்பிட்டி பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கும், சிலாபம் மீன்பிடி நங்கூர நிலையத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் நாடுபூராவுமுள்ள ஏனைய நங்கூர நிலையங்களை மேம்படுத்துவதற்கும், கடல் மற்றும் ஏரி மீன்பிடியினை மேம்படுத்துவதற்கு என்ஜினைக் கொண்ட மீன்பிடிப் படகுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி பெறுமதி சேர்ப்பினை மேம்படுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ள மீன்பிடிச் சங்கங்களை வலுவூட்டும் ஆரம்ப நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட புகையூட்டப்பட்ட மீன் (smoked fish) பதப்படுத்தும் அலகினை, ஏனைய பதிவு செய்யப்பட்ட மீன்பிடிச் சங்கங்களுக்கும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகவும் முறைசார் வகையிலும் நன்னீர் மீன்பிடி உற்பத்தியொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு, நவீன தொழில்நுட்பங்களுடன் நீரினை அடிப்படையாகக் கொண்ட குஞ்சுப் பொரிப்பகங்களை நாடுபூராவுமுள்ள நன்னீர் தேக்கங்களில் ஆரம்பிப்பதையும், முத்து சிப்பிகள் வளர்ப்பினை நாடுபூராவும் அமைப்பதையும், பிரபல்யப்படுத்தும் நோக்குடன் நன்னீர்த் தேக்கங்களில் நன்னீர் முத்து சிப்பிகளை அறிமுகஞ் செய்வதற்கும், மொரககந்த நீர்த்தேக்கம் மற்றும் 15 உப நீர்த்தேக்கங்களுக்கு மீன்பிடி பெறுமதிச் சேர்ப்பினை மேம்படுத்துவதற்கும் ஆரம்ப நடவடிக்கையாக ஒரு மில்லியன் நன்னீர் மீன்களை அறிமுகஞ்செய்து, எதிர்வரும் காலத்தில் மேலும் 03 மில்லியனை அறிமுகஞ் செய்வதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர் இறால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு ஒரு மில்லியன் இறால் குஞ்சிகளை வழங்குவதற்கும், பதிவு செய்யப்பட்ட மீன்பிடிச் சங்கங்களுக்கு மீன்பிடிப் படகுககளை வழங்குவதற்கும், வலைகள் மற்றும் ஏனைய உபகரணங்களையும் மற்றும் அலுவலக வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மீன்பிடித் துறையில் இம்மேம்பாட்டுச் செயற்பாடுகளினூடாக வருடந்தோறும் 250 மில்லியன் அமெரிக்க டொலர் மில்லியன் அந்நியச் செலாவணியினை ஈட்டிக்கொள்ளுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.





**செயற்றிட்டம் 5 - கிராம சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

அதிமேகு ஜனாதிபதியின் எண்ணக்கருவின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினூடாக செயற்படுத்தப்படும் கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வமைச்சின் விடயப் பரப்பின் கீழ்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பல கருத்திட்டங்களும் இவ்வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பௌதிக மற்றும் மனித வளங்களைக் கவனத்திற் கொண்டு, பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில், உற்பத்தியில் சாத்தியங்களைக் கொண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை அடையாளங்கண்டு, கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் பல, அமைச்சின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி நாடுதழுவியதாக அமுற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் மற்றும் வளங்களைச் சமுதாயங்களுக்கு வழங்கியும், சம பிரதிநிதித்துவ வாய்ப்புக்களை வழங்கியும், உள ரீதியில் தங்கியிருப்பதைத் தடுத்து, அரச, பிரத்தியே மற்றும் சமுதாயப் பங்களிப்புடன் அபிவிருத்தியினை அடையக்கூடிய தளமொன்றினை கிராமத்தில் உருவாக்குதல் “கிராம சக்தி” நிகழ்ச்சித் திட்டத்தின் கொள்கைசார் பெறுமதிசேர்ப்பு என்பதுடன், இவ்வமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினூடாக கிராம ரீதியில் 5000 வரையான சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**செயற்றிட்டம் 6 - ரொம் ஈ ஜே சீ மாம்பழ வளர்ப்புக் கருத்திட்டம்**

2016 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டம், அமைச்சின் பிரதான நிகழ்ச்சித் திட்டமொன்றாகும். விவசாயிகளுக்கு வருடாந்தம் ரூபா. 250,000 வருவாயினை உழைத்துக் கொடுக்கும் எதிர்பார்ப்புடன் 3 மில்லியன் மாங்கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டில் 26,000 மாங்கன்றுகளும், 2017 ஆம் ஆண்டில் 280,000 கன்றுகளும், 2018 ஆம் ஆண்டில் 830,000 கன்றுகளும் பரீட்சார்த்த வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன்

கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் வருடந்தோறும் 300 அமெரிக்க டொலர் மில்லியன் வருமானத்தினை உழைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.




**செயற்றிட்டம் 7 - அன்னமுன்னா (கடு ஆத்தா) செய்கைக் கருத்திட்டம்**

நோய்நொடியற்ற ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அன்னமுன்னா தொடர்பில் நிலவும் அதிக கேள்வியினை அடிப்படையாகக் கொண்டு, ஏற்றுமதியினைக் இலக்காகக் கொண்ட செய்கையொன்றாக ஊக்குவித்தல், குடும்ப அலகின் உற்பத்தி வருவாயினை உயர்த்துதல் போன்றனவற்றினை நோக்கங்களாகக் கொண்டு செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டம் இது வரை 100,000 கன்றுகளை, 5000 பயனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



**செயற்றிட்டம் 8 - ஏற்றுமதி செய்யக்கூடிய அன்னாசிச் செய்கை பெறுமதி சேர்த்தல் கருத்திட்டம்**

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையின் அன்னாசிகளில் காணப்படும் உன்னதமான சுவை, அன்னாசிச் செய்கைக்கு இலங்கையில் காணப்படும் உகந்த காலநிலை மற்றும் குறுகிய காலத்தில் வருவாயினை ஈட்டிக்கொள்ளக்கூடிய விவசாயச் செய்கையொன்றாக காணப்படும் சிறப்புத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தையில் ஒரு போட்டியுடன் கூடிய அணுகுமுறையொன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்குத் தேவையான உற்பத்திசார் பின்னணியினை அமைத்தல், நாட்டிற்கு கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணியினை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கங்களுடன், கம்பகா, குருனாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ் நாடுபூராவுமுள்ள 25,000 ஏக்கரில் அன்னாசிச் செய்கையினைப் பயிரிடுவதற்கும், அது தொடர்பில் கன்றுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், 750 நாற்று மேடைகளை 2020 ஆம் ஆண்டளவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், இக்கருத்திட்டத்தினூடாக வருடாந்தம் 150 அமெரிக்க டொலர் மில்லியன் வரையான ஏற்றுமதி வருவாயினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. மேலும் விளைத்திறனான உற்பத்தியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒரு பில்லியன் ஒட்டு அன்னாசிக் கன்றுகளை தயார்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், இற்றை வரை 100,000 ஒட்டுக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன

என்பதுடன், 2019 ஆம் ஆண்டில் 500 பயனாளிகளுக்கு அன்னாசிப் பயிர் வளர்ப்புக்கு உதவிகளை வழங்குவற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.





**செயற்றிட்டம் 9 - மரமுந்திரி (கயூ) பயிரிடுதல் கருத்திட்டம்**

ஏற்றுமதி செய்யக்கூடிய உற்பத்தியொன்றாக ஊக்குவித்து 2020 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருவாயினை 25% த்தினால் அதிகரிப்பதற்கும், அம்பாறை மாவட்டத்தில் மரமுந்திரி உயர் வலயமொன்றினை உருவாக்குவதனூடாக அம்பாறை மாவட்டத்தின் மக்களின் வருவாய் மட்டத்தினை உயர்த்துவதற்கும், மரமுந்திரி உற்பத்தியினை மேம்படுத்துவதனூடாக மரமுந்திரியினூடாக பெறுமதி சேர்த்தலினை அதிகரித்து உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைக்கு அதிகளவில் முன்வைப்பதற்கும் முன்வைக்கும் எதிர்பார்ப்புடனும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விவசாய உயர் வலயம் தொடர்பில் தேவையான உற்பத்திச் சாத்தியப்பாட்டினைத் தயாரிக்கும் மூலோபாயமொன்றாக செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் 5000 மர முந்திரி ஒட்டுத் தாவரங்களை பெரும் போகத்தில் பயிரிடுவதற்கு விவசாயத்துறைகளை புத்தாக்கஞ் செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அம்பாறை பிரதேசத்தின் 161 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மர முந்திரிச் செய்கைக்கு பாரியளவில் சாத்தியத்தினைக் கொண்ட மகஓய, பதியதலாவ பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 25,000 தாவரக் கன்றுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், இதுவரை 11,000 கன்றுகள் பகிந்தளிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக பயனாளிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டு அவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் இக்கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.





**செயற்றிட்டம் 10 - தேனீ வளர்ப்புக் கருத்திட்டம்**

இலங்கையில், தேன் இறக்குமதியினைக் குறைத்து புதிய ஏற்றுமதிச் சந்தையின் நாட்டத்தினை இனங்காணுதல், பல்லுயிர் உணர் திறன் மற்றும் உன்னதமான வலயமொன்றாக இலங்கையின் தேனீ வளர்ப்பினை சர்வதேச சந்தையில் தரப்படுத்தி அதி நவீன தொழில்நுட்பத்தினூடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பிரபல்யப்படுத்தி இலங்கையில் காணப்படும் தேனுடனான உற்பத்திகளின் தேவைகள் தொடர்பிலான தேன் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாகவும், இலங்கைவாழ் தேன் தயாரிப்பாளர்கள் மற்றும் சந்தையினைப் பாதுகாப்பதையும், மேம்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டு செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தினூடாக எதிர்வரும் வருடத்தில் தேன் உற்பத்தியாளர்களுக்கு தேவையான பயிற்சியினை வழங்குவதற்கும், வெற்றிகரமாகப் பயிற்சியினை முடித்துள்ள உற்பத்தியாளர்களுக்கு 7000 தேனீ பெட்டிகள் இது வரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தேனீ காலனிகளைக் கண்டுபிடித்தல் தொடர்பில் விசேட பயிற்சியொன்றினை வழங்குவதற்கும் இது வரை அமைக்கப்பட்டுள்ள 75 குக்கிராமங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கும், தேனீ தொடர்பில் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ள உற்பத்திகள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி அவ்வுற்பத்தியாளர்களுக்குத் தேவையான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும், உற்பத்தியாளர்களின் சங்கங்களை அமைப்பதற்கும் ஒரே தரத்தின் கீழ் நாடளாவிய தேன் உற்பத்தியினை விற்பனை செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கருத்திட்டத்தினை வலுப்படுத்துவதற்கு அம்பாறை மாவட்டத்தில் தேன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையமொன்றினை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.





**செயற்றிட்டம் 11 - காளான் வளர்ப்புக் கருத்திட்டம்**

நார்ச்சத்தினைக் கொண்ட கொழுப்பற்ற உணவொன்றான பிரபல்யமான காளான், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யும் சாத்தியம் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் உள்ளூர்க் காளானுக்கான கேள்வியினைத் திருப்திப்படுத்துமுகமாக உற்பத்திச் சந்தை இலக்கினை நோக்கி காளான் உற்பத்தியினை முன்வைத்து காளான் செய்கையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டம், காளான் வளர்ப்பு வீடுகளை அமைப்பதற்கு 700 காளான் உற்பத்தியாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது உற்பத்திச் செயற்பாடுகளுக்கு பாவிக்கப்பட்டு வரும் ஆரம்பத் தொழில்நுட்பத்திற்குப் பதிலாக நவீன மூலோபாயங்களை அறிமுகஞ் செய்து உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும், தற்போது உற்பத்திகளில் இடம்பெறும் அறுவடைக்குப் பின்னரான அழிவு, பயிர்களின் அழிவினைக் குறைத்தல் மற்றும் எதிர்வரும் காலங்களில் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் நீராவியினூடாக ஈரப்பதத்தினைக் கட்டுப்படுத்தும் அலகுகளை வழங்குவதற்கும், பயனாளிகளின் பொருளாதார மட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்தியாளர்களைக் கொண்ட சங்கங்களை அமைத்தல் மற்றும் பயனாளிகளுக்கு காளான் வளர்ப்பு பைகளைத் தயாரிக்கும் எந்திரங்களை வழங்குவதற்கும், பாரியளவில் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்

மற்றும் அவர்களை சிறியளவிலான உற்பத்திகளுடன் தொடர்புபடுத்தி தர உத்தரவாதத்தினை வழங்கி ஒரே தரத்தின் கீழ் சந்தையில் பகிர்ந்தளிப்பதற்கும் 2019 ஆம் ஆண்டில் 1,000 பயனாளிகளுக்கு காளான் வளர்ப்பு குடில்களை அமைப்பதற்கு உதவிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.





**செயற்றிட்டம் 12 - 1000 ஏற்றுமதி விவசாய பயிர் நாற்று மேடைகளை மேம்படுத்துதல்.**

நவீன விவசாயச் செய்கையின் தராதரம் அது தொடர்பில் பயன்படுத்தப்படும் நாட்டுகின்ற பொருளின் தரத்தின் மீது சார்ந்துள்ளது. அதன் பிரகாரம் இயல்பான நிலை, காலநிலை மற்றும் வேறு வெளிப்புற துணைப் பொருட்களின் காரணமாக கன்றுகள் மற்றும் நாட்டும் பொருள் உற்பத்திக்கு ஏற்படும் ஆபத்து மற்றும் தாக்கத்தினைக் குறைத்து வருடம் பூராவும் தொடர்ந்து உயர் தரத்தினைக் கொண்ட கன்றுகள் மற்றும் நாட்டும் பொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு 2018 பாதீட்டுப் பிரேரணையின் கீழ் 1000 நாற்று மேடைகளை மேம்படுத்துவதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அது தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் தொழில்நுட்ப தரத்தினை வழங்குவதனூடாக உதவி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதனூடாக பாதுகாப்பான வலை வீடுகளினுள் நாற்று மேடைகளை முன்னெடுத்துச் செல்லுவதற்கும், அது தொடர்பில் தேவையான வலை வீடுகளை நாற்று மேடை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கும், இந்த மேடைகளில் நாற்று உற்பத்திக்குத் தேவையான தாவரச் சாடிகள் தொடர்பில் புதிய சாதனமான தும்புகளைக் கொண்டு நிரப்பப்பட்ட சாடிகளை அறிமுகஞ் செய்வதற்கும் நவீன நீர் முகாமைத் திட்டங்களை அறிமுகஞ் செய்வதற்கும், தாய்த் தாவரப் பூங்காக்களினை அறிமுகஞ் செய்வதற்கும், மேடைகளின் நிலையினை மேம்படுத்துவதற்கு A, B மற்றும் C என்றவாறு கடப்பாட்டினைத் தயாரித்து இரு வருட மதிப்பீட்டுத் திட்டமொன்றின் கீழ் மேடைகளைத் தரப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இக்கருத்திட்டத்தின் மேம்பாட்டுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் 17 மேடைகள் A தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

**செயற்றிட்டம் 13 - ஏற்றுமதி விவசாயப் பயிர்களைப் பதப்படுத்தும் எந்திரங்களைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.**

விசேடமாக ஐரோப்ப நாடுகளினை உள்ளடக்கி உலகச் சந்தையில் எமது ஏற்றுமதி விவசாய உற்பத்திகளுக்கு உயர் கேள்வியினை உறுதிப்படுத்தும் வேளையில் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையாவது, எமது உற்பத்திகளில் இரும்பு உள்ளிட்ட உலோக வகைகள் மற்றும் வெளிப்புறக் கழிவுகள் உள்ளடக்கபட்டுள்ளது என முன்வைக்கபட்ட குற்றச்சாட்டாகும். எமது ஏற்றுமதி விவசாய உற்பத்திகளைப் பதனிடும் செயற்பாடு (Processing) தொடர்பில் இரும்பினால் செய்யப்பட்ட எந்திரங்களைப் பாவித்தல் இதற்குக் காரணமாகியுள்ளது என ஆய்வுகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் தீர்வொன்றாக இரும்புக்குப் பதிலாக வெள்ளை இரும்பினைப் பாவித்து தயாரிக்கப்பட்ட பதனிடும் எந்திரங்களை அறிமுகஞ் செய்வதற்கும் மற்றும் அப்பழைய எந்திரங்களின் இரும்புப் பாகங்களை நீக்கி பொருத்தமான இரும்புப் பாகங்களினைப் பயன்படுத்திப் புதுப்பிப்பதற்கு தயாரிப்பாளர்களை ஊக்குவித்தல் தொடர்பில் எனது அமைச்சு

விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் நிதிசார் உதவி மற்றும் தொழில்நுட்ப உதவியும் தயாரிப்பாளர்களுக்கு வழங்குவதற்கு தயாரிப்பாளர்களை பதிவு செய்தல், எந்திர உற்பத்தியாளர்களுடன், தற்போதுள்ள எந்திரங்களைப் புதுப்பிப்பதற்குத் தேவையான கலந்துரையாடலினை முன்னெடுத்தல், புதிய எந்திரங்களை உற்பத்தி செய்யும்போது இரும்புப் பாகங்களின் பாவனையினைத் தடுப்பதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகளைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் இது வரை இடம்பெற்று வருவதுடன், 2020 ஆம் ஆண்டளவில் இரும்பினால் செய்யப்பட்ட பதனிடும் எந்திரங்களை ஏற்றுமதி விவசாயப் பயிர்களைப் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து முழுமையாக அகற்றுவதற்கு இதன் பிரகாரம் திட்டமிடப்பட்டுள்ளது.

### செயற்றிட்டம் 14 - கறுவா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சிலோன் சினமன் (Ceylon Cinnamon) என்ற பெயர், உலகப் புகழ்பெற்ற இலங்கையின் கறுவாவுக்கு சர்வதேச சந்தையில் உயர் கிராக்கி காணப்படுவதுடன், அச்சந்தைக்கு கறுவாவினை வழங்கும் நாடுகளுக்கிடையே ஒரு உன்னதமான இடம், இலங்கைக்கு உரித்தாகியுள்ளது. உலகின் ஏனைய நாடுகளிலிருந்து சர்வதேச சந்தைக்கு முன்வைக்கும் கறுவா மற்றும் கறுவா தொடர்பான உற்பத்திகளுடன் போட்டா போட்டியிட்டு எமது தனித்துவமான இடத்தினை மேலும் பாதுகாப்பதற்கு கறுவாவுடன் தொடர்பான பெறுமதியினைச் சேர்த்து புதிய உற்பத்திகளை அறிமுகஞ் செய்வதற்கும், கறுவாவிலுள்ள மருத்துவகுணமிக்க ஆரோக்கியமான பண்புகள் மற்றும் பெறுமதி தொடர்பில் ஆய்வுகளுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்பு மற்றும் அத்தகவல்களை பிரசுரித்தல், கறுவா உற்பத்திகளுக்கு தரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவற்றிற்கு உயர்ந்த அங்கீகாரமொன்றினை உறுதிப்படுத்துவதும் அத்தியாவசியமான விடயங்களாகி உள்ளன. அதன் பிரகாரம் இச்செயற்பாடு தேசிய விஞ்ஞான அடிப்படையுடன் இணைந்து இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய விஞ்ஞான அடிப்படை மற்றும் ஐந்து அரச பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைந்து கறுவாவுடன் தொடர்பான ஐந்து ஆய்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. இதற்கு மேலதிகமாக கறுவாத் தொழிற்சாலையின் மேம்பாட்டிற்குப் பாரிய தடையாகக் காணப்படும் கறுவா வெட்டுபவர்களின் பற்றாக்குறைக்கு தீர்வுகளைக் கண்டுபிடித்தல் தொடர்பில் கொஸ்கொட கறுவாப் பயிற்சிப் பாடசாலையினை மேம்படுத்துவதற்கும், இளம் சந்ததி கறுவாப் பட்டையினை வெட்டுதல் உட்பட பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு நாட்டம் கொள்ளச் செய்யும் பொருட்டு தயாரிப்பாளர்களுக்கு தேசியத் வாழ்க்கைத் தொழில் சான்றிதழ் (NVQ) மட்டப் பயிற்சிப் பாடநெறியினை ஆரம்பித்து தொழில்முறை அங்கீகாரத்தினை உருவாக்குவதற்கும் தேவையான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டுள்ளது. இச்சான்றிதழினை வழங்கும் ஆரம்ப நடவடிக்கையாக கறுவா தயாரிப்பாளர்கள் தொடர்பில் முன் மதிப்பீட்டுச் சான்றிதழ் பத்திரம் (RPL) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் இது வரை 282 பேருக்கு இந்த RPL சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 10,000 பேருக்கு NVQ சான்றிதழினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.





**செயற்றிட்டம் 15 - ஊவா மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள்**

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தின் விவசாயத் துறையிலும் மற்றும் விலங்கு வேளாண்மைத் துறையிலும் மறுவாழ்வினை ஏற்படுத்துவதற்கு பிந்துனுவெவ சேவைப் பயிற்சி நிறுவனத்தினை புத்தாக்கஞ் செய்வதற்கு முன்வைத்து அபிவிருத்தி செய்வதற்கும், பொரலந்த விலங்குப் பண்ணையினைப் புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊவா மாகாணத்தினதும் மற்றும் ஏனைய அருகிலுள்ள மாவட்டங்களில் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நவீன விவசாய தொழில்நுட்பம் தொடர்பில் நடைமுறை மற்றும் செய்முறைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு பிந்துனுவெவ சேவைப் பயிற்சி நிறுவனத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பிரதேசத்தின் விதை கிழங்கு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான அடிப்படை விதைகள் மற்றும் நாட்டும் பொருள் உற்பத்தியினை நோக்காகக் கொண்டு அமுற்படுத்தும் இக்கருத்திட்டத்தின் கீழ் பல அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், மாதிரிப் பயிர் வளர்ப்புக்கள் தொடர்பில் பாதுகாப்பான அரண்களை நிர்மாணித்தல், நீர் வடிவமைப்புத் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு கிணறு, குளம், குழாய்க் கிணறு மற்றும் குழாய்த் திட்டத்தினை அமைத்தல், விதை கிழங்குகளைக் களஞ்சியப்படுத்துதற்கு குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தினை நிர்மாணித்தல், ஒட்டு நாட்டுகை ஆய்வுகூடத்தினை புதுப்பித்தல் மற்றும் மூன்று மாதிரிப் பசுமை வெளிகளுக்கான கட்டளைகள் போன்ற பல செயற்பாடுகள், ஊவா மாகாண விவசாய அமைச்சின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றது.




இதற்கு மேலாக ஊவா மாகாணத்தின் பாற்பண்ணை விவசாயிகளுக்குத் தேவையான உயர்ரக கறவை பசுக்களை இனப்பெருக்கஞ் செய்து விவசாயிகளுக்கு சலுகை விலைக்கு வழங்கும் நோக்கங்களைக் கொண்டு பொரலந்த கால்நடைப் பண்ணையினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன், அதன் கீழ் உயர் தர இறக்குமதி பால் கறக்கும் கறவை மாடுகள் 100. 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இம் மாடுகளுக்கு, நவீன வசதிகளுடன் கூடிய ஒரு மாட்டுக் கொட்டகை, புற்களை வளர்த்தல், பதுங்கு குழிகளை அமைத்தல், நீரினை வழங்குவதற்கு சிறிய தொட்டியொன்றினை அமைத்தல் மற்றும் குழாய்க் கிணற்றினை அமைத்தல் போன்ற பல செயற்பாடுகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் பால் சேகரிப்பு அலகினை நிர்மாணித்தல், புற்கள் வளர்ப்பதை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் புல் வளர்ப்பினூடாக உள்ளக வீதித் திட்டத்தினை நிர்மாணித்தல் மற்றும் புல் வளர்ப்புத் தொடர்பில் நீர்ப்பாசனம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வசதிகளை மேம்படுத்துவதனூடாக நிறுவனத்தின் விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் அதனூடாக உயர்ரக மாடுகளை இனப்பெருக்கஞ் செய்து பிரதேசத்தின் பாற்பண்ணை விவசாயிகளுக்கு தேவையான பசுக்களை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கும் அதனூடாக நாட்டின் பால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.




**செயற்றிட்டம் 16 - மரக்கறி மற்றும் பழங்கள் பதப்படுத்தும் 10 நிலையங்களை நிர்மாணித்தல்.**

பிரதேசத்தின் விவசாயிகளின் உற்பத்தி ஏற்றுமதி சந்தையினை, இந்நாட்டு சிறப்புப் பல்பொருள் அங்காடி வலையமைப்புக்கு பொருந்தக்கூடியவாறு அமைத்துப் பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான வசதிகளைக் கொண்ட பதப்படுத்தும் நிலையங்களைப் நிரமாணிக்கும் நோக்கத்துடன் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் நிறுவப்படும் முதலாவது ஏற்றுமதி பதனிடும் நிலையம் அனுராதபுர மாவட்டத்தில் நாச்சதுவப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அதன் நிர்மாணப் பணிகள் 80% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய நிலையங்களை, பதுளை, அம்பாறை, யாழ்ப்பாணம், புத்தளம், நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மொனராகல மாவட்டங்களில் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மரக்கறி மற்றும் பழ விவசாயிகள் அடிக்கடி முகங்கொடுக்கும் விலை ஏற்ற இறக்கங்களுக்குப் முகங்கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்குவதும், தரத்தினைக் கொண்ட உற்பத்திகளை முன்வைப்பதனூடாக உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் நிரந்தர சந்தையொன்றினைப் பெற்றுக்கொள்ளுவதை உறுதிப்படுத்துவதும், இதனூடாக இடம்பெறுவதுடன், அதனூடாக விவசாயிகளுக்கும் மற்றும் உற்பத்தியாளர்களுக்கும் உயர் வருவாயினை பெற்றுக் கொள்ளுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்துதல் இதன் பிரதான நோக்கமாகும்

**செயற்றிட்டம் 17 - விவசாய சேவைகளை வழங்கும் நிலையங்களை அமைத்தல் (Farm Shed)**

விவசாயத்துறையில் நிலவும் ஊழியப் படைப் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாக விவசாயத்திலிருந்து விலகி நிற்கும் இளைஞர்களை விவசாயத்துறைக்குள் மீளவும் சுண்டி இழுப்பதற்கும், நவீன தொழில்நுட்பத்தினைக் கிராமத்திற்குள் கொண்வருவதனூடாக விவசாயத் துறையினை விளைத்திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும், கிராமமொன்றுக்கு விவசாய சேவைகளை வழங்கும் ஒரு தொழில் முயற்சியாண்மையினை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன், அவ்வாறான 375 அலகுகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் தற்போது இடம்பெற்று நிறைவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடத்தில் இவ்வாறான 200 விவசாய சேவைகளை வழங்கும் நிலையங்களை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையமொன்றுக்கு, மரக்கொப்புக்களை வெட்டும் இயந்திரமொன்று, குழிகள் தோண்டும் இயந்திரமொன்று, எண்ணெய் தெளிக்கும் இயந்திரம் மற்றும் தரையினை சமப்படுத்தும் இயந்திரம் என்றவாறு உபகரணத் தொகுதியொன்று, தலா ஒவ்வொரு தொழில் முயற்சியாண்மைக்கும் வழங்கப்படுவதுடன், இக்கருவிகளைப் பயன்படுத்தி பிரதேசத்தின் விவசாயிகளின் பயிர் வளர்ப்புக்களுக்கும் மற்றும் புதிய பயிர் வளர்ப்புக்களை ஆரம்பிப்பதற்கும் தேவையான சேவை வசதிகளை வழங்குவதனூடாக விவசாயத் துறையின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனை மேம்படுத்துவதனூடாக நாட்டிற்குக் கிடைக்கும் வருவாயினை அதிகரிப்பதற்கு இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**செயற்றிட்டம் 18 - வருவாய்களைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.**

கிழக்கு மாகாணத்தினை முன்னணியாகக் கொண்டு நாடுபூராவும் பரந்துள்ள குறைந்த வருமானப் பயனாளிகளான மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கென பல்வேறான வருவாயினைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தும் பொறுப்பும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக இவ்வமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் நாட்டின் பல்வேறான பிரதேசங்களில் இனங்காணப்பட்ட சிறு மற்றும் நடுத்தரளவு வருமானங்களைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் இதன் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேச செயலகப் பிரிவுகள் பற்றிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் வருமான நிலையினை மேம்படுத்தும் நடவடிக்கையாக பற்றிக் கைத்தொழில் தொடர்பிலான முறைசார் பயிற்சியொன்றினை, 600 பயனாளிகளுக்கு வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தத்தம் கைத்தொழிலினை முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 644 பேருக்கு புடைவை நெசவுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்தியதனூடாக அவர்களுக்கு சுயதொழிலினை ஆரம்பிப்பதற்குத் தேவையான உபகரண வசதிகள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்குவதும் இடம்பெற்றுள்ளதுடன், அடிப்படை மூலதனத்தினைப் பெற்றுக் கொள்ளுவதில் சிக்கலினைக் கொண்ட குறைந்த வருமானப் பயனாளிகள் சுயதொழில் செய்து வரும் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் 17 பெண்களுக்கு தையல் எந்திரங்களை வழங்குவதும் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் இடம்பெற்றுள்ளது.

அதே போல மட்பாண்ட, களிமண் கைத்தொழிலுடன் தொடர்பான உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தும்புடன் தொடர்பான பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு தும்புடன் தொடர்பான பொருள் உற்பத்தியாளர்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குவதும் மேலும் இடம்பெற்றுள்ளதுடன், கிழக்கு மாகாணத்தினை முன்னணியாகக் கொண்ட இக்கருத்திட்டங்களை, எதிர்வரும் வருடத்தில் ஏனைய மாகாணங்கள் வரை விரிவுபடுத்துவதற்கும் இவ்வமைச்சு எதிர்பார்த்துள்ளது.

**செயற்றிட்டம் 19 - விளம்பரம் மற்றும் அனுபங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்கள்.**

இதன் கீழ் உள்ளூர் வெளியூர் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளுக்கு கலந்துகொள்ளுவதும், சர்வதேச மகாநாடுகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களையும் மற்றும் ஏனைய பங்குதாரர்களையும் கலந்துகொள்ளச் செய்வதும், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு அமைச்சின் கடமைப் பொறுப்புத் தொடர்பில் விரிவான விளம்பரத்தினை வழங்குவதும் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

## 6.3. 2018.01.01 - 2018.12.31 வரைக்கும் டைமறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (சமூக நலன்பரி பிரிவு

**செயற்றிட்டம் 1 - அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்**

இதன் கீழ் விசேடமாக அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் அவர்களின் பொருளாதாரம்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதற்கு அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழில்நுட்ப மூலோபாயங்களைப் பயன்படுத்தி தற்போதுள்ள சந்தைக்கு ஏற்றவாறு தொழில்வாண்மையான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களினூடாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும், உற்பத்திகளுக்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் நாட்டத்தினை வென்றெடுப்பதற்கு "திரிய" வர்த்தக முத்திரையின் கீழ் தரமான சந்தையினை அறிமுகஞ் செய்வதற்கும் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.





**திரிய" வர்த்தக முத்திரையின் கீழ் தரமான பொருட்களை சந்தைக்கு அறிமுகஞ் செய்தல்.**

அதே போல அவர்களின் சமூக நலன்புரிச் செயற்பாடுகளுக்கென தேவையான வசதிகளை வழங்குவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மீதும், அது தொடர்பில் தேவையான அரச கொள்கைகளைத் தயாரித்து செயற்படுத்துவதற்குத் தேவையான பொறித்தொகுதிகளை தயாரிப்பதன் மீதும் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பிரதேச செயலக மட்டத்தில் இனங்காணப்படும் அங்கவீனமுற்ற சிறார்கள் மீதும் இங்கு விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களின் கல்விக்கும் மற்றும் விசேட தேவைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான விசேட செயற்பாடுகள், ஒரு வேடிக்கையான சூழலில் ஒருங்கிணைக்கப்பட்டு, இதன்கீழ் பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்படுவதுடன், அச்சிறார்களுக்கு முறைசார் வழிகாட்டலினை வழங்குதல் மற்றும் பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு பாதுகாப்பு நிலையங்களை மாகாண மட்டத்தில் அமைத்தல், விரிவுபடுத்துவதும், அவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறுகின்றது.





**விசேட தேவைகளைக் கொண்ட சிறார்களை ஒன்றிணைத்தல் மற்றும் விசேட கல்விக்கு அனுப்புதல்.**

அங்கவீனமுற்ற நபர்களின் கலாசார மற்றும் கலைத்திறமைகளை மேம்படுத்துவதற்கென பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள், பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், "சித் றூ" தேசியக் கலாசார கலை நிகழ்வு, இதனுள் சிறந்த இடமொன்றினை சுவீகரித்துள்ளது. அது அங்கவீனமுற்ற நபர்களுக்கிடையே விசேடமாக அங்கவீனமுற்ற இளைய சந்ததியினை நாட்டங்கொள்ளச் செய்வதற்கும் மற்றும் பாராட்டுதலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக அவர்களின் உன்னதமான கலைகள் மற்றும் கலாசார இயலுமைகளை

மேம்படுத்துவதற்கும் இதனை அனைவர் முன்நிலையிலும் வெளிக்கொணர்வதற்கும் இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது.




**“சித்றூ” தேசியக் கலாசார கலை நிகழ்வு 2018 - தாமரைத் தடாக அரங்கு**

அங்கவீனமுற்ற நபர்களுக்கு விளையாட்டில் சம வாய்ப்பினை உரித்தாக்கிக் கொடுப்பதற்குத் தேசிய தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு, பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பினை வழங்குவதற்கும், அங்கவீனமுற்ற சமுதாயத்தின் சுய உதவி அமைப்புக்களை வலுவூட்டுவதற்கும் மற்றும் பல்வேறான திறமைகளைக் கொண்ட அங்கத்தவர்களைத் தேசிய மட்டத்தில் பாராட்டுவதற்கும் சுவசக்தி அபிமானி தேசிய விருது வழங்கும் வைபவத்தினை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் எமது அமைச்சினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




**அங்கவீனமுற்ற நபர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு - 2018**

அதன் பிரகாரம், அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் வறுமையினைக் குறைப்பதற்குப் பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வமைச்சினூடாக செயற்படுத்தப்படுகின்றது. ரூபா. 3000/- வீதம் மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவொன்றினை வழங்குதல், இருதயம், முழங்கால், இடுப்பு எலும்புகள், கண் அறுவை சிகிச்சை, வைத்தியசாலைகளிலற்ற மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல், சிகிச்சைகளுக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றிற்கு ஒரு தடவை மாத்திரம் ஆகக்கூடியது ரூபா. 20,000/- உதவி நிதியொன்று வழங்கப்படுதல், அங்கவீனமுற்ற நபர்கள் சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்கு ரூபா. 25,000/- உதவி நிதியொன்று வழங்கப்படுதல், பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 10,000/- ஆகக்கூடியதன் கீழ் உதவியொன்று வழங்கப்படுதல், ஆரம்பத்திலிருந்தே இனங்காணப்படாத சிறுநீரக நோயினால் (CKD) பீடிக்கப்பட்ட குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு மாதாந்தம் ரூபா. 5,000/- கொடுப்பனவொன்றும் வழங்கப்படுதல், சிறுநீரக நோயினால் பெற்றோரினை இழந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்களைப் பாதுகாக்கும் இல்லங்கள்/நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பினை வழங்குதல் போன்ற பல நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சினூடாக அமுற்படுத்தப்படுகின்றது. மேலும் போதைப்பொருள் மீட்பு மற்றும் புனர்வாழ்வுக் கருத்திட்டத்தினூடாக போதைக்கு அடிமையானவர்களைப்

புனர்வாழ்வளித்து வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் அவர்களைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே மேலும் உன்னதமான ஒன்றாகும். வெற்றிகரமாகப் பயிற்சியினை நிறைவு செய்யும் அங்கவீனமுற்ற பயிலுனர்களுக்கு சுயதொழில் உபகரணத் தொகுதியினை வழங்குதல், பிரத்தியேக வியாபார நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துதல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அதிகமானவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்குச் சகல மாகாணங்களிலும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

2018 ஆம் ஆண்டிற்கான அங்கவீனமுற்றவர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 64.4 | 59.89 |
| மீண்டுவரும் | 2,484.98 | 2,469.13 |
| ஏனைய | 18.7 | 19.66 |




**போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு போதை மீட்பு மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம்**

விழிப்புலனற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தினூடாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு கண்வில்லைகள், வெள்ளைப் பிரம்புகளை வழங்குதல், கல்வி உதவிகளை வழங்குதல், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் விழிப்புலனற்ற பிள்ளைகளுக்கு டெசி றெக்கோட்டர் எந்திரங்கள் மற்றும் பிறெய்ல் எந்திரங்களை வழங்குவதும் இடம்பெற்று வருகின்றது. இந்தச் சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவதன் அமைச்சின் பிரதான இலக்காகவிருப்பது, அங்கவீனமுற்ற சமுதாயத்தின் நலன்புரி மற்றும் அவர்களின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்துவதுமாகும். இதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் 400 பங்களிப்புடன் 2018.10.15 ஆந் திகதி பத்தரமுல்ல, சுஹுறுபாய வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய தினம், திசம்பர் மாதம் தெகிஅத்தகண்டியவில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.




**சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினக் கொண்டாட்டம் 2018**

2018 ஆம் ஆண்டிற்கான சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறு.

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 154.88 | 142.54 |
| மீண்டுவரும் | 552.68 | 521.04 |

**செயற்றிட்டம் 2 - அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்**

நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.5 மில்லியன் வரையான முதியோர்களின் நலன்புரி மற்றும் எதிர்காலப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டு அதில் மூத்த பிரஜைகளுக்கென, அமைச்சு மகத்தான பணியொன்றினை நிறைவேற்றி வருகின்றது. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் முதியோர் சங்கங்களை அமைத்து அதனூடாக முதியோர்கள் தனிமைப்படுத்தப்படுவதைக் குறைத்தல், முதியோர் பகல் நேர நிலையங்களை அமைத்தல், சகல முதியோர் இல்லங்களினைத் தரத்தின் பிரகாரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், முதியோர்களுக்கான வாழ்வாதர வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக அவர்கள் உள ரீதியில் தங்கியிருப்பதை விடுவிப்பற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதனூடாக விழிப்புணர்வினை அதிகரித்தல், முதியோர் தேவைகளை இனங்காணுதல் மற்றும் அது தொடர்பில் கொள்கைகளைத் தயாரித்து செயற்படுத்துதல், முதியோர்களுக்கான தகவல்களை நாளதுவரைப்படுத்துதல், பிள்ளைகளினால் கவனித்திற் கொள்ளப்படாத பெற்றோர்களுக்கு நியாயத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை பராமரிப்புச் சபையுடன் இணைந்து எடுத்தல் மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குதல் போன்ற மகத்தான பணி எம்மால் இடம்பெற்று வருகின்றது.

2019 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே, 256 முதியோர் இல்லங்களைத் தரப்படுத்துதல், பதிவு செய்தல், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் முதியோர் இல்லங்களில் புதிய நிர்மாணிப்புக்களைச் செய்தல் மற்றும் புதுப்பிப்பதற்கென இடம்பெற்றுள்ள வேண்டுகோளுக்கமைய ஒதுக்கீடுகளை வழங்குதல், முதியோர் இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு உடலாரோக்கியத்தினை மேலோங்கச் செய்வதை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்துதல், இதுவரை 12,000 மருத்துவ சிகிச்சைகள் நடாத்தப்பட்டமை மற்றும் எதிர்வரும் காலத்தில் கண்வில்லைகள் மற்றும் மற்றும் செவிப்புலக் கருவிகள் 2000 வழங்குதல், 175 முதியோர் பகல்நேர நிலையங்களுக்கு உதவிகளை வழங்குதல், முதியோர்கள் தமது இல்லங்களினுள்ளே வாழ்வதற்கான தேவையான ஆகக்குறைந்த வசதிகள், ஆரோக்கியமான பொருட்களை வழங்குதல் மற்றும் முதியோர்களுக்கு உடற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதற்கு அமைச்சு தற்போது திட்டங்களைத் தயாரித்துள்ளது.

அங்கவீனமுற்ற சமுதாயம் அன்றாடம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கென சுய உதவி அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு (நீர் வசதிகள், மின்சார வசதிகள், நீர் மெத்தை, காற்று மெத்தை, கொமட் மற்றும் பிரவேசிப்பு வசதிகள்) தேவையான நேரடிப் பயன்களை வழங்கி அச்சமுதாயத்தினை வலுவூட்டுவதற்கு பல செயலூக்கமான நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. இதன் கீழ் எதிர்வரும் வருடத்தில் 14,000 கிராமிய முதியோர் அமைப்புக்களை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு நிகராக பிரதேச செயலக மட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்தின் சுய உதவி அமைப்புக்களை வலுவூட்டுதல் மற்றும் பல்வேறான திறமைகளைக் கொண்ட அங்கத்தவர்களைத் தேசிய மட்டத்தில் பாராட்டுவதற்கு சுவ சக்தி அபிமானி தேசிய

விருது வழங்கும் வைபவமும் இதன் கீழ் இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம், சுவசக்தி அபிமான தேசிய விருது வழங்கும் வைபவம் 2018 ஆம் ஆண்டில் தாமரைத் தடாக அரங்கில் வெற்றிகரமான நடாத்தப்பட்டுள்ளது.





**சுவசக்தி அபிமானி தேசிய விருது வழங்கும் வைபவம் - 2018 தாமரைத் தடாக அரங்கு**

இதற்கு மேலாக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக சர்வதேச முதியோர் தினம், 3000 பேர்களின் பங்குபற்றலுடன் அம்பாறை மாட்டத்தில் நடாத்தப்பட்டுள்ளதுடன், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து தேசிய தன்னார்வத் தொண்டர்கள் பாராட்டப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டிற்கான முதியாகளுக்கான தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறு.

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| **மூலதனம்** | 7.00 | 1.58 |
| **மீண்டுவரும்** | 150.00 | 129.47 |
| **ஏனைய (மாதாந்த கொடுப்பனவு ரூபா 2,000)** | 10,000.00 | 9,590.03 |

**செயற்றிட்டம் 3 - உளவளத்துணைச் சேவைகள்**

தற்போதுள்ள சமூகப் பொருளாதார சூழல் மற்றும் தொழில்நுட்ப உலகில், உள நெருக்கீடு மற்றும் மனவழுத்தத்துடன் இருக்கும் சமுதாயத்திற்கு விசேட உளவளத்துணை சேவை தேவைப்படுகின்றது. இக்குழுவுக்கு தரமான உளவளத்துணைச் சேவையொன்றினை வழங்குதல் காலத்தின் தேவையாகிவுள்ளதுடன், அது தொடர்பில் தேவையான சட்ட வரைவினைத் தயாரித்தல் மற்றும் 24 மணிநேர நடமாடும் தொலைபேசி உளவளத்துணைச் சேவையினை முறைசார் திட்டமொன்றின் கீழ் தரப்படுத்துதல், உளவளத்துணைச் சேவையினை மேம்படுத்துவதற்கு விளம்பரச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், உளவளத்துணை உத்தியோகத்தர்களின் திறமைகளை மேம்படுத்துதல், தேசிய மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் உளவளத்துணைச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், சமுதாயம் உளச் சீர்குலைவுகளுக்கு உட்படுவதைத் தடுப்பதற்கு குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், சித்சரண உளவளத்துணை நிலையங்களை அமைத்தல் போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சினூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனுள்ளே கடந்த சில வருடங்களினுள் பல்வேறு உளநெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத்துணைச் சிகிச்சைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல், அரச உத்தியோகத்தர்களுக்கு "சுபோதயா" உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் திருமணத்திற்கு முன்னரான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுதல், பாடசாலை சிறார்கள், ஆசியர்களுக்கான ஆளுமை விருத்தி, தலைமைத்துவத் திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் குழுச் செயற்பாடுகளை நடாத்துதல், "தொழில்வாண்மையான வாழ்க்கையில் உள ஆரோக்கியம்" என்ற தலைப்பில் நிறுவன உத்தியோக்தர்கள் விழிப்புணர்வூட்டப்படுதல், இந்நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் விளம்பரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை இடம்பெற்றுள்ளது.

சர்வதேச உள ஆரோக்கிய வாரத்திற்கு நிகராக உளவளத்துணைக் களத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களுக்கிடையே உளவளத்துணைச் சேவையினை முகாமை செய்யும் பொறிமுறையொன்றினைத் தயாரிப்பதற்கு முன்னிற்றல், புதிய போக்குகள் தொடர்பில் உரையாடலினை ஏற்படுத்துவற்கு இயலுமையும், மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் தனிநபர் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதனூடாக பயனாளிகளை உளரீதியில் வலுவூட்டுவதற்கான இயலுமையும், நாம் பெற்றுக்கொண்ட சாதனைகளாவதுடன், உள நோய்களைக் குறைப்பதற்கு உளத்தினைச் சிறந்தவாறு மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் 6547 நடாத்தப்பட்டு அதனூடாக 318,768 சேவைநாடியினர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு முடிந்தமையும் எமது பிற சாதனைகளாகும். அதேபோல உளவளத்துணைத் துறையின் புதிய போக்குகள் தொடர்பில் உத்தியோகத்தர்களின் அறிவினை மேம்படுத்தி சேவை நாடியினர் தொடர்பில் தரமான உளவத்துணைச் சேவைகளை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கு முடிந்தமையும், உளவளத்துணை விடயம் தொடர்பில் நடைமுறை மற்றும் செயற்முறை அறிவினை மேம்படுத்துவதற்கு இயன்றமையும் இது வரை இவ்வமைச்சினூடாக சுவீகரிக்கப்பட்ட பிற சமூகப் பொருளாதாரப் பயன்களாகும்.

2018 ஆம் ஆண்டிற்கான உளவளத்தணை பிரிவிற்கான நிதி ஒதுக்கீடு ரூபா 25.00 மில்லியனில் 2018.12.31 ஆம் திகதிக்கான மொத்த செலவினம் ரூபா 14.488 மில்லியன்

ஆரம்பக் கைத்தொழில் கொள்கை UNEFA ஊடாக தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், இந்த அனைத்து நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கொண்டு எமது அமைச்சின் இறுதி நோக்கான ஏற்றுமதியிலிருந்து பாதுகாப்பான நாளைய நாளினை நாட்டிற்கு உருவாக்கிக் கொடுத்தல், விசேட தேவைகளைக் கொண்ட மக்கள் மற்றும் மூத்த பிரஜைகளுக்கு பாதுகாப்பான எதிர்காலமொன்றினை உருவாக்கிக் கொடுத்தல் போன்ற எதிர்பார்ப்புக்களை அடையப் பெறுவதற்கு இயலுமை கிட்டும் என்பதே எம் அனைவரின் ஏகோபித்த நம்பிக்கையாகும்.

07

# ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்



# ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## 7.1 அறிமுகம்

பண்டைய காலங்களிலிருந்து இலங்கை வாசனைத் திரவியங்கள் தொடர்பில் புகழினை சுவீகரித்திருப்பினும், அக்கைத்தொழிலுக்குத் தேசிய மட்டத்தில் கவனஞ் செலுத்தப்பட்டிருப்பது 1971 தேசிய விவசாயக் கொள்கையினூடாகவேயாகும். 1972 அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு இணையாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில், திணைக்களம், விவசாயத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அது வரை திணைக்களத்தின் கடமைப் பொறுப்பான புறம்போக்கான தேயிலை நிலங்களில் வாசனைத் திரவியங்களை வளர்க்கும் செயற்பாட்டிற்கு உலக உணவு அமைப்பு (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) ஊடாக ஆரம்பிக்கப்ட்ட பயிர் பரவல் மேம்பாட்டுக் கருத்திட்டங்களின் கடமைப் பொறுப்புக்களில் சில, திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன், ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட வாசதனைத் திரவியங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பயிர்கள் வளர்ச்சியின் முன்னோடியாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உருவாகியது.

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக அவ்வேளை காணப்பட்ட பெயரினை மாற்றி திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களமாக பெயர் சூட்டப்பட்டுள்ளதுடன், அதனூடாக வாசனைத் திரவியங்கள் மற்றும் பிற விவசாய உற்பத்தி ஏற்றுமதிகளுக்கான சட்ட அதிகாரங்களை வழங்கியது. பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துறையின் சகல ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், இத்திணைக்களத்தினூடாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம் வாசனைத் திரவியங்களின் துறைக்கு நாட்டத்தினை ஏற்படுத்தி அத்துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் விரிவாக நாடுபூராவும் வலையமைப்பொன்றினை அமைத்து துறைக்கு உரித்தான பங்குதாரர்களுக்கு வசதிகளை வழங்குதல் திணைக்களத்தினூடாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் முக்கிய கவனம், ஏற்றுமதியினை இலக்காகக் கொண்ட பின்வரும் பயிர் வளர்ப்புத் தொகுதிகள் தொடர்பில் செலுத்தப்பட்டுள்ளது. கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய், ஏலக்காய், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற வாசனைத் திரவியப் பயிர்கள் மீதும், கோப்பி, கொக்கோ. வனிலா போன்ற குடிபானப் பயிர்கள் மீதும் மற்றும் வெற்றிலை, பாக்கு போன்ற ஊக்கிப் பயிர்கள் மீதும் திணைக்களம் கவனஞ் செலுத்தியுள்ளது. அது தொடர்பில் தேவையான தொழில்நுட்ப அறிவு, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் உயர் விளைச்சலைத் தரும் விதைவகைகளை அறிமுகம் செய்தல் பிரதான பொறுப்பாவதுடன், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் துறையின் மேம்பாட்டிற்கென ஆய்வு அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் விரிவான சேவைகளை வழங்குதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

## 7.2 தொலைநோக்கு

வாசனைத் திரவியங்கள் மற்றும் உற்பத்தி ஏற்றுமதியில் தலைசிறந்தவர்களாகத் திகழ்தல்.

## 7.3 பணிக்கூற்று

அதிகளவில் அந்நியச் செலாவணியினை உழைத்தல், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் துறையில் ஈடுபட்ட சகல பங்குதாரர்களின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தியினை நோக்காக் கொண்டு, சூழலினைப் பாதுகாக்கும் வகையில் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் உற்பத்திகளில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியொன்றினை

உருவாக்குவாக்குவதற்கு தேவையான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாட்டினைத் திட்டமிடுதல் மற்றும் அமுலாக்குதல்.

## 7.4 நோக்கங்கள்

ஏற்றுமதி செய்யும் அளவினை மேம்படுத்தி உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதனுடாக அதிக அந்நியச் செலாவணி வருவாயொன்றினை ஈட்டிக்கொள்ளக்கூடியவாறு ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் துறையினை மேம்படுத்துதல்.

## 7.5 மூலோபாயங்கள்

1. சேதனப் பயிர்களினை வலுவூட்டுவதனூடாக உலக சந்தையில் சேதனப் பயிர்களுக்குள்ள சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
2. உற்பத்தித் திறனினைக் கொண்ட உயர் புதிய பயிர் வகைகளை துறைக்கு அறிமுகஞ் செய்வதனூடாக விளைச்சலினை உயர்வத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
3. தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதனூடாக பயிர்களின் விளைச்சலினை அதிகரிப்பதற்கு ஆய்வுகளை அமுலாக்குதல்.
4. துறையில் பெறுமதி சேர்த்துள்ள உற்பத்திகளை அறிமுகஞ் செய்வதற்கும் மற்றும் அவ் உற்பத்திகளை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
5. ஏற்றுமதி விவசாயப் பயிர் வளர்ப்பினை நாட்டினுள் மேலும் பிரபல்யப்படுத்துவதற்கு புதிய அணுகுமுறைகளைப் பாவித்தல்.

## 7.6 2018 ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட விளைவு (2018.01.01 – 2018.12.31 வரை)

### 7.6.1. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

| கருத்திட்டம் | நிகழ்ச்சித் திட்டம் | விளைவு |
|---|---|---|
| 1. ஏற்றுமதி பயிர் வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் | 1.1. உள்ளக நாற்று மேடைகளை மேம்படுத்துதல். | 1.1.1. 2018 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட விவசாயப் பயிர்கள் நாற்று உற்பத்தி 31 மில்லியன் நாற்றுக்களாகும். |
| | | 1.1.2. வருடந்தோறும் நாற்று உற்பத்திகளின் கொள்ளளவினை மேம்படுத்துதல். 3 நடுத்தர நாற்று மேடைகளுக்கு விளைத்திறனாக நீர் வழங்குதல் அமைக்கப்படுதல். நாற்றுமேடைகள் தண்ணீர் தேவைப்பாட்டினை உறுதி செய்கின்றது. |
| | 1.2. புதிய வளர்ப்புத் திட்டம் | 1.3.1. கறுவா, மிளவு, පැඟිරි மற்றும் கோப்பிச்செய்கைக்கு, 1016.98 கெக்டயர் புதிய பயிர் வளர்ப்பு நிலப் பரப்பு உருவாக்கப்படுதல். |
| | | 1.3.2. சாதிக்காய், கராம்பு, கொக்கோ, ஏலக்காய் போன்ற பயிர் வளர்ப்புக்கு, 52.8 கெக்டயர் புதிதாக நிலப் பரப்பு உருவாக்கப்படுதல் |
| | | 1.3.3. 328,252 பாக்கு நாற்றுக்களுக்கு புதிதாக பயிர் வளர்ப்பு நிலப்பரப்பு உருவாக்கப்படுதல். |

| | | |
|---|---|---|
| 2. உற்பத்தித் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 2.1. தனசவிய வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டம் | 2.1.1. 123,486 தோட்டங்கள் மற்றும் 11,820,069 ஏற்றுமதிப் பயிர் நாற்றுக்களை வளர்த்தல். |
| | 2.2. தற்போதுள்ள ஏற்றுமதி பயிர் வளர்ப்புக்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல். | 2.2.1. 376.2 கெக்டயர் வளர்ப்பில் நாற்றுக்களை நாட்டுவதனூடாக ஏற்றுமதிப் பயிர் வளர்ப்புக்கள் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்தல். |
| | 2.3. நீர் முகாமைத்துவத் திட்டத்தினை அமைத்தல். | 2.3.1. விளைத்திறனான நீர் முகாமைத்துவ மாதிரிக் கருத்திட்டங்கள் 25 உருவாக்குதல் |
| | 2.4. விவசாய சிகிச்சைக் கூடங்களை முன்னெடுத்தல். | 2.4.1. 15 மாவட்டங்களில் ஏற்றுமதி பயிர் வளர்ப்பு முகாமைத்துவம் தொடர்பில் விவசாய சமுதாயம் விழிப்புணர்வூட்டப்படுதல். |
| 3. ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் நிகழ்ச்சித் திட்டம். | 3.1. சேதன நிலங்களுக்கான மாற்று நிலங்களை வழங்குவதற்கு முதலீட்டு உதவியினை வழங்குதல். | 3.1.1. 346.6 கெக்டயரினை கரிம ஏற்றுமதி பயிர் வளர்ப்புக்கு மாற்றுதல். |
| | 3.2. சேதன ஏற்றுமதி பயிர் வளர்ப்பு கிராமங்களை பிரபல்யப்படுத்துதல். | 3.2.1.சேதனப் பயிர் வளர்ப்பினை முன்னெடுக்கும் 29 சமுதாய அடிப்படை அமைப்புக்களை அமைத்தல்.<br>3.2.2. 08 சேதனக் கிராமங்கள் தொடர்பில் சர்வதேச சேதனச் சான்றிதழ்களை வழங்குதல்.<br>3.2.3. சேதனப் பயிர் உற்பத்திகளுக்கு சந்தையினை ஒருங்கிணைப்புச் செய்தல். |
| | 3.3.பங்குதாரர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 3.3.1. சேதனப் பயிர் வளர்ப்புத் தொடர்பில் மக்களுக்கிடையே உந்துதலினை ஏற்படுத்துதல். |
| | 3.4. பொருத்தமான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துதல். | 3.4.1.பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பாவித்து உச்ச விளைச்சலினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உயர் தரத்தனைக் கொண்ட ஏற்றுமதி பயிர் உற்பத்திகளை உருவாக்குதல். (27 பதனிடும் நிலையங்கள் மற்றும் 25 ஏற்றுமதிப் பயிர் உற்பத்திகளைத் தயாரிக்கும் எந்திரங்கள்) |
| | 3.5. ஏற்றுமதி பயிர் வளர்ப்புக்கு சிறந்த விவசாய அங்கீகாரம் (GAP) மற்றும் உற்பத்திச் செயற்பாட்டிற்கு சிறந்த உற்பத்தி அங்கீகாரத்தினையும் (GMP) அறிமுகஞ் செய்யும் | 3.5. 1. சிறந்த விவசாய நடைமுறைகள் மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை (பங்குதாரர்களுக்கிடையே) அமைத்தல். உயர் தரத்துடன் மற்றும் சிநேகபூர்வமான சூழலில் விவசாயத் திட்டங்களை அமைத்தல். அதனூடாக சிறந்த தரத்தினைக் கொண்ட தரமான |

| | | |
|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டம். | ஏற்றுமதி உற்பத்திகளை, ஏற்றுமதி சந்தைக்கு முன்வைத்தல். |
| 4. விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள். | 4.1. வாசனைத்திரவிய தோட்டக் கலையினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.<br>4.2. ஊடக நிகழ்ச்சித் திட்டம் | உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றும் துறை தொடர்பில் அக்கறை கொண்டவர்களுக்கும் நடைமுறை அறிவினை வினைத்திறனாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு இயன்றுள்ளமை. |
| 5. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 5.1 குறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.<br>5.2 சேவைத் திருத்தப் பயிற்சி நிறுவனம் - மாத்தளை. | விவசாயிகள் மற்றும் சகல பங்குதாரர்களின் அறிவு மற்றும் திறன் விருத்தியினூடாக வினைத்திறன் உற்பத்தி செயற்பாட்டினை அதிகரித்தல். |

## 7.6.2 ஆய்வு நிகழ்ச்சித் திட்டம்

| கருத்திட்டம் | நிகழ்ச்சித் திட்டம் | முடிவு |
|---|---|---|
| **1. ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உபகரணத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.** | 1.1 கட்டிடத்தினைப் பழுதுபார்த்தல் மற்றும் நிர்மாணித்தல்.<br>1.2 உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் (அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள்)<br>1.3 வாகனங்களைப் பழுதுபார்த்தல். | ஆய்வுச் செயற்பாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல். |
| **2.பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்.** | 2.1 காலத்தின் அறிவுத் தேவைப்பாட்டின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | பதவியணயினரின் திறன் விருத்தியடைதல். |
| **3. ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான ஆய்வுகளை முன்னெடுத்தல்.** | 3.1. ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான நிலப்பரப்பினை அதிகரிப்பதற்கு 07 ஆய்வுகள் முன்னெடுத்துச் செல்லப்படுதல் (காலநிலை சீதோசண நிலைக்கு ஈடுகொடுக்கும் ஏற்றுமதி விவசாயப் பயிர் வகைகளை அறிமுகஞ் செய்தல்.)<br>3.2. நோய்கள் மற்றும் பூச்சிகளைத் தடுக்கும் 25 ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுதல்<br>3.3. உற்பத்திச் செலவினைக் குறைக்கும் 09 ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுதல்.<br>3.4. ஏற்றுமதிப் பயிர்களின் பெறுமதி | 1. ஏற்றுமதி விவசாயப் பயிர் வளர்ப்பின் பரப்பளவினை அதிகரித்தல்.<br>2.ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் நோய்கள் மற்றும் பூச்சி புளுக்களைக் கட்டுபடுத்துதல்.<br>3.ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பு தொடர்பில் செலவாகும் உற்பத்திச் செலவினைக் குறைத்தல் மற்றும் |

| | | |
|---|---|---|
| | சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பிலான 15 ஆராய்ச்சிகள் முன்னெடுத்து செல்லப்படுதல்.<br>3.5. ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் 62 ஆராய்ச்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுதல்<br>3.6. ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தினை அதிகரிக்கும் 20 ஆராய்ச்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுதல்.<br>3.7. ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் சமூகப் பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் 02 ஆராய்ச்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுதல்.<br>3.8. சாத்தியத்தினைக் கொண்ட புதிய 34 பயிர்கள் தொடர்பில் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுதல். | உற்பத்தித் திறனினை அதிகரித்தல்.<br><br>4. ஏற்றுமதிப் பயிர்களின் பெறுமதியனைக் கூட்டி உற்பத்திகளுக்கு ஒன்றுசேர்த்தல்.<br><br>5.ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி ஆற்றலினை அதிகரித்தல்.<br><br>6.ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தினை அதிகரித்தல்.<br><br>7.ஏற்றுமதி விவசாயப் பயிர் சந்தையின் செயல்நடைமுறை தொடர்பிலான தகவல்களை சமூகமயப்படுத்துதல்.<br><br>8.பிரதான ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கு மேலாக புதிய திறனைக் கொண்ட ஏற்றுமதிப் பயிர் விவசாய வளர்ப்புத் துறைக்கு ஒன்றுசேர்த்தல். |

## 7.7 எதிர்பார்க்கப்பட்ட சமூகப் பொருளாதார விளைவு

- ஏற்றுமதி பயிர் வளர்ப்பு மற்றும் தொடர்பான விவசாயிகளின் நேரடி மற்றும் மறைமுகமான முயற்சியாண்மைகளினதும் மற்றும் குடும்ப அலகுகளினதும் வருவாயினை அதிகரித்தல். அதனூடாக அவர்களின் பொருளாதார மட்டம் அதிகரித்தல் மற்றும் மொத்தப் பொருளாதார விளைவு உருவாக்கப்படுதல் (வருமான முரண்பாடுகளைக் குறைத்தல். பிரதேச முரண்பாடுகளைக் குறைத்தல் மற்றும் சேவையிலுள்ளோர் அதிகரிக்கப்படுதல் போன்றவாறு)
- ஏற்றுமதி வருமானம் உயர்வடைவதன் காரணத்தினால் உள்ளூர் பொருளாதாரம் வலுவூட்டப்படுதல். (தேசிய வருமானம் உயர்வடைதல், வர்த்தக இடைவெளி குறைவடைதல்.)
- சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் சந்தைப் பங்கு மேம்படுத்தப்படுதல்.
- உணவுப் பாதுகாப்பு நாட்டினுள் உறுதிப்படுத்தப்படுதல்.

## 7.8 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு - 2018

| மூலதனம் (ரூ.மி.) | மீண்டுவரும் (ரூ.மி.) |
|---|---|
| 555.5 | 623.965 |

## 7.9 2018.01.01 - 2018.12.31 வரையான செலவு

| நிதிமூலம் | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 555.500 | 488.194 |
| மீண்டுவரும் | 623.965 | 621.415 |
| மொத்தம் | 1179.465 | 1109.609 |

## 7.10 அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்த சவால்கள்.

- வர்த்தக ஒப்பந்தங்களைத் திருத்துதல்.
- ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டிருத்தல்.
- உலக சந்தை தேவை, விநியோக விலை மாறுபடுதல்.
- எதிர்பாராத பாதகமான காலநிலை மாற்றங்கள்.
- புதிதாக அறிமுகஞ் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் விசேடமாக சேதனப் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தரச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விவசாயிகளை நெறிப்படுத்துவதற்கு அதிக காலப்பகுதியினைச் செலவிட வேண்டியிருந்தது.

## 7.11 பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்தச் சாதனைகள்

- மதிப்பிடப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் நிலப்பரப்பளவு - 119,814 கெக்டயர்
- ஏற்றுமதியின் அளவு – 60,000 மெ.தொ.
- ஏற்றுமதி வருவாய் – ரூ. 71,970 மி.
- ஏற்றுமதி விவசாய வருவாய்க்கு பங்களிப்பு - 12.2%
- மொத்த தேசிய உற்பத்தி தொடர்பிலான பங்களிப்பு - 0.3%
- தொடர்புபட்ட குடும்பங்களின் எண்ணிக்கை – ரூ. 0.9 மி.

## 7.12 2018.01.01 - 2018.12.31 வரையில் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்கள்.

### 7.12.1 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

| நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 01 | பயிர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| இடங்கள் | பதுளை, கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| இலக்கிடப்பட்ட குழுக்கள் | ஏற்றுமதி பயிர் வளர்ப்பு விவசாயிகள் |
| ஆரம்பிக்கப்பட்ட தினம் | 2018.01.01 |
| விளைவு | ஏற்றுமதி நடவுப் பொருட்களை உயர் தரத்துடன் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முடிந்தமை, ஏற்றுமதி விவசாயப் பயிர் வளர்ப்பு |

| | |
|---|---|
| | பிரபல்யமானமை, சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதி வருமானம் உயர்வடைந்தமை, ஏற்றுமதி பயிர் வளர்ப்பாளர்களின் தனிநபர் வருமானம் உயர்வடைந்தமை. |

| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 02** | **உற்பத்தித் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|
| **இடங்கள்** | பதுளை, கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஏற்றுமதி பயிர் வளர்ப்பு விவசாயிகள் |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | ஏற்றுமதி பயிர் வளர்ப்பு இடங்களின் உற்பத்தித் திறன் உயர்வடைந்தமை, வீட்டு அலகுகளின் ஏற்றுமதி வளர்ப்புத் தேவைகளுக்கான செலவுகள் குறைவடைந்தமை, வீட்டு வருமானம் உயர்வடைந்தமை, பெண்கள் வலுவூட்டப்பட்டமை. |

| **நிகழ்ச்சித் திட்டம் – இலக்கம் 03** | **ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|
| **இடங்கள்** | பதுளை, கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர்களுடன் தொடர்பான உற்பத்தியாளர்கள். |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | சேதன ஏற்றுமதிப் பயிர்களுக்கு நிலவும் உயர்வான கிராக்கிக்கு பொருந்தக்கூடியவாறு சந்தைப் பயன்களைப் பெற்றுக் கொள்ளுதல், இரசாயன உரம் மற்றும் வேளாண்மை இரசாயனம் பாவிப்பதை குறைப்பதனூடாக சுற்றுச்சூழல் பாதிப்பினைக் குறைக்க முடியும், அறுவடை செய்யும்போது நவீன தொழில்நுட்பங்களைப் பாவிப்பதனூடாக அறுடையாளர்களின் உச்சப் பொருளாதாரப் பயன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடிதல். |

| **நிகழ்ச்சித் திட்டம்- இலக்கம் 04** | **விழிப்புணர்வூட்டுதல் மற்றும் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள்** |
|---|---|
| **இடங்கள்** | 24 மாவட்டங்கள் |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பாளர்கள் |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிச் சந்தையினை விரிவுபடுத்துதல், ஏற்றுமதி பயிர் வளர்ப்பு தொடர்பில் விவசாயிகளின் நோக்கு உயர்வடைதல் மற்றும் ஏற்றுமதி வருவாய் உயர்வடைதல். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்-இலக்கம் 05** | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| **இடங்கள்** | 24 மாவட்டங்கள் |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பாளர்கள் |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | விவசாயிகள் மற்றும் சகல பங்குதாரர்களின் அறிவு மற்றும் திறன் விருத்தியினூடாக வினைத்திறனான உற்பத்தி செயற்பாட்டினை ஏற்படுத்துதல். |

## 7.12.2 ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்-இலக்கம் 01** | **ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல் மற்றும் உபகரணத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.** |
| **இடங்கள்** | பதுளை,கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பதவியணியினர். |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன் உயர்வடைதல். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்-இலக்கம் 02** | **பதவியணியினர் பயிற்சி** |
| **இடங்கள்** | பதுளை, கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பதவியணியினர். |
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | பதவியணியினரின் திறனினை மேம்படுத்துதல். |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்-இலக்கம் 03** | ஏற்றுமதி விவசாயப் பயிர் வளர்ப்புத் தொடர்பிலான ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல். |
| **இடங்கள்** | பதுளை, கொழும்பு, களுத்துறை, காலி, கம்பகா, கம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, குருனாகல், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகல, நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம். |
| **இலக்கிடப்பட்ட குழுக்கள்** | - |

| | |
|---|---|
| **ஆரம்பிக்கப்பட்ட தினம்** | 2018.01.01 |
| **விளைவு** | ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பின் போக்கு உயர்வடைதல், காலநிலை மற்றும் சீதோசண மாற்றங்களுக்கு நிகராக ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பினை தொடர்ச்சியாக முன்னெடுத்தல், ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பு இடங்களின் உற்பத்தித் திறன் உயர்வடைதல், பூச்சி அரிப்பு மற்றும் நோய்களுக்கு வெற்றிகரமான முகங்கொடுப்பதற்கு இயலுமை கிடைத்தல், ஏற்றுமதிப் பயிர் வளர்ப்பு விளைச்சல் உயர்வடைதல், பெறுமதிசேர்க்கப்பட்ட ஏற்றுமதிப் பயிர்களுக்கு உயர் கிராக்கி நிலவுதல், சந்தைப் பங்கு அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள் பல்வகைப்படுத்தப்படுதல். 2021 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருவாயினை டொலர் 1000 மில்லியனாக இலக்கினை எட்டச் செய்தல். |

08

# விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டம் (ASMP)

# விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டம்

### (பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்)

விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டம், பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி கூறானது வர்த்தக மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாய வியாபாரம் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்பவற்றை மேம்படுத்துவதில் பெறுமதிச் சங்கிலிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டு உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் முழுதுமளாவிய கருத்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள் யாதெனில் விவசாய விளைவுப்பெருக்கத்தை அதிகரித்தல், சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தல், சிறுதோட்ட விவசாயிகளின் பெறுமதி சேர்ப்பை மேம்படுத்தல் பேன்றவற்றுக்கு ஆதரவளித்தல் மற்றும் கருத்திட்ட பகுதியினுள் விவசாய வியாபாரம், விவசாய பல்வகைப்படுத்துகை, தொழில்நுட்ப மேம்பாடு, உயர் பெறுமதிசேர் உற்பத்திக்கான பெறுமதி சங்கிலி அபிவிருத்தி, சிறந்த சந்தை தொடர்புகள் மற்றும் விவசாயத்திலிருந்தான வருமான பிறப்பாக்கம் என்பவற்றுக்கும் ஆதரவளிப்பதாகும். தற்போதுள்ள மற்றும் புதிதாக தாபிக்கப்பட்டுள்ள விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் விவசாய வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இணைந்த கொடைகள் 5 வருட கருத்திட்ட அமுலாக்க காலத்தில் திறந்த அழைப்பு பிரேரணையொன்றினூடாக உள்ளூரில் அடையாளங் காணப்பட்ட உப கருத்திட்டங்களுக்கு நிதியளிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

கருத்திட்ட வடிவமைப்பானது அரசாங்க மற்றும் தனியார் துறை பங்காண்மையின் அடிப்படையில் விவசாய பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி கோட்பாட்டின் அடிப்படையில் கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றதோடு துறையின் நவீனமயமாக்குகைக்கும் ஆதரவளிக்கின்றது. முழுதுமளாவிய விவசாய பெறுமதிச் சங்கிலிகளுக்கு ஆதரவளிப்பதற்கான அனுகுமுறையானது பெறுமதிச் சங்கிலியூடாக பெறுமதி சேர்ப்பை செய்வதன்மூலம் விவசாய வளர்ச்சியை பிறப்பிப்பதற்கான வெற்றிகரமான அபிவிருத்தி சாதனமொன்றாக இருப்பதோடு விவசாயிகளிலிருந்து தேசிய மற்றும் அல்லது சர்வதேச நுகர்வோர் வரையான செயற்பாட்டாளர்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் சிக்கல்களை தீர்ப்பதுமாகும். கருத்திட்டமானது இந்த செங்குத்தான ஒருங்கிணைப்பு தனியாக தொழிற்படமுடியாது என்பதை கவனத்திற்கொள்வதோடு, வர்த்தக மற்றும் ஏற்றுமதிசார் விவசாய வியாபாரம் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கிலும் சங்கிலியில் கிடைமட்ட ஒருங்கிணைப்பு அடிப்படைகளையும் கவனத்திற்கொள்கின்றது.

கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 16 பில்லியன்களாகும் இதில் ரூபா 9 பில்லியன் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு மற்றும் உலக வங்கி ஆகியவற்றினால் வழங்கப்படும்.

பிரேரணையின் முதல் அழைப்பு 2017 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு 1262 வியாபார கோட்பாட்டு குறிப்புகள் பெறப்பட்டதோடு அவற்றில் 502 செயன்முறையில் நுழைவதற்கு தகுதியுடையனவாக இருந்ததோடு, இதில் 84 கைத்தொழில்கள் அடிப்படையிலான நீரக வளர்ப்பு

மற்றும் பயிர் கொத்தனி நிகழ்ச்சித்திட்டங்களின் தனியார்கள் உள்ளிட்ட கொடையளிப்பு நிதியிடலுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆர்வத்தினை வெளிப்படுத்தல் கோட்பாட்டு குறிப்புகளின் இரண்டாம் அழைப்பு 2018 இல் திறந்து வைக்கப்பட்டதோடு மொத்தம் 287 ஆர்வ வெளிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றதோடு, இவற்றில் 140 ஏனைய தேவைப்பாடுகள் மற்றும் சபையின் அங்கீகாரம் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு கொடைகளை பெறுவதற்கு தகுதியானவையாக அடையாளங்கணப்பட்டன. ஒத்த உப துறைகளின், வியாபார தொழில்முயற்சிகளின் ஒத்த தன்மைகள் மற்றும் சீரான தன்மை என்பவற்றின் காரணமாக கொத்தணி நிகழச்சித்திட்டங்கிள் கீழ் அமுல்படுத்தப்படவுள்ள 790 கருத்திட்டங்கள் அடையாளங்காணப்பட்டிருக்கின்றன. இதில் இறால் மற்றும் அழங்கார மீன்வளர்ப்பு தொழில்முயற்சிகளுக்கு ரூபா 1 பில்லியன்களுக்கு மேற்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட முதலீட்டு பெறுமதியுடன் கூடியதாகும்.

தேவையான முன்தேவைப்பாடுகள் அனைத்தையும் பூர்த்திசெய்ததன் பின்னர், கொடை உடன்படிக்கைகளில் 81 ஆதரவாளர்கள் இணைந்துகொண்டதோடு, ஆரம்பத்தில் 16 ஆதரவாளர்களுக்கு முதற்கட்ட கொடை விடுவிக்கப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் இரண்டாம் கட்ட த்தில் மேலும் 5 பேர் பெற்றுக்கொண்டனர்.

2018 இல் மாத அடிப்படையிலான 81 ஆதரவாளர்களுக்கான கொடைகளின் விடுவிப்பு பின்வருமாறு உள்ளது: யூனில் ரூபா 11 மில்லியன், யூலையில் ரூபா 4.5 மில்லியன், ஆகஸ்டில் ரூபா 18.7 மில்லியன், செப்டெம்பரில் ரூபா 17.5 மில்லியன், ஒக்டோபரில் ரூபா 57.2 மில்லியன், நவம்பரில் ரூபா 76.6 மில்லியன், டிசெம்பரில் ரூபா 161.1 மில்லியன் ஆகும்.

மொத்தத்தில் ரூபா 244.6 மில்லியன்கள் 2018 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டதோடு திரண்ட செலவினம் ரூபா 697 மில்லியன்களாகும். அதன்வண்ணம், 2018 ஆம் ஆண்டில் சுமார் 34 வீத நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றதோடு கருத்திட்ட ஆரம்பத்திலிருந்து மொத்த கருத்திட்ட காலப்பகுதியில் முன்னேற்றம் 36 வீதமாகும்.

இந்த கொடைகளை பயன்படுத்துவதனூடாக இந்த கொடைகளை பெற்ற ஆதரவாளர்கள் தமது வியாபாரங்களை நவீனமயப்படுத்தவும் தரப்படுத்தவும் சிறந்த நிலையில் இருப்பர் என்பதோடு நாட்டில் முழுதுமளாவிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, விவசாய துறையில் வெளிநாட்டு செலாவணி உழைப்புகளை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, விவசாய பெறுமதி சங்கிலிகளில் சமூக உள்ளடக்கத்தையும் மேம்படுத்துகின்றது.

09

# சமூக சேவைகள் திணைக்களம்



# சமூக சேவைகள் திணைக்களம்

## 9.1 அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிகப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது சமூக சேவைகள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

திணைக்களத்தின் தொழிற்பாட்டிற்கு 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளுக்கிணங்க அடையாளங்காணப்பட்ட பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கப்பட்டுள்ளது. விசேடமாக அங்கவீனமுற்ற இளைஞர் சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அமுலாக்கப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வெற்றிகரமான முன்னேற்றமொன்றினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு திணைக்களத்திற்கு இயலுமை கிடைக்கப் பெற்றதுள்ளது. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சமூகத்துடன் ஒன்றிணைப்பதனூடாக அவர்களின் வாழ்வாதார வழிவகைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மிகவும் வெற்றிகரமான முன்னேற்றமொன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் இவ்வருடத்தில் இயலுமாகவிருந்தது

அங்கவீனமுற்ற சமுதாயம் தொடர்பில் அமுலாக்கப்பட்ட சமுதாய அடிப்படை புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (CBR) ஊடாக, 96.06% முன்னேற்றமொன்றினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு 2018 ஆம் ஆண்டில் முடிந்தமை. பல்வேறான மூலோபாயங்களின் பிரகாரம், திட்டமிடப்பட்ட மாவட்டங்கள் மற்றும் பிரிவுகள் மட்டத்தில் அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகின்றது. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல வெளிக்கள உத்தியோகத்தர்களும் நேரடியாகத் தொடர்புபட்டு ஒருங்கிணைந்து திட்டமிட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட அம்சமாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியொன்றாக அமுலாக்கப்படும் மருத்துவசாலைகளின் திட்டம் தொடர்பில் அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வெற்றிகரமான முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது என்பதை விசேடமாக குறிப்பிடுதல் வேண்டும். திணைக்களத்தின் செயற்திறனில் உள்ளடக்கப்படாத பாரிய நிகழ்ச்சித் திட்டப் பகுதியினை அடி மட்டத்திலுள்ள சகல வெளிக்கள உத்தியோகத்தர்களும் நிறைவேற்றுவதை பெருமையுடன் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

அங்கவீனமுற்ற சமுதாயம் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட தேசிய மட்ட நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு முடிந்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பயிலுனர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள், பதவியணியினர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களுக்கிடையே அன்னியோனிய தொடர்பு, புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையினை ஏற்படுத்துதல் எதிர்பாரக்கப்படுகின்றது. விசேடமாக வடக்கு கிழக்கு அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் நலன்புரி தொடர்பில் கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு புதிய கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளினை நிறைவு செய்தவற்கு, இறுதிக் கட்டத்திற்கு வருவதற்கு முடிந்துள்ளது.

முன்பிள்ளைப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உளப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிட்டு தேவையான சேவை வசதிகளை வழங்குவதற்கு கொழும்பினை மையமாகக் கொண்டு சிறுவர் வழிகாட்டி நிலையமொன்று மகரகமவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிலையத்தினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினூடாக

கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றமொன்றினை சுவீகரித்துக் கொள்ளுவதற்கு இவ்வருடத்தில் முடிந்துள்ளமை. திணைக்களம் அமுலாக்கியுள்ள பிரதான நிகழ்ச்சித் திட்டமொன்று போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்தல், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை வதிவிடத்தில் வைத்து புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் போதை மீட்பு நிகழ்ச்சித் திட்டங்களைப் பிரதேச மட்டத்தில் அமுலாக்குவதனூடாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றமொன்றினை சுவீகரித்துக் கொள்ளுவதற்கு முடிந்துள்ளது. சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் விளைத்திறனாக மேம்படுத்துவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு வேலைத்திட்டங்கள், மகாநாடுகள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு முன்வைத்தல் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுமொத்த வகையில் 2018 ஆம் ஆண்டில் பின்தள்ளப்பட்ட மற்றும் இன்னல்களுக்கு உட்பட்ட சமுதாயத்திற்கென அமுற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 93.77% முன்னேற்றமொன்றனை சுவீகரித்துக்கொள்ளுவதற்கு முடிந்துள்ளமை என்பதை விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டுள்ள மீண்டுவரும் செலவுகளாக பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா. 552,780,000 கிடைக்கப் பெற்றுள்ளதுடன், சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு ரூபா. 521,040,446 செலவு செய்யப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகள் தொடர்பில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா. 154,880,000 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வருடத்தில் உரிய பணிகளுக்கென ரூபா. 142,539,506 செலவு செய்யப்பட்டுள்ளது.

## 9.2 தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டளவில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட சமுதாயத்தின் உரிமைகள் மற்றும் சமத்துவம் நிரம்பப் பெற்ற பாதுகாப்பான இலங்கையொன்றை உருவாக்குவதில் முன்னோடியாக விளங்குதல்.

## 9.3 பணிக்கூற்று

இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதனூடாக சமூக உள்வாங்குதல் தொடர்பில் உள்ளக நிறுவகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான தலையீட்டினைக் கொண்டு புதுமையான பிரவேசத்தினூடாக துரிதம், வினைத்திறன் மற்றும் விளைதிறனுடனான ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக எதிர்பார்த்த விளைவுகளை அடையப் பெறுதல்

## 9.4 நோக்கங்கள்

I. 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் 500 பேரின் வாழ்க்கைத் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளை வலுவூட்டுதல்

II. பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய 100 பிள்ளைகளுக்கு வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல்.

III. 0 – 18 வயதிற்கிடைப்பட்ட பல்வேறான அங்கவீனத்தினால் பாதிக்கப்பட்ட 100 பிள்ளைகளின் அங்கவீனத்தினைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிடுதல்.

IV. அங்கவீனமுற்ற சமுதாயம் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் தலையிடுதல் மற்றும் வலுவூட்டுதல்.

V. சைகை மொழியினை அங்கீகரித்தல் மற்றும் ஊக்குவித்தல்.

VI. அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளை வழங்கும் தன்னார்வ அமைப்புக்களை வலுவூட்டுதல்.
VII. போதைப்பொருளுக்கு அடிமையான 300 பேரினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல், வாழக்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
VIII. பல்வேறான கால சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்கு சரியான வழிகாட்டலினை வழங்குதல்.
IX. சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் அறிவு, திறமை மற்றும் உளப்பாங்குகளை உயர்ந்தர நிலைக்கு கொண்டுவருதல்.
X. 500 செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்குதல்

## 9.5 2018 வருடத்தினுள் சுவீகரிக்கப்பட்ட விளைவு

I. புவக்பிட்டியவில் பெண்கள் பாதுகாப்பு நிலையத்தினை ஆரம்பித்தல்.
II. 2018.09.25 ஆந் திகதி அங்கவீனமுற்ற நபர்களின் தேசியத் தடகள விளையாட்டு வைபவம் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடாத்தப்படுதல்.
III. 2018.09.06 ஆந் திகதி அங்கவீனமுற்ற நபர்களின் சித் றூ கலாசார நிகழ்வு தொடர்பில் மாவட்ட மட்டத்தில் குழுப் போட்டிகளை நடாத்துதல்.
IV. சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளை உயர் மட்டத்திற்குக் கொண்டுவந்து அது தொடர்பில் விடயத்திற்கு நிகரான பயிற்சிகள் மற்றும் வாழ்க்கைத் தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடாத்துதல்.
V. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் விளையாட்டுக்கள் மற்றும் புது வருட வைபவம் 2017.04.28 ஆந் திகதி பத்தரமுல்ல ஜி.எச். புத்ததாச விளையாட்டரங்கில் நடாத்தப்படுதல்.
VI. கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு அங்கவீனமுற்ற இளைஞர் சமுதாயத்திற்கென வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
VII. கொட்டாவ சிறுவர் வழிகாட்டி நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.

## 9.6 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீடு - 2018

| மூலதனம் (ரூ.மி.) | மீண்டுவரும் (ரூ.மி.) |
|---|---|
| 154.88 | 552.78 |

## 9.7 2018.01.01 - 2018.12.31 வரையான செலவு

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் (ரூ.மி.) | 154.88 | 142.54 |
| மீண்டுவரும் (ரூ.மி.) | 552.78 | 521.04 |
| மொத்தம் | 707.66 | 663.58 |

## 9.8 2018.01.01 - 2018.12.31 ஆந் திகதி வரை அமுலாக்கிய கருத்திட்டங்கள்/செயற்பாடுகளின் தகவல்கள்.

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் – இலக்கம்.** 01 | சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட புனர்வாழ்வு தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்) |
| **செயற்பாடுகள்** | 1. அங்கவீனமுற்ற நபர்களுக்கு நேரடிப் பயன்களை வழங்குதல் மற்றும் பின்னூட்டற் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.<br>2. கொமட், நீர், மின்சார வசதிகள் மற்றும் பிரவேசிப்பு வசதிகளை வழங்குதல்.<br>3. பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல்.<br>4. அரச மற்றும் அரச சார்பற்ற வேறு அமைப்புக்களுடன் இணைந்து சேவைத் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்துதல்.<br>5. அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கென முன்னெடுத்துச் செல்லப்படும் திறன் விருத்தி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். |
| **இடங்கள்** | 25 மாவட்டங்கள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | நாடுபூராவும் வாழும் சகல அங்கவீனமுற்ற மக்கள் |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| 2018.12.31 **வரையான செலவு** | ரூ. 14.503 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம்** 02 | அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல். |
| **செயற்பாடுகள்** | 1. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.<br>2. முறைசார் வகையில் பயிற்சியினை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.<br>3. சுய தொழிலுக்கான கருவித் தொகுதிகளினை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைப் பிரிவின் தொழில் வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல். |

| | |
|---|---|
| **இடங்கள்** | ▪ சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – கம்பகா மாவட்டம்.<br>▪ இராகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையம் - கம்பகா மாவட்டம்.<br>▪ அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - கம்பகா மாவட்டம்.<br>▪ வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - கண்டி மாவட்டம்<br>▪ கெட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – கண்டி மாவட்டம்.<br>▪ தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - கம்பாந்தோட்டை மாவட்டம்.<br>▪ களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - இரத்தினபுரி மாவட்டம்.<br>▪ மாதம்பே வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - புத்தளம் மாவட்டம். |
| **இலக்கிடப்பட்ட குழு** | 16-35 வயதிற்கிடைப்பட்ட வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்குத் தகுதியான அங்கவீனமுற்ற இளைஞர் மற்றும் யுவதிகள், |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| 2018.12.31 **வரையான செலவு** | ரூ. 50.78 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் – இல.** 03 | சிறுவர் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டம் |
| **செயற்பாடுகள்** | 1. பிள்ளையின் அங்கவீனத்தினை முற்கூட்டியே இனங்கண்டு அது தொடர்பில் தலையிடும் மிகவும் விளைத்திறனான மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல்.<br>2. அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளை வழங்குதல் தொடர்பில் பல்வேறு களத்துறைகளுக்கான சேவை வலையமைப்பினை வலுவூட்டுதல்.<br>3. விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் முன்பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் உள்வாங்கும் கல்வியினை வலுவூட்டுதல்.<br>4. பெற்றோர்களின் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உளத் தரத்தினை மிகவும் உன்னத நிலைக்குக் கொண்டுவந்து அது தொடர்பில் ஆலோசனை சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.<br>5. கருத்திட்டத்தினை ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல். |
| **இடங்கள்** | பத்திரகொட, வெல வீதி, நாவின்ன - மகரகம சிறுவர் வழிகாட்டி நிலையம். |
| **இலக்கிடப்பட்ட குழு** | 0 – 18 வயது வரை |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| 2018.12.31 **வரையான செலவு** | ரூ. 3.25 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 04** | பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குதல். |
| **செயற்பாடுகள்** | 1. மூளை வளர்ச்சி குன்றிய 100 பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.<br>2. அவர்களினால் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கிடையே ஏற்படும் உடல் மற்றும் உளப் பிரச்சினைகளைக் குறைத்தல்<br>3. குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களின் பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசார மேம்பாடு தொடர்பில் தலையீடு செய்தல். |
| **இடங்கள்** | அவிசாவளை புவக்பிட்டிய ஜயவிரு செவண சிறுவர் இல்லம். |
| **இலக்கிடப்பட்ட குழு** | பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகள். |
| **விளைவு** | மூளை வளர்ச்சி குன்றிய 74 பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை வழங்குதல். |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| **2018.12.31 வரையான செலவு** | ரூ. 5.31 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் - இலக்கம் 05** | விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நிதியம் |
| **செயற்பாடுகள்** | 1. சுய தொழில்களை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளை வழங்குதல்.<br>2. விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் மேம்படுத்துவதற்கு உதவிகளை வழங்குதல்.<br>3. கல்விசார் மற்றும் கலாசார செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல்.<br>4. விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல்.<br>5. உயர் கல்வியினைத் தொடரும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்.<br>6. குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு இலவசமாக கண்வில்லைகளை வழங்குதல்.<br>7. நலன்புரிச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.<br>8. விழிப்புலனற்ற பெண்கள் நலன்புரி நிலையங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.<br>9. நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.<br>10. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவு.<br>11. தேவைப்பாடுகளின் கீழ் நிதியத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறான செலவுகளை ஈடு செய்தல்.<br>12. நடமாடுதல் மற்றும் நெறிப்படுத்துகைப் பயிற்சியினை வழங்குவதற்கு ஆலோசனைக் கொடுப்பனவுகளை வழங்குதல். |
| **இடங்கள்** | சமூக சேவைகள் திணைக்களம் |
| **இலக்கிடப்பட்ட குழு** | விழிப்புலனற்ற நபர்கள் |
| **விளைவு** | கட்புலனற்றோர் சேவை சபையின் 07 ஆலோசகர்கள் தொடர்பிலும் மற்றும் 16 பயிலுனர்கள் தொடர்பிலும் கொடுப்பனவினைச் செய்தல், இலங்கை கட்புலனற்ற பட்டதாரி சபையின் 60 கட்புலனற்ற ஆசிரியர்கள் தொடர்பில் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம், 45 கிரந்தங்களைத் தயாரித்தல், உயர் கல்வியினைத் தொடரும் 22 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு (மாதாந்தம் ரூபா. 2000/- வீதம்), |

| | |
|---|---|
| | பல்கலைக்கழக 101 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவு (மாதாந்தம் ரூபா. 1000/-), பார்வையற்ற பெற்றோர்களின் பார்வையினைக் கொண்ட பிள்ளையொன்றுக்கு மாதாந்தம் ரூபா. 500/- வீதம் 208 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு, க. பொ.த (சா.த) விழிப்புலனற்ற 87 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவு (மாதாந்தம் ரூபா. 750/- வீதம்), பருக கால சஞ்சிகை (பிரெய்ல்) 90 தயாரிக்கப்பட்டு பகிர்ந்தளிப்பதற்கு மாதாந்தம் ரூபா. 13500/- உதவிக் கொடுப்பனவு, 350 விழிப்புலனற்றவர்களின் பங்களிப்புடன் வெள்ளைப் பிரம்பு தினக் கொண்டாட்ட வைபவம் நடாத்தப்படுதல், பல்கலைக்கழக கட்புலனற்ற பட்டதாரிகள் 25 பேருக்கு ரூபா. 26,000/- பெறுமதியான E10 daisy Recorder ஐ வழங்குதல். |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| **2018.12.31 வரையான செலவு** | ரூ.7.33 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் – இல. 06** | Sith Ru – 2018, ஊனமுற்ற குழநதைகள் மற்றும் தேசிய வளையாட்டு விழா ஆகியவற்றின் தேசிய கலாச்சார மற்றும் கலை செயல்திறன் - 2018. |
| **செயற்பாடுகள்** | 1. மாவட்ட மட்டத்தில் 8 போட்டிகளை நடாத்துதல்.<br>2. அங்கவீனமுற்ற நபர்களின் கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள். |
| **இடங்கள்** | 25 மாவட்டங்கள் |
| **இலக்கிடப்பட்ட குழு** | நாடுபூராவும் வாழும் சகல அங்கவீனமுற்ற சமுதாயம். |
| **விளைவு** | அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளை வலுவூட்டுதல். |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| **2018.12.31 வரையான செலவு** | ரூ. 14.54 மி. |

| | |
|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம் – இல. 07** | போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் கருத்திட்டம் |
| **செயற்பாடுகள்** | 1. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழில் இயலுமைகளை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.<br>2. போதைப்பொருளுக்கு அடிமையாகியதன் காரணத்தினால் அவர்களின் குடும்பச் சூழலில் நிகழ்ந்துள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்கு தலையிடுதல்.<br>3. போதைப்பொருள் பாவனையினால் சரிவடைந்த தொழில்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகளை பழைய நிலைக்குக் கொண்டுவவந்து அது தொடர்பில் உரிய பகுதியினருடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.<br>4. கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குழுக்கள் தொடர்பில் போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். |
| **இடங்கள்** | அவிசாவளை, புவக்பிட்டிய, நோர்த் அம்பலம்வத்த ஜயவிரு சமாதி புகலிடம். |
| **இலக்கிடப்பட்ட குழு** | போதைப்பொருளுக்கு அடிமையான 100 பேரினை புனர்வாழ்வளிப்பதற்கு |

| | |
|---|---|
| | சேர்த்துக் கொள்ளுதல். |
| **விளைவு** | 302 பயிலுனர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். |
| **காலவரையறை** | 2018.01.01 – 2018.12.31 |
| 2018.12.31 **வரையான செலவு** | ரூ. 2.97 மி. |